
தமிழர்களின் இதயத் துடிப்பு
குமுதம்
ர் 1 தமிழ் வார இதழ்
₹ 35 (தமிழ்நாடு, புதுச்சேரி)
₹ 40 (மற்ற மாநிலங்களில்)
29.7.2026
குமுதம் இப்போது டிஜிட்டல் வடிவிலும்...
நிறம் மாறும் மனிதர்கள்!
அடையாளம் காட்டுகிறார் ப்ரீத்தி
கரும்பு வேலியும் வெள்ளாடும்!
மேகேதாட்டு அரசியல் யுத்தம்!
'சச் ஏ கிரேட் லேடி!'
எஸ்.ஜானகி பற்றி பாடகர் மனோ
இந்தியாவில் என் வேலை முடிந்துவிட்டது!
கவிப்பேரரசு வைரமுத்து

தமிழர்களின் இதயத் துடிப்பு

குமுதம்

நம்பர் 1 தமிழ் வார இதழ்



குமுதம் டீம்

தமிழுக்கு மூன்றாவது ஞானபீடம் வந்திருக்கிறது. சொல்லப் போனால் ஒரு கவிஞர் முதல் ஞானபீடம் பெற்றிருக்கிறார். டெல்லியிலிருந்து விமானத்தில் இறங்கி வீட்டுக்குள் சென்ற கவிஞரை இடைமறித்துக் கேள்வி கேட்டோம். "குமுதம் கேட்டால் மறுப்பேனா" என்றவர், நேரம் ஒதுக்கிப் பேட்டி கொடுத்தார்.


ஞானபீட விருது பெற்றதில் யாருடைய வாழ்த்தில் பெரிதும் மகிழ்ந்தீர்கள்?

"என் தமிழாசிரியர் உத்தமன் வாழ்த்தில். 'நீ பெறும் ஞானபீட விருதைக் காண்பதற்குத் தானப்பா காலம் என்னை உயிரோடு வைத்திருக்கிறது' என்றார். என்னால் பேசவே முடியவில்லை. அவரே தொடர்ந்தார். 'நீ நோபல் பரிசு பெறுகிற வரைக்கும் நான் உயிரோடு இருப்பேனப்பா'.

"இந்தியாவில் என் வேலை முடிந்துவிட்டது!"

கவிப்பேரரசு வைரமுத்து





நான் நெகிழ்ந்துவிட்டேன். 'நோபல் பரிசு வரலாம்; வராமலும் போகலாம்; அப்படி வந்தால் அதற்குப் பல ஆண்டுகள் ஆகலாம். அதனால் நீங்கள் பல்லாண்டுகள் வாழ்வீர்கள்' என்றேன். வயதான சிரிப்பு வசீகரித்தது என்னை."

வைகையாற்றுப் படுகையும் கிராமத்து மண்ணும் உங்கள் கவிதைக்கு ஆதார சக்திகள். இன்று இந்த அவசர யுகத்தில் அந்த ஆன்மாவை எப்படித் தக்கவைத்துக் கொள்கிறீர்கள்?

"சென்னை எனக்கு மண்ணும் பொன்னும் பெண்ணும் தந்திருக்கலாம். ஆனால், வயிற்றைப் பட்டினிபோட்டு மூளைக்கு விருந்து வைத்தது தாய் கிராமம்தான். புகையே மேகமாகிப்போன இந்த நகரத்தைவிட்டு அடிக்கடி ஊர் செல்கிறேன். 'கள்ளிக் காட்டு இதிகாச'மும் 'கருவாச்சி காவிய'மும் நிகழ்ந்த வெளி களில் நடந்து திரிகிறேன்.

'மேற்குத் தொடர்ச்சி மலை
இளைச்சுப் போகும் -
அந்த மேகாத்து மேல்மூச்சு
வாங்கிப் போகும்
மாசம் ஒருவாட்டி நான்
வடுகபட்டி போகாட்டி
வலது கைநீட்டி நான்
மலையோட பேசாட்டி.' "

நினைத்தீர்களா ஞானபீடம் வருமென்று?





" 'திருத்தி எழுதிய தீர்ப்புகள்' வெளிவந்த 1979-லிருந்து இந்தக் கனவை நான் அடைகாத்தே வந்திருக்கிறேன். இது 47 ஆண்டு காலத் தேடல். ஞானபீடத்துக்காக என் எழுத்தைத் தகுதிப்படுத்திக் கொண்டேன். ஏழை விவசாயி எதிர்பார்க்கும் மழையைப்போல, இன்றில்லாவிட்டாலும் நாளை வருமென்று நம்பிக்கிடந்தேன்."

'பொன்மாலைப் பொழுது' எழுதும் போது இருந்த அதே பதற்றமும் ஈடுபாடும் இப்போதும் இருக்கிறதா?

"முற்றிலும் அற்றுப் போகவில்லை; இன்றும் இருக்கிறது. பொன்மாலைப் பொழுது எழுதும்போது ஆயிரம் பட்டாம்பூச்சிகள் அடிவயிற்றில் பறந்தன. இன்று அந்தப் பதற்றமில்லை; உலையை இறக்கிவைக்கும் வரை ஓர் ஒற்றைப் பானைக்காரிக்கு இருக்கும் பொறுப்பு இருக்கிறது."

இசையின் யுகமாக இல்லாமல் இது இரைச்சலின் யுகமாக ஆகிவிட்டதா? பாட்டு வரிகளை வாசகன் விவாதிக்கும் சூழல் இப்போது குறைந்திருக்கிறதா?

"உண்மை. மூளைக்குச் செல்ல வேண்டிய மொழி காதோடு நின்றுவிடுகிறது. இதயத்தை ஆட்டுவிக்க வேண்டிய பாட்டு உடம்பையும் கால்களையும் மட்டும்

**"நல்லவேளை;
பிரிவு நேர்ந்தது. தமிழ்ப் பாட்டு அதனால் புதிய பரிமாணத்தை நோக்கிப் பயணமானது. ஏ.ஆர்.ரகுமான் என்ற கலைஞனுக்கு இசைவெளி கிடைத்தது. அவரை என்னோடு சேர்த்துவைத்து நான் மூடிவைத்த கனவுகளையெல்லாம் பாடிவைக்கும் வாய்ப்பைக் கொடுத்தது."**

ஆடவைக்கிறது. சில இசையமைப்பாளர்கள் பாடலாசிரியரைப் பார்த்து, 'நல்ல தமிழ் எழுதிவிடப் போகிறீர்கள். ஆங்கிலத்தையும் ஆங்காங்கே சில கெட்ட வார்த்தைகளையும் பயன்படுத்தி ரசிகனை உசுப்பேற்றுங்கள்' என்று வலியுறுத்துவதாக அறிகிறேன். மொழியை விவாகரத்து செய்த இசை இப்போது மொழிக்கும் இசைக்கும் விவாகமே வேண்டாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறது."

இந்த நிலைக்கு என்ன காரணம்?

"திரைக்கதையில் பாட்டுக்கு இடமில்லை என்பது காரணம்; கூட்டுக் குடும்பக் கதைகள் குறைந்தது காரணம்; காதல் வெறும் கலவிக்கான வாசலாகிவிட்டது காரணம்; விழுமியங்கள் செத்துக்கொண்டிருப்பது காரணம்; பாடலைப் படமாக்கப் பல இயக்குநர்களுக்குப் பொறுமை இல்லை என்பது ஒரு காரணம். பாட்டு 5 நிமிடம் தாங்காது, 2 நிமிடம் போதும் என்ற அவநம்பிக்கை ஒரு காரணம்; பெண் என்ற பெரும் பாத்திரம் புறக்கணிக்கப்பட்டதொரு காரணம்; இயக்குநருக்கும் இசையமைப்பாளருக்கும் மொழியறிவு குறைந்திருப்பது ஒரு காரணம்; ரீல்ஸ் மோகத்தில் உள்ள ரசிகன் 30 நொடிகளுக்கு மேல் பொறுமையிழப்பது ஒரு பெருங்காரணம்;



பாடலாசிரியர்களின் மரியாதையைக் குத்திக் கொலை செய்வது ஒரு காரணம்; பெரும் பாடகர்கள் என்று யாரையும் உருவாகவிடாத சதி ஒரு காரணம். இப்படி இன்னும் சொல்லமுடியாத பல காரணங்கள்."

இளையராஜாவைவிட்டு நீங்கள் பிரிந்து வந்த பிறகு, இருவரும் தனித்தனியே சாதித்திருக்கிறீர்கள். பிரிவு நேராமல் இருந்திருந்தால் இன்னும் புதிய பாடல்கள் வந்திருக்குமில்லையா?

"நல்லவேளை; பிரிவு நேர்ந்தது. தமிழ்ப் பாட்டு அதனால் புதிய பரிமாணத்தை நோக்கிப் பயணமானது. ஏ.ஆர். ரகுமான் என்ற கலைஞனுக்கு இசைவெளி கிடைத்தது. அவரை என்னோடு சேர்த்துவைத்து நான் மூடிவைத்த கனவுகளையெல்லாம் பாடிவைக்கும் வாய்ப்பைக் கொடுத்தது. ஏ.ஆர்.ரகுமானின் மரபுகடந்த நவீன வெளிப்பாடு என் சோதனை முயற்சிகளுக்கு ஆசனம் கொடுத்தது; சங்கத் தமிழைத் திரைப்பாட்டில் இறக்கிவைக்கும் சம்மதம் கொடுத்தது. உள்ளூர் இசை உலக இசையானது. ஒரே ஒரு தேசிய விருதோடு வெளிவந்த என்னை, மேலும் ஆறு தேசிய விருதுகள் தேடி வர வைத்தது.

'தங்கமே தமிழுக்கில்லை
தட்டுப்பாடு
ஒரு சரக்கிருக்குது
முறுக்கிருக்குது
மெட்டுப்போடு!

எத்தனை சபைகள்
கண்டோம்,
எத்தனை எத்தனை பகையும்
கண்டோம்
அத்தனையும் கூடம் காட்டிச்
சுட்டுப் போடு'

என்று பிரபஞ்சத்தை நோக்கிப் பிரகடனம் செய்தது.



கலைஞரை ஒரு தனிமையில் கேட்டேன், 'எம்.ஜி.ஆர். பிரிந்ததற்காகவோ அல்லது பிரிக்கப்பட்டதற்காகவோ எப்போதாவது நீங்கள் வருந்தியது உண்டா?'

சற்றே யோசித்துக் கலைஞர் சொன்னார்: 'இல்லை; அது நல்லதாகவே முடிந்தது. எம்.ஜி.ஆர். பிரிந்து செல்லாவிட்டால், அந்த இடத்தில் இன்னோர் இயக்கம் வந்திருக்கலாம். அது திராவிட இயக்கத்துக்கு எதிரான இயக்கமாகக் கூட இருக்கலாம். திராவிடத்தைப் புறக்கணிக்காத எம்.ஜி.ஆர். வந்தது நல்லதுதான்' என்றார்.

இதையே நான் வேறு வார்த்தையில் சொல்கிறேன். இளையராஜாவை நான் பிரியாமல் இருந்திருந்தால் இன்னொரு தளத்தை நான் எட்டியிருக்க மாட்டேன். ஏ.ஆர்.ரகுமான் என்ற புத்தாற்றல் என் கலைப் பயணத்தை நீட்டிக்கச் செய்தது. மூத்தவரோடு இருந்தது 5 ஆண்டுகள்; இளையவரோடு 25 ஆண்டுகள். காலம் தமிழுக்கு நன்மையே செய்திருக்கிறது."

உங்கள் விருது பற்றி சர்ச்சையும்

உண்டானதே... அது குறித்து?

"ஒருமித்த கருத்து எட்டப்பட முடியாது என்பதுதான் இலக்கியத்தின் அழகு. சர்ச்சைகள் உண்டானால் ஒரு சமூகத்தில் பல்வேறு சிந்தனைப் போக்குகள் நிலவி வருகின்றன என்று பொருள். அந்த வகையில் நாம் வாழ்வது உயிர்ப்புள்ள சமூகம்.

இன்று உலகமே போற்றும் இராமலிங்க அடிகளார் எழுதியது அருட்பா அல்ல; மருட்பா என்று ஆறுமுக நாவலர் வழக்காடிய பிறகுதான் அருட்பாவின் மேன்மை அறியப்பட்டது. தனது பாராட்டுக் கூட்டத்தில் வாழ்த்துப்பாப் படிக்கத் தகுதியில்லை என்று உ.வே. சாமிநாத அய்யரால் ஒதுக்கப்பட்ட புலவன்தான் பின்னாளில் மகாகவி என்று அறியப்பட்ட பாரதி. ஞானபீடத்தின் முதல் தேர்வுக் கூட்டத்தில் விருது வழங்கலாம் என்று கணிக்கப்பட்டு, 'இல்லை; இல்லை அவர் தகுதியற்றவர்; பிரசாரக் கவி' என்று ஓர் உறுப்பினரால் தடுக்கப்பட்டவர்தான் பாவேந்தர் பாரதிதாசன். புகழ்பெற்ற இலக்கியங்களைப் பாட்டுக்குள் உரிமையோடு எடுத்தாண்டதால் 'கள்ளதாசன்' என்று இகழப்பட்டவர்தான் பின்னாளில் கவியரசு என்று கொண்டாடப்பட்ட கண்ணதாசன்.

விமர்சனங்கள் என்பவை, ஒரு படைப்பு தங்கமா, பித்தளையா என்று உரசிப்பார்க்கும் உரைகற்கள். அவற்றைப் பொருட்படுத்தக் கூடாது; புறந்தள்ளவும் ஆகாது."

"விமர்சனங்கள் என்பவை, ஒரு படைப்பு தங்கமா, பித்தளையா என்று உரசிப்பார்க்கும் உரைகற்கள். அவற்றைப் பொருட்படுத்தக் கூடாது; புறந்தள்ளவும் ஆகாது."

அடுத்து நோபல் பரிசே உங்கள் இலக்கு என்று பரவலாகப் பேச்சிருக்கிறது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

"அது அத்துணை எளிதல்ல. ஞானபீடம் தமிழ் மொழியை ஒதுக்கி வந்திருக்கிறது என்று சொல்லப்படுவதுபோல, நோபல் பரிசுக் குழு ஆசியாவை ஒதுக்கி வருகிறது. அது வெள்ளை நிறத்தையே பெரிதும் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. அதிலும் அமெரிக்க வெள்ளையா ஐரோப்பிய வெள்ளையா என்பதில் போட்டி இருக்கிறது. ஏழு கடலையும் ஏழு மலையையும் கடந்து பூப்பறிக்கிற கதை அது. ஒன்றுமட்டும் சொல்கிறேன், என் படைப்புகள் நோபல் பரிசின் தரத்திற்குக் குறைந்தவை அல்ல. எனது 'கள்ளிக்காட்டு இதிகாசம்' ஒன்று போதும் உலக இலக்கியத்தின்

எல்லா அளவுகோலையும் தாண்டிநிற்கும்.

நோபல் பரிசுபெற்ற எர்னஸ்ட் ஹெமிங்வே எழுதிய நாவலுக்கு 'The Old man and the Sea' என்று பெயர். நான் எழுதிய கள்ளிக்காட்டு இதிகாசத்துக்கு 'The Old man and the Land' என்று பெயர்சூட்டலாம். கடலும் கிழவனும் வாசித்துவிட்டுக் கள்ளிக்காட்டு இதிகாசத்தைப் படித்துப் பாருங்கள். கள்ளிக்காட்டு இதிகாசத்தில் மனிதப் போராட்டம் மேம்பட்டிருக்கும். எனது கள்ளிக்காட்டு இதிகாசத்தை 'The Saga of Kallikkadu' என்ற பெயரில் Oxford University Press வெளியிட்டிருக்கிறது. புகழ்பெற்ற நாகலட்சுமி சண்முகம் மொழிபெயர்த்திருக்கிறார். இந்தியப் பல்கலைக்கழகங்கள் இதை உலகத்துக்கு உயர்த்திக் காட்ட வேண்டும்; மாட்டார்கள். அதில் அரசியல், மொழி, இனம், நிறம், தேசம் என்ற இருட்டுச் சுவர்கள் இருக்கின்றன; பார்ப்போம்."



தமிழ் எழுத்தாளர்கள் ஞானபீடம் பெறுகிற வாய்ப்பு தொடர்ந்து வருமா?

"வரும்; தமிழ் எழுத்து வாழையடி வாழையாக வளரும். ஆனால், எழுத்தாளர்களின் குழுமனப்பான்மை ஒழிய வேண்டும். ஒரு பத்துப் படைப்பாளிகள் கூடித் தங்கள் பெயர்களைத் தவிர்த்து, ஞானபீடம் பெறத்தக்க சமகாலத் தமிழ்ப் படைப்பாளிகள் யார் யார் என்று ஒரு பட்டியலைத் தயாரிக்க வேண்டும். அதை ஊர்கூடிப் பரிந்துரைக்க வேண்டும். பத்துப் படைப்பாளிகள் கூடித் தங்களைத் தவிர்த்து ஒரு பட்டியலைத் தயாரித்தால் அதன் நகல் ஒன்று எனக்கு வேண்டும். நானும் முன்மொழிவேன்."

இலக்கியத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். அது மத்திய அரசுக்கா? மாநில அரசுக்கா?

"பல்கலைக்கழகத்தில் யாருக்கு ஆர்வம் இருக்கிறதோ அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். உரியவர்களையும் சந்திப்பேன். நல்ல பதில் கிடைத்தால் மகிழ்ச்சியடைவேன். இல்லையேல் அந்தப் பல்கலைக்கழகத்தை நானே கட்டமைப்பேன்."

யாரும் அவ்வளவு சீக்கிரம் எட்டமுடியாத ஞானபீடத்தை எட்டிவிட்டீர்கள்; அடுத்து உங்கள் இலக்கு?

"இந்தியாவில் என் வேலை முடிந்துவிட்டது; அகிலம் மிச்சமிருக்கிறது; சிறகு துடிக்கிறது."

வா(வ்)ட்ஸ்அப் ப்ரோ!

“எங்க வீட்டுல காய்கறி வாங்குனா ஒரு வாரத்துக்கு வெச்சுக்குவோம். நீங்க எப்புடி?”

“ஆங்! நாங்கனாப்ல யாரு... உருளைக்கிழங்கு பழம் தின்னுருக்கியா? அதுவரைக்கும் வெச்சுக்குவோம். போவியா...”



“என்னங்க! பிரியாணி இருக்கு. கேசரி, சாம்பார், ரசம், கொஞ்சம் கேரட் பொரியல், கத்தரிக்காய் புளிக்குழம்பு, தயிர் சாதம், பொறிச்ச மீன் ரெண்டு, கொஞ்சம் கெட்டி சட்னி மூணு இட்லி இருக்கு...?

“என்னம்மா சொல்றே, எதுக்கு இவ்வளவு சமைச்சே?”



“இல்லைங்க, இன்னிக்கு ஃபிரிட்ஜ் கிளீன் பண்ணேன். அதுல இருந்தது... அதான் வேஸ்ட் பண்ண வேணாம்னு...”

“வேலை செய்ற இடத்துல ரொம்ப டார்ச்சர் பண்றாங்க மாமா?”

“என்ன டார்ச்சர் மாப்ள?”

“வேலையை செய்யச் சொல்லி மாமா!”



“வாடகை வீட்டுக்கும் சொந்த வீட்டுக்கும் என்ன வித்தியாசம்?”

“மாதா மாதம் வாடகை கொடுத்தால் வாடகை வீடு சார்... ஒவ்வொரு மாதமும் தவணை கட்டுனா சொந்த வீடு சார்!”



அரசு பதில்கள்

முத்துகணேஷ், தூத்துக்குடி.

யோவ் அரசே, நீர் வகுப்பில் முதலாவது மாணவரா, கடைசியா?

தினமும் பள்ளிக்கு முதல் ஆளாக வந்து, கடைசியாக வெளியேறும் மாணவன்!

வண்ணை கணேசன், சென்னை.

பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்பதற்கு ஓர் உதாரணம்?

கரூரில் விஜய் பேசியதை மனதில் வைத்துக்கொண்டு நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லைதானே!

*** துர்கா, திருப்பூர். (பரிசு ரூ.200)**

சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டுமா?

ஏன், சீசரின் மனைவி மட்டும் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும்? சீசரும் இருக்கலாம் தானே. இங்கே மனைவி என்கிற பதம் எங்கிருந்து வந்தது? மனிதர்கள் அனைவருமே சந்தேகத்துக்கு உட்பட்டவர்கள்தாம்!

ரமேஷ், வெல்லிங்டன், நீலகிரி.

அரசே, பிரேக் அப்புக்கு வள்ளுவர் ஏதேனும் ஆறுதல் சொல்லி இருக்கிறாரா?

ஆறுதல் சொல்லியிருக்கிறாரா என்று தெரியவில்லை. எச்சரிக்கை விடுத்துள்ளார்...

யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

அதாவது, ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்கிறார். ஃபிகர் மீது ஆசை வைக்காமல், ஒதுங்கிச் சென்றால், இந்த பிரேக் அப் மன உளைச்சல் எல்லாம் தேவையில்லை என்பதே இதன் மறை உட்பொருள்!

பா.ஜெயப்பிரகாஷ், அரண்மனைப்புதூர், தேனி.

'கேரளாவில் காங்கிரஸும், கம்யூனிஸ்ட்டும் ஒன்று சேரும்போது, தமிழகத்தில் த.வெ.க-வும் தி.மு.க-வும் ஏன் ஓரணியில் இருக்கக் கூடாது' என்கிறாரே, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் திருமாவளவன்?



இதைத்தான் கூழுக்கும் ஆசை... மீசைக்கும் ஆசை என்பார்கள்!

டி.முருகேசன், கங்களாச்சேரி, திருவாரூர்.

'எடப்பாடி பழனிசாமியை காலி செய்யவே டி.டி.வி.தினகரன் தனிக்கட்சியைத் தொடங்கினார்' என்று அமைச்சர் நிர்மல்குமார் விமர்சித்துள்ளாரே?

ச்சேச்சே... அவ்வளவு மெனக்கெட எல்லாம் தேவையில்லை. எடப்பாடிக்கு யார் உதவியும் தேவையில்லை!

கணேசன், சென்னை.

'வன்னியர் இடஒதுக்கீடு போராட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் வாரிசுகளுக்கு அரசு வேலை தர வேண்டும்' என்கிறாரே, அன்புமணி?


அதிருக்கட்டும், அப்பா - மகன் மோதலில் சண்டையிட்டுக்கொண்டு மண்டை உடைபட்டவர்களுக்கு மீண்டும் கட்சிப் பதவி தருவாரா, அன்புமணி?

ஆர்.கே.லிங்கேசன், கன்னியாகுமரி.

சீமான் - உதயநிதி கைகோப்பார்களா?

இப்போதைக்கு இன்னொரு மூன்றெழுத்து வாரிசுடன் கை

சீமான் - உதயநிதி கை கோப்பார்களா?



கோத்துள்ளார் உதயா. சீமானுடன் கை கோப்பாரா என்பது போகப் போகத்தான் தெரியும்!

கே.ரமேஷ், பள்ளிப்பாளையம்.

தமிழகத்தில் சென்னையும் மதுரையும் கடுமையான வெப்பத்தில் இருக்கின்றன என்று எச்சரித்திருக்கிறதே ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகம்?

எண்ணெய்ச் சட்டியில் இருப்பவனுக்கு ஏசியில் இருப்பவர்கள் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

வா(வ்)ட்ஸ்அப் ப்ரோ!

"தம்பி, இதுதான் உன் வாழ்க்கை... கரும்பு மாதிரி இருக்கும்!"



"அதான் இல்லை... சக்கையா பிழியும்!"

"என்னது...
பேங்க்ல இருந்து ஏற்பாடு பண்ணி தடுப்பூசி வீட்டுக்கே வந்து போடுறீங்களா?
நம்பவே முடியலியே..."

"ஆமா சார்...
நீங்க நிறைய லோன் வாங்கியிருக்கீங்க. நீங்க ஆரோக்கியமா நல்லா இருக்கணும்னு பேங்க் விருப்பப்படுது!"

"ஸ்கூல்ல டீச்சர் அடிச்சா நாங்கள்ளாம் வீட்ல சொல்லமாட்டோம்!"

"ஏன்?"



"ஏன்னா, 'வாத்தியார் அடிக்கிற அளவுக்கு நீ என்ன தப்பு பண்ணே'ன்னு கேட்டு அவங்களும் எங்களத்தான் அடிப்பாங்க!"

நினைச்சது கிடைக்கலேன்னா கெடைச்சதை நினைக்கணும்னு சொல்றாங்களே...



நினைச்ச ஊருக்குப் போக டிரெய்ன்ல டிக்கெட் கிடைக்கலன்னா, டிக்கெட் கிடைச்ச ஊருக்குப் போகணுமா?

“வாட்ஸ்அப் பார்த்துட்டே பக்கத்து பிளாட்டுக்குள்ள போயிட்டேன்...”
“அய்யய்யோ, அப்புறம் என்னாச்சு?”



“ஹஸ்பண்ட் வந்துட்டாருன்னு நினைச்சு அந்த லேடியும் சீரியல் பார்த்துட்டுடே டீ போட்டுக் கொடுத்துட்டு போயிடுச்சு!”

“கடையில எல்லாக் காய்கறியும் பார்த்துப் பார்த்து வாங்கியாச்சு!”
“அப்புறம்..?”
“வேறென்ன... வீட்டுக்குப் போய் திட்டுதான் வாங்கணும்!”



“ஏன்ணே பொண்டாட்டிய பார்த்து பயந்து சாகுறீங்க?”



“நீங்க சிங்கிளா இருக்கோம்னு ஆணவத்துல பேசாதீங்க தம்பி. ஒரு கல்யாணத்த பண்ணிப் பாருங்க, அப்ப தெரியும்...”

மனைவியிடம் மனம்விட்டுப் பேசினால் சண்டையே வராதாம்...



“அடேய்! சண்டை வந்ததே அவகிட்ட மனசுவிட்டுப் பேசுனதாலதான்டா!”

நிறம் மாறும் மனிதர்கள்!

அடையாளம் காட்டுகிறார் ப்ரீத்தி



ம.மோகன்

‘அயோத்தி’ திரைப்படம் கொடுத்த வெற்றியின் அடையாளம்தான் ப்ரீத்தி அஸ்ரானிக்கு தமிழ் சினிமாவில் முதல் பெஞ்ச் வரிசையில் கிடைத்த இடம்! அடுத்தடுத்து எஸ்.ஜே.சூர்யா, விஜய் ஆண்டனி படங்களில் பிஸியாகிவிட்டார். அந்த வரிசையில் அடுத்து ‘நிறம்’ திரைப்படம் ரிலீஸுக்குத் தயாராகி வருகிறது. தமிழ், தெலுங்கு, மலையாளம் என ஓடிக்கொண்டிருக்கும் ப்ரீத்தி அஸ்ரானியின் எக்ஸ்க்ளூசிவ் உரையாடலிலிருந்து...

‘நிறம்’ படத்தில் உங்களின் பங்களிப்பு என்ன?

“மெடிக்கல் க்ரைம், த்ரில்லர் க்ரைம் ஜானர்ல இந்தப் படத்தோட கதையை இயக்குநர் பல்ராம் கிருஷ்ணா சார் சொன்னப்பவே ரொம்பப் பிடிச்சிருந்தது. இதுல கீர்த்தனா என்கிற ஒரு மெடிக்கல் ஸ்டூடன்ட்டா வர்றேன். கதை காலேஜ் பின்னணியில இருந்தாலும், அதுக்குள்ள நிறைய லேயர்ஸ் இருக்கும். மையக்கதை என்னைச் சுத்திதான் நடக்குது. இதுல முகேன், தான்யா ஹோப், நிதின் சத்யா, சுரேகா வாணின்னு ஒரு பெரிய டீமே இருக்கு. இந்தப் படத்துல வர்ற கீர்த்தனா ரோல் மாதிரி ஸ்ட்ராங்கான கேரக்டர்தான் நம்மை அடுத்தடுத்த இடத்துக்குக் கூட்டிட்டுப் போகும்னு நம்புறேன்.”

‘நிறம்’ என்கிற தலைப்புக்கும் நீங்கள் சொல்கிற க்ரைம், த்ரில்லர் கதைக்களத்துக்கும் என்ன தொடர்பு?

“இன்றைய தலைமுறையில் ஒரு சூழ்நிலை எப்படி மனிதர்களை மாற்றிக்கொண்டே இருக்கிறது என்பதன் அடிப்படையில் வைக்கப்பட்ட தலைப்பு இது. மனிதர்களோட குணம், எதிர்கொள்கிற விஷயம், அதை அவங்க தேவைக்கு, சூழ்நிலைக்கு எப்படி மாத்திக்கிறாங்க இதையெல்லாம்தான் படம் பேசும்.”

‘அயோத்தி’ மாதிரி ஒரு வெற்றிப் படம் கொடுத்துவிட்டுப் புது முகங்களோடும் இணைகிறீர்களே?

“நான் எப்பவுமே ஜூஸியா படம் பண்ற டைப். ‘அயோத்தி’ கதையை இயக்குநர் மந்திரமூர்த்தி சொன்னப்பவும் அந்த ஸ்டோரில என் கேரக்டர் என்ன பண்ணுதுங்கிற

கவனம் மட்டும்தான் எனக்கு இருந்துச்சு. '29'லயும் அப்படித்தான். இங்கே ஸ்டோரிதான் ஹீரோ! ரசிகர்களே இப்போ சின்ன பட்ஜெட் படம், பெரிய பட்ஜெட் படம்னெல்லாம் பார்க்கிற தில்லையே! கன்டென்ட் நல்லா இருந்தா ஹிட்டாக்கிடுறாங்க."

மல்டி லாங்குவேஜ் ஏரியாவுக்குள் பயணிக்கும்போது அந்தந்த மொழி, கதைக்களம், கதாபாத்திரங்களின் குணாதிசயம் இதையெல்லாம் உள்வாங்கி நடிப்பது எளிதாக இருக்கிறதா?

"தமிழ்ல நடிக்க வர்றதுக்கு முன்னாடியே தமிழ் பேசக் கத்துக்கிட்டேன். தமிழ் மாதிரி ஓர் அழகான மொழியைப் பேசுறோம்கிறதே எனக்கு அவ்ளோ சந்தோஷம். அதே போல மலையாளத்துல 'பல்டி'ன்னு ஒரு படம். டைரக்டர்கிட்ட கொஞ்சம் டைம் கேட்டு மலையாள மொழியைக் கத்துட்டு வந்து நடிச்சேன். மொழியில தெளிவா இருந்தா ஆக்டிங்ல எமோஷனலா ஈஸியா கனெக்ட் பண்ணிக்க முடியும்கிறது என் அபிப்ராயம்."



உங்களோட தாய்மொழி தெலுங்குதானே?

"பிறந்து வளர்ந்ததுதான் தெலுங்கு தேசம். குஜராத் 'சிந்தி'தான் என் தாய்மொழி. நம்ம அஜித் சார், நடிகை தமன்னா, இந்தியில் கலக்குற ரன்வீர்சிங் எல்லாருமே சிந்திதான்!

சீனியர் இயக்குநர், நடிகர் எஸ்.ஜே. சூர்யாவோட 'கில்லர்' படத்துல நடிக்கிறீங்க. அவரோட வொர்க்கிங் ஸ்டைல் எப்படி?

"எஸ்.ஜே.சூர்யா ஒரு பிரில்லியன்ட் ஆக்டர் கம் டைரக்டர். 'கில்லர்' பட ஷூட் போகும் போதெல்லாம் மாஸ்டர் கிளாஸுக்குப் போற மாதிரிதான் இருக்கு. தினம் தினம் ஏதாவது ஒரு விஷயம் அவர்கிட்ட கத்துக்கலாம். அதுலயும் லீட் கேரக்டர் பண்றேன். விஜய் ஆண்டனி சாரோட 'அப்பா குட்டி' ஷூட் முடிந்தது. அந்த ரோலும் பேசப்படும். இப்போ அடுத்தடுத்து தமிழ்ல புராஜெக்ட் போய்க்கிட்டிருப்பதால சென்னை எனக்கு செகண்ட் ஹோம் ஆகிடுச்சு!"

குமுதம் விமர்சனக் குழு



எழுத்தறிவித்தவன் இறைவன்... ஒரு கலெக்டர் எப்படி இறைவன் ஆகிறார் என்பதுதான் கதை. மிகச்சிறிய மலைவாழ் கிராம மக்கள் அன்றாட வாழ்க்கையில் படும் சிரமங்களை... அரசு மற்றும் அதிகாரிகளால் அவர்கள் சந்திக்கும் துயரங்களை... தங்கள் வாழ்விடங்களை, வாழ்வியலை அவர்கள் இழந்து நிற்பதை... மனதைத் தொடும்படி, பார்ப்பவர்களின் சிந்தனையைத் தூண்டும்படி அழகாகச் சொல்லியிருக்கிறார் இயக்குநர் கணேஷ் விநாயகன்.

நீண்ட நாட்களுக்குப் பின் சூழலுக்கும், பாத்திரங்களின் உணர்வுகளுக்கும் ஏற்ப இசையமைத்திருக்கிறார் இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ். காடு, மலை, அருவி என கேமராவிற்குள் அடக்கமுடியாததைக்கூட திரையில் பசுமையாகப் பதிவு செய்திருக்கிறார் ஒளிப்பதிவாளர் எம்.சுகுமார். லாரன்ஸ் கிஷோரின் எடிட்டிங், லால்குடி இளையராஜாவின் கலை, அழகும் நுட்பமும் நிறைந்தது.

கலெக்டராக வரும் அருள்நிதி, அதிகாரம் அன்புள்ளம் கொண்டவர்களிடம் இருந்தால் எவ்வளவு மேன்மையாக இருக்கும் என்பதைத் தன் அற்புதமான நடிப்பால் உணரவைத்திருக்கிறார். மலைவாசி இளைஞனாக வரும் ஆரவ் நடிப்பிலும், கட்டுடல் தேகத்திலும் அடுத்த சூர்யா என்பதை நிரூபிக்கிறார். தன் கிராமத்துக்குப் பள்ளியை வரவழைத்து, படித்துக் கலெக்டராகும் சிறுமி கிருத்திகா தான் கதையின் நாயகி. நடிப்பிலும் நட்சத்திரம்! காளி வெங்கட், விடிவி கணேஷ் கச்சிதம்.

அந்தக் காளான் சமாசாரம் படத்தோடு ஒட்டவில்லை. படித்தால் கலெக்டருக்கும், டாக்டருக்கும்தான் படிப்பேன் என்பது, படிப்பறிவில்லாதவர்களைப் பொதுஅறிவில்லாத முட்டாள்களாகச் சித்திரிப்பது, அதிகாரிகளை ரவுடிகளாகக் காட்டுவது போன்ற வழக்கமான மசாலாத்தனங்களைத் தவிர்த்திருக்கலாம்.

'அருள்வான்' – இதயத்தைத் தொடுகிறான்!

குமுதம் ரேட்டிங்

அபத்தம்	சுமார்	ஓகே	நன்று	சூப்பர்
●	●	✔	○	○

பாடகர் மனோ

'சச் ஏ கிரேட் லேடி!'



1980 **எம்.எஸ்.வி. அய்யா கிட்ட உதவியாளராக வேலைக்குச் சேர்ந்து ஐந்தாறு மாதங்கள் இருக்கும்... அன்னிக்கு என்னவோ தெரியல, ஸ்டுடியோவுக்கு வந்த ஜானகி அம்மாகிட்ட, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தெலுங்குல 'நமஸ்காரம் அம்மா !'ன்னு பேசிட்டேன்.**

முதன்முறையா நான் பேசின வார்த்தை அதுதான். 'கண்ணா! உன்னை ஸ்டுடியோவுக்குள்ளே பார்த்தேனே! இங்கே என்னவா இருக்கே?'ன்னு அன்போடு கேட்டாங்க. 'நான் பிறந்த மண் தெலுங்காக இருந்தாலும், இங்கே சென்னையில எம்.எஸ்.வி. அய்யாகிட்ட அசிஸ்டென்ட்டா இருக்கேன்!'ன்னு சொன்னேன். 'சின்ன பையனா இருக்கே. இந்த வயசுலேயே வேலையை நல்லா கத்துக்கோ!'ன்னு தாயன்போடு புத்திமதி சொல்லிட்டுப் போனாங்க. அப்படித்தான் நாற்பத்தாறு ஆண்டு களுக்கு முன்பு ஜானகி அம்மாவோடு எனக்கு அறிமுகம் அமைஞ்சுது.

ஒருகட்டத்துல நான் பைலட் சிங்கரா மாறினேன். ட்ராக்ல நான் பாடின பல பாடல்களை ஜானகி அம்மா கேட்டுட்டு சக்ரவர்த்தி சார் உட்பட பல இசையமைப்பாளர்கள்கிட்ட, 'அந்தப்



பையன் நல்லா பாடுறான். அவனுக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்க!'ன்னு சிபாரிசு செய்வாங்க. அவங்க எனக்காக அப்படிக் கேட்பது ஒவ்வொரு முறையும் வேறு யாரோ சொல்லித்தான் எனக்குத் தெரிய வரும். அப்படி ஓர் அற்புதமான தாய் அவங்க. யாருக்கும் ஏதாவது கஷ்டம்னா, தன்னால முடிஞ்ச உதவியைச் செய்வாங்க.

மகனுக்காக கரியரைத் துறந்தவர்!

நான் ஒரு மகன் மாதிரி அவங்க வீட்டுக்குப் போவேன், வருவேன். கணவர் ராமகிருஷ்ணன் சார் இறந்த பிறகு, மகன் முரளிதான் அவங்களோட மிகப் பெரிய ஆறுதலாக இருந்தார். 2008 சமயத்துல சென்னையில இருந்து ஹைதராபாத்துக்கு ஷிஃப்ட் ஆனாங்க. அங்கேயே வீடு வாங்கி செட்டில் ஆகிட்டாங்க. அதன்பிறகு அப்பப்போ இங்கே வர்ற சூழல் அமைஞ்சது. அவங்க அலைச்சலைப் பார்த்துப் பையன் முரளி, 'போறும்மா பாடினது. இனிமே ஓய்வெடுத்து ரிலாக்ஸ் பண்ணிக்கோங்க!'ன்னு சொன்னார். அவ்ளோ பிஸியாக இருந்த பாடகி தன் பையன் சொன்ன அந்த ஒற்றை வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, இனிமே பாடுவதில்லைன்னு முடிவுக்கு வந்துட்டாங்க. 'பத்மவிபூஷண் வேண்டாம்' என மகன் முரளி சொன்னப்போ, அதையும் மகனுக்காக மறுத்தவங்க ஜானகி அம்மா. அப்படிப் பாசம் வைத்த மகனைக் கடந்த ஏழு மாசத்துக்கு முன்னால் பறிகொடுத்தப்போ துடிச்சுப் போய்ட்டாங்க. அந்த வலியிலேர்ந்து அவங்களால மீளவே முடியலை. அதன்பிறகு, பேத்தியோடு மைசூரில் தங்கினாங்க. வாரம் ஒருமுறை அவங்களோடு போன்ல பேசிடுவேன். அப்பெல்லாம் ஓ.பி.நய்யார், சலீல் சௌத்ரி, சங்கர் ஸ்ரீ கிருஷ்ணன் போன்ற ஜாம்பவான்கள் பத்தியெல்லாம் பேசுவாங்க. பெங்காலி, ஒரியா மொழிகளில் தான் பாடிய பாடல் அனுபவங்களைச் சொல்வாங்க. இப்படி நிறையப் பேசுவோம்!

> **இசைஞானி இளையராஜா சார், அம்மாவுக்கு எப்பவுமே தனி மரியாதை கொடுப்பார். அவங்க 'ராஜா' என்று அழைக்கிற பேச்சுத் தொனிக்கும், இசைஞானி 'அம்மா' என்கிற நெகிழ்வுக்கும் இடையில் அப்படி ஒரு பரஸ்பர அன்பு இழையோடும்.**

ரசிகர்கள் வீட்டில் தங்கும் அன்பு!

ஜானகியம்மா பத்தி இன்னொரு முக்கியமான விஷயம் சொல்லணும். பின்னணி பாடுவதிலேர்ந்து பிரேக்

எடுத்துக்கிட்ட பிறகு, ரசிகர்கள் வீட்டில் தங்குவதை விருப்ப மாக்கிக்கிட்டாங்க. சென்னை, ஹைதராபாத், ராஜமுந்திரி, பெங்களூரு, விசாகப்பட்டினம்னு அன்போடு அழைக்கும் ரசிகர்கள் வீட்டுக்கெல்லாம் போய் இரண்டு, மூன்று நாட்கள் தங்கிடுவாங்க. அவங்க வீட்லயே குடும்ப நபர் போலப் பழகுறது, சாப்பிடுறது, புகைப்படம் எடுத்துக்குறதுன்னு பிஸியா இருப்பாங்க. ‘எங்க வீட்டுக்கு வாங்கம்மா. என் மனைவி உங்களைப் பார்க்கணும்கிறாங்க!’ன்னு நானும் ஒரு விண்ணப்பம் போட்டு வெச்சேன். டைரியைப் பார்த்துட்டு ‘அஞ்சு மாசம் புக் பண்ணி வெச்சிருக்கேன்ப்பா. அதுக்கப்புறம் வரேன்’னு சொன்னாங்க. ஆனா, மகன் மறைவுக்குப் பிறகு அந்த வழக்கத்தை அவங்களால தொடர முடியலை.

அம்மா என்றழைக்கும் இசைஞானி!

இசைஞானி இளையராஜா சார், அம்மாவுக்கு எப்பவுமே தனி மரியாதை கொடுப்பார். அவங்க ‘ராஜா’ என்று அழைக்கிற பேச்சுத் தொனிக்கும், இசைஞானி ‘அம்மா’ என்கிற நெகிழ்வுக்கும் இடையில் அப்படி ஒரு பரஸ்பர அன்பு இழையோடும்.

அறுபது ஆண்டுகளுக்கும் மேலான இசைப் பயணம், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம்,



பெங்காலி, உருது, படுகானு பதினேழு மொழிகளில் பங்களிப்பு, எந்த நாட்டுக்குப் போனாலும் அவருக்காகத் திரளும் ரசிகர்கள் என அவங்க சாதனையை அடுக்கிக் கொண்டே போகலாம்.

அவங்களோட மறைவுக்குச் சில நாட்களுக்கு முன்புதான் வைரல் ஃபீவர் வந்தது. மருத்துவமனை போய்ட்டுத் திரும்பினாங்க. திரும்ப திடீர்னு உடல்நலமில்லாமல் மருத்துவமனை போக, அங்கே ஸ்ட்ரோக் மாதிரி வந்து, உயிர் பிரிந்தது. ஒரு நிறைவான வாழ்க்கை வாழ்ந்து இப்போ கடவுள் சித்தமா கிட்டாங்க ஜானகியம்மா! சச் ஏ கிரேட் லேடி!

தொகுப்பு: ம.மோகன்



நிர்மலாஜியின் ஆலோசனைப்படிதான் விஜய் நடக்கிறார்..?

யூத்துகளுக்கு ஏன் திடீர்னு அரசியல்ல ஆர்வம்..? ஞானம் பிறக்குமோ, முளைக்குமோ தெரியாது... கரப்ஸுக்கு மூன்றாவது கண், ஏழாவது அறிவு, பத்தாவது கிரகம் வேலை செய்ய ஆரம்பித்தது ராத்திரி ஏழரை டு ஒன்பது அண்ணாநகர் டவர் பார்க்குலதான்..! 'பசங்களுக்குப் பிடிச்ச ஃபைட்டு, டான்ஸ், காமெடி மூணும் இப்ப இருக்குற அரசியல்லதான் கொட்டிக் கிடக்குது; அதான் கெட்டியா பிடிச்சிட்டாங்க..!' நல்ல வேளை, கரப்ஸோட மைண்ட் வாய்ஸ் யாருக்கும் கேட்கல.

'ஜனநாயகன்' படம் 23-ம் தேதி வெளியீடு என்று அறிவித்து

இருக்கிறார்கள். பட போஸ்டரில் முதல்வர் விஜய் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். 'மாண்புமிகு ஜோசப் விஜய்' நடிக்கும் என்று டைட்டில் கார்டு போட இருக்கிறார் கள். முதல்வர் பதவியைத் தவறாகப் பயன்படுத்துகிறார் என்று பெரிய அளவு பிரச்னை பண்ணலாமா என்று தி.மு.க. யோசிக்கிறது.

அமைதி, தியானம், யோசனை, ஆழ்ந்த நித்திரை... இனிமேல் இதுதான் எதிர்க்கட்சி அரசியல்... குளிச்ச பின்பும் கரப்ஸூக்குக் கொட்டாவி வருவதைத் தடுக்க முடியவில்லை!

விஜிலென்ஸ் இயக்குநர் பதவிக்கு ஜான் ஆரோக்கியசாமி, ஆதவ் அர்ஜுனா சிபாரிசின் பேரில் அருண் ஐ.பி.எஸ். நியமனம் செய்யப்பட்டபோதே முதல்வருக்கு சந்தேகமாம். குறிப்பாக, எ.வ.வேலுவுக்கு விஜிலென்ஸ், சில தகவல்களைக் கசியவிட்டு உஷார்படுத்தியது என்பதைத் தனது ரகசிய சோர்ஸ் மூலம் தெரிந்து கொண்ட முதல்வர் அருணை காவல் பயிற்சிப் பள்ளிக்கு மாற்றினாராம். இந்த விஷயம் அரசாணை வந்த பிறகுதான் ஜான் ஆரோக்கியசாமி, ஆதவ் அர்ஜுனா இருவருக்குமே தெரியுமாம்.

ரெண்டு சொம்பு பாலை மிச்சம் வைக்காம குடிச்சிட்டு குப்புற அடிச்சுத் தூங்குனா இப்படித்தான்... பூச்சியாருக்கு பிடிச்சதெல்லாம் ஃப்ரூட் சாலட்தான்!

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விஜய்யின் தொடர்பு எல்லையில் இருக்கிறார் என்கிறது டெல்லி வட்டாரம். தி.மு.க-வுக்கு எதிரான எல்லா நடவடிக்கைகளும் நிர்மலாஜியின் ஆலோசனைப்படிதான் நடக்கிற தாம். துணைவேந்தர் பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க ஐந்து பேர் கொண்ட குழு என்று சட்டசபையில் தீர்மானம் கொண்டுவர யோசனை சொன்னதும் மேடம்தான் என்கிறார்கள்.

குடுமி யார் கையில இருந்தா என்ன, கஜானா சாவி நம்ம இடுப்புல இருந்தா போதாதா? கரப்ஸூக்கும் பர்சனல் லோன் கொடுத்தா கால்லகூட விழுவாரு..!



அண்ணாமலை நடத்திய போதை ஒழிப்பு மாநாடு, அரசியல் ஸ்டைலில் இல்லை... அது ஏதோ

போதைப் பழக்கத்திலிருந்து மீட்டு வந்த மறுவாழ்வு ஆய்வுக்கூட்டம் போல்தான் இருந்தது என்று கருத்து சொல்கிறார்கள் மூத்த பா.ஜ.க. தலைவர்கள். அதற்கேற்றாற் போல் போதை ஒழிப்பு பற்றி அவர் பேசும்போது வந்திருந்த மக்கள் சிலர் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும் காட்டுகிறார்கள்.

அரசியல்ல பொழப்பு நடக்கணும்னா மிமிக்ரி, மேஜிக்னு எதையாவது கத்துக்கிட்டு வந்தாவது வித்தை காட்டினாலும் காட்டுவார்கள். மக்களுக்கு அரசியல் பொழுதுபோக்கு, பூச்சியாருக்கு பொறுப்பு... என்னத்த சொல்ல..!





'யாராவது லஞ்சம் கேட்டால் கொடுக்க முடியாது என்று தைரியமாகச் சொல்லுங்கள். மிஞ்சிக் கேட்டால் என் பேரைச் சொல்லுங்கள்' என்ற முதல்வரின் கரூர் உரை லஞ்ச ஒழிப்புத் துறைக்கு இன்னும் ஊக்கம் ஆகிவிட்டது. இதனால் அரசுத் துறைகளில் சோதனை என்ற பெயரில் 30 லட்சம் 40 லட்சம் என்று கைப்பற்றி தினந்தோறும் அரசு கஜானாவை நிரப்புகிறார்கள்.

மழைத் தண்ணியக் கடல்ல விட்டுட்டுக் கழிவுநீரைச் சுத்தம்பண்ணிக் குடிக்கலாம்னு சொல்றவந்தான் நம்மூர்ல அறிவாளி. கரப்ஸும் ஊரைச் சுத்தம் பண்ணதான் உழைக்கிறார்... யார் நம்பறாங்க...?

கிட்டத்தட்ட வாரம் ஒரு முறை கம்யூனிஸ்ட் தலைவர்கள் முதல்வர் சந்திப்பு நடக்கிறது. இந்த வாரம் சந்தித்த பெ.சண்முகம் கோயில் நிலத்தைப் பட்டா போட்டுத் தந்ததற்கு நன்றி சொல்லப் போனேன் என்கிறார். இது போன்ற நிறைய மானியம் நிலங்கள் கோயில் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அவற்றையும் அதை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு மாற்றித் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தேன் என்று சொல்லி இருக்கிறார்.

கம்யூனிஸ்டுகள் கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளை யாருக்கு உடைப்பதே பெரிய புரட்சிதான்..! பூச்சியாருக்குப் பிடிக்காத வார்த்தைகள் புரட்சி, மாற்றம், புதுமை... பழைய சோறு, ஊறுகாய் அதான் பாதுகாப்பு!

ஒரு பக்கக் கதை

இனிமே நான்...

ப்ரணா

இன்று ஸ்வாதிக்கு ஹெச்.ஆர். மீட்டிங் உண்டு என்றதும், பகீரென்றது. காரணம், ஹெச்.ஆர். மீட்டிங் என்றாலே, யாரையாவது கல்தா கொடுத்து வீட்டுக்கு அனுப்பப் போகிறார்கள் என்றுதான் அர்த்தம். இன்று என்னையோ?!

மறுகணம், 'சேச்சே! அப்படியெல்லாம் ஒன்றும் இருக்காது. கடந்த ஆறு வருடமாக நான் ஒரு டாப் பெர்ஃபார்மர். புராஜெக்ட்டுக்காக இரு முறை யு.எஸ். சென்று வந்தவள். கர்ப்பமானால் மெட்டர்னிட்டி விடுப்பு எடுக்க வேண்டி வருமோ, புராஜெக்ட் பாதிக்கப்படுமோ என்று, கணவனும் குடும்பத்தாரும் ரொம்பவும் ஆசைப்பட்டும்கூட, பிள்ளை பெறுவதையே தள்ளிப் போட்டவள். என்னை வேலையை விட்டுத் தூக்கக் காரணமே இல்லை' என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொண்டு ஹெச்.ஆர். மேனேஜரின் அறைக்குள் நுழைந்தாள்.

"வாங்க, உட்காருங்க மிஸஸ்.ஸ்வாதி, இதைச் சொல்லச் சங்கடமாத்தான் இருக்கு. ஆனாலும், எனக்கு வேற வழியில்லே! நாளைலேர்ந்து நீங்க வேலையிலேர்ந்து டெர்மினேட் ஆகறீங்க. ரெண்டு மாச சம்பளம் உங்களுக்கு வரும். மெயின் ஆபீஸில் போய் உங்க ரிலீவிங் லெட்டரை வாங்கிக்கலாம்!" – நிதானமாகச் சொன்னார் ஹெச்.ஆர். மேனேஜர்.

ஸ்வாதி உள்ளுக்குள் உடைந்துபோனாள். கண்கள் கலங்கத் தொடங்கின. ஒரு நிமிடம்தான். சுதாரித்தாள். மூச்சை இழுத்து விட்டாள்.

"உங்க கஷ்டம் எனக்குப் புரியுது. ஆனா, இதை நாங்க ஏன்..." என்று ஹெச்.ஆர்.எம். ஏதோ சொல்லத் தொடங்கியதுமே, ஸ்வாதி குறுக்கிட்டுச் சொன்னாள்...

"இல்ல சார், நீங்க காரணம் எதுவும் சொல்ல வேணாம். எனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. இதுவரை இங்கே எனக்குக் கொடுத்த நல்ல ஆப்பர்சூனிட்டிக்கு நன்றி!" என்று விடைபெற்று வெளியே வந்தாள்.

'ஹப்பா... இனிமே சந்தோஷமா நான் குழந்தை பெத்துக்கலாம்!'



OnePageStory@Kumudam.com

மோகன் நவாஸ் எஸ்.பி. (பணி நிறைவு)



"க

ணவனுக்குக் கஞ்சி கொடுத்தாகிவிட்டதா?" என்று கேட்ட பசுவம்மாளை ஆதரவாகப் பார்த்த மூதாட்டி, "கொடுத்தாச்சு, கொடுத்தாச்சு... நீ குடி!" என்றார் சின்னச் சிரிப்புடன்.

வெளியே கிளம்பத் தயாரான மீசைக்கோணூரானிடம் அவரது நண்பர்கள், "ஒந்துமே அஞ்சவானா... நாமு பாத்துக்குங்கேமு" (எதற்கும் அஞ்ச வேண்டாம். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்) என்றார்கள். 'முதலில் கஞ்சியைக் குடியுங்கள்' என்று சூடான அரிசிக் கஞ்சியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். பின்பு அங்கு சுற்றியிருந்த சில இளைஞர்களைப் பார்த்து கண்களால் ஏதோ ஜாடை செய்தார்கள்.

மறு விநாடி அங்கிருந்த இளைஞர்கள் ஐந்தாறு பேரும் காணாமல்


13
ஆபத்து
நெருங்குகிறது!

போனார்கள. மீசைக்கோணூரரானின் நண்பர்கள் அருகில் வந்து, "நீ எதுக்கும் யோசன பண்ணாதே. எந்தத் தகவலும் வெளிய போகாது. யாரும் உள்ளே வரவும் மாட்டாங்க" என்றார்கள்.

வெளியில் போன இளைஞர்கள், கிராமத்தின் நாலாத் திசைகளிலும் சென்று, உயரமான மரங்களின் மீதும்... யானைகள், காட்டெருமைகள், பன்றிகள் போன்ற மிருகங்களிடம் இருந்து விளைபயிர்களைப் பாதுகாப்பதற்காக மரங்களில் அமைக்கப்பட்டிருந்த பரண்களின் மீதும் ஏறினார்கள். காட்டுக்குள்ளிருந்தோ, அதை ஒட்டிய பாதையிலிருந்தோ யாராவது வருகிறார்களா என்று கண்காணிக்கத் தொடங்கினார்கள்.

நெருங்கிய நண்பர் ஒருவர் மீசைக் கோணூரரானின் அருகில் அமர்ந்து கொண்டு, "என்னய்யா... காட்டுக்குள்ள ஏதாவது விசேஷமா?" என்று கேட்டார். மீசைக்கோணூரரான் அவரிடம், "ஒண்ணு



மில்லப்பா, பசுவம்மாளை ஏதோ பூச்சி கடிச்சிருச்சு. நடக்க முடியல. அதான் இங்க கூட்டிட்டு வந்தேன்" என்றார்.

"அதிகாலைல மேற்கே வேட்டுச்சத்தம் கேட்டுதே, ஆனை வேட்டு மாதிரிதான் தெரிஞ்சுது. ஒருவேளை வீரப்பனா இருக்குமோ...'' என்றார் நண்பர்.

"நானும் கேட்டேன். தொட்டபெட்டா பக்கம் கேட்டுச்சு. யாருன்னு தெரியல. பசுவம்மாளுக்கு உடம்பு சரி யில்லாததால வந்துட்டேன். இந்நேரம் கெத்தேசால் ஒடையன் அழியா (மருமகன்) ஆளுக போய்ப் பார்த்துட்டு ஐயாட்ட (என்னைத்தான் அவர் இங்கே சொல்லியிருக்கிறார்) என்ன விவரமுன்னு சொல்லி யிருப்பாங்க" என்றார்.

இந்த இடத்தில் தமிழின் பழைமையும், எங்கும் வேரூன்றிப் பரவிக்கிடக்கும் அதன் தொன்மையும் நமக்குப் பெருமிதத்தைக் கொடுக்கிறது. தமிழக-கன்னடப் பழங்குடி மக்களின் பாஷையில் அக்கா, தங்கச்சி மகன்களையும்... பெண் கொடுத்த மருமகனையும் அழியா (அளியன்) என்றழைப்பார்கள். அதுபோல, கேரள மாநில மக்கள் அக்கா,

தங்கையின் கணவர்களை 'அழியான்' என்றும், அத்தை மகன்களை, மனைவியின் தம்பியை 'அழியன்' என்றும் அழைக்கிறார்கள். நாம் இப்பதத்தை உபயோகிப்பது இல்லை என்றாலும், சங்க இலக்கியங்களில் 'அளியன்' என்ற சொற்பதம் வருகிறது. 'அழியன்' என்றால் அன்பு மிக்கவர், பாதுகாப்பிற்குரியவர் என்று அர்த்தம். நம் தங்கையின் கணவரிடம் அன்போடு இருப்பது குடும்ப உறவு சுமுகமாக இருக்க அவசியம் என்பதாலேயே 'அளியன்' என்கிறார்கள்.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வாழும் பழங்குடி மக்கள் அவர்கள் வாழும் பகுதிகளின் அண்டை மாநில வார்த்தைகளைத் தமிழுடன் கலந்து பேசுவதை இன்றும் நாம் காணலாம். அதில் தமிழே ஓங்கி நிற்கிறது. இதன் மூலம் மலை ஏறி மறுகரை இறங்கிய தமிழ் மருவியது என்பதும் தெளிவாகிறது.

இங்கே பார்டர்தொட்டியில் பாதுகாப்பும் ஆதரவும் இருந்தாலும் மீசைக்கோணூரானுக்கு இருப்புக் கொள்ளவில்லை. வீரப்பனைப் பார்த்ததையும் எதிர்பாராத சந்தர்ப்பங்களாலும் சூழ்நிலையாலும் வீரப்பனைத் தவறவிட்ட சம்பவத்தையும் என்னிடம் உடனே தெரிவிக்க வேண்டும் என்பதும், வீரப்பன் கும்பல் வேறு திசைகளில் வெகு தூரம் செல்வதற்கு முன் எனக்குத் தகவல் கொடுத்துவிட வேண்டும் என்பதும்தான் அந்தத் தவிப்புக்குக் காரணம். மேலும், பெண்களுடன் தனியாக மருத்துவக் கவனிப்பில் இருக்கும் பசுவம்மாள் உணர்வு பெற்றதும், எங்கே தாங்கள் வீரப்பனைப் பார்த்ததை உளறிவிடுவாரோ என்ற அச்சமும் அவருக்கு இருந்தது.

“ வெளியில் போன இளைஞர்கள், கிராமத்தின் நாலாத் திசைகளிலும் சென்று, மரங்களில் அமைக்கப்பட்டிருந்த பரண்களின் மீது ஏறினார்கள். காட்டுக்குள்ளிருந்தோ, அதை ஒட்டிய பாதையிலிருந்தோ யாராவது வருகிறார்களா என்று கண்காணிக்கத் தொடங்கினார்கள். ”

உடனே எழுந்து, மனைவி பசுவம்மாள் இருந்த குடிசையைத் தேடிச் சென்றார், மீசைக்கோணூரான். குடிசைக்கு முன் நின்றுகொண்டு 'உள்ளே வரலாமா?' என்று குரல்

இளமை, புதுமை
எதிலும் முதன்மை

குமுதத் தலைவர் மற்றும் பதிப்பாளர்
பா. வரதராசன்

ஆசிரியர்
கே. அசோகன்

துணை ஆசிரியர்
இளையரவி

தலைமை வடிவமைப்பு
தி. குமரன்

புகைப்பட கலைஞர்
கே. கஸ்தூரி

பிழை திருத்துநர்
ஜி. குமரேசன்

குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட், பழைய எண்.151 புதிய எண்.306, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10ல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

கதை, கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி:
தபால் பெட்டி எண் : 2592,
சென்னை 600 031.
சந்தா பிரிவு : +91 98409 09525
விளம்பர பிரிவு : +91 73054 35698
ஆசிரியர் குழு வாட்ஸ்அப் சாட் : +91 89259 58684
இ-மெயில் : edtl@kumudam.com

கொடுத்தார். உள்ளேயிருந்து வெளியே வந்து எட்டிப் பார்த்த ஒரு பெண்மணி, மீசைக்கோணூரானைப் பார்த்து லேசாகப் புன்முறுவல் பூத்தார். அதைப் பார்த்ததும் மீசைக்கோணூரானுக்கு ஒரு நிம்மதி, பசுவம்மாள் தேறிவிட்டார் என்று! மீசைக்கோணூரானுக்கு முறைப்பெண்களாகக் கூடிய மூன்று பெண்கள் வெட்கத்துடன் வலது கையால் முகத்தை மறைத்துக்கொண்டு, குனிந்துகொண்டே வெளியே சென்றுவிட்டார்கள். பாவாவைப் (முறைமாமன்) பார்த்த வெட்கம் அவர்களுக்கு!

உள்ளே சென்ற மீசைக் கோணூரான், பசுவம்மாள் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்ததைப் பார்த்தார். பசுவம்மாள் இப்போது சற்றுத் தெம்பாக இருந்தார். ஆனால், அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபோது, இருவரது கண்களும் கேட்ட ஒரே கேள்வி, 'வீரப்பனைப் பார்த்ததை நீ உளறிட்டியா, நீ சொல்லிட்டியா?' என்பதுதான். இருவரும் பேசவில்லை; ஆனால், பேசினார்கள். உண்மையிலேயே இது ஓர் அதிசயம்தான். கருத்தொருமித்து வாழும் கணவன்-மனைவி பேசிக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. இருவருக்குமிடையே எவ்வளவு தூரம் இடைவெளி இருந்தாலும்,

உள்மனங்கள் பேசிக்கொண்டே இருக்கின்றன. எப்படி இருக்கிறாய், என்ன செய்கிறாய் என ஒருவரை ஒருவர் விசாரித்துக்கொண்டே இருக்கின்றன. ஈருடல் ஓருயிர் என்று இலக்கியங்களிலும் கவிதைகளிலும் சொல்லி வந்தது அதீத கற்பனையோ புனைவோ அல்ல, உண்மைதான் என்பது இந்தப் பழங்குடி தம்பதியரின் வாழ்க்கையிலிருந்து எனக்குத் தெளிவாகிறது.

ஏன் மீசைக்கோணூரானைவிட பசுவம்மாளுக்கு அதிக நிம்மதி என்றால், அப்போது அவர்கள் இருந்த பார்டர்தொட்டி கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தது. வீரப்பனைப் பார்த்துவிட்டு ஓர் ஆள் வந்திருக்கிறான்; அவன் கையில்



ஒரு துப்பாக்கியும் இருக்கிறது என்ற தகவல் கர்நாடக மாநிலக் காவல்துறைக்குத் தெரிந்தால் பிடித்துச் சென்று விசாரிப்பார்கள். நம்ம சாருக்குத் (எனக்கு) தெரிந்து, அவர் வந்து காப்பாற்றுவதற்குள் அடித்துவிட்டால் என்ன செய்வது, துப்பாக்கி கேஸ் போட்டு ஜெயிலுக்கு அனுப்பிவிட்டால் என்ன செய்வது என்ற பயம், பார்டர்தொட்டிக்குள் அவர் துப்பாக்கியுடன் நுழைந்ததில் இருந்தே பசுவம்மாளுக்கு இருந்தது.

ஆக, இருவர் மனதிலும் ஒரே எண்ணம்தான் ஓடியது. ஆபத்து நெருங்குவதற்குள், பார்டர்தொட்டியிலிருந்து உடனே புறப்பட வேண்டும். அதற்கு ஆணிவேராக மற்றோர் அழுத்தமான காரணமும் இருந்தது.

(தொடரும் திகில்)

> **“இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபோது, இருவரது கண்களும் கேட்ட ஒரே கேள்வி, ‘வீரப்பனைப் பார்த்ததை நீ உளறிட்டியா, நீ சொல்லிட்டியா?’ என்பதுதான். இருவரும் பேசவில்லை; ஆனால், பேசினார்கள். உண்மையிலேயே இது ஓர் அதிசயம்தான்.”**

சபீதா ஜோசப்

என்றென்றும்

விஜய்

நான் நடிச்ச படங்களை ஆரம்பத்துலேர்ந்து சரியா சொல்லக்கூடியவங்கள்லகூட சிலருக்குத் தெரியாத விஷயம், என்னோட முதல் படம் எதுன்றதுதான். 'வசந்த ராகம்'தான் நான் நடிச்ச முதல் படம்னு பலர் நினைச்சுக்கிட்டு இருக்காங்க. ஆனா, நான் முதன்முதலா நடிச்சது 'வெற்றி' படம்தான். அதுல நான் பண்ணினது ஹீரோ விஜயகாந்த் சாரோட சின்ன வயசு கேரக்டர். பல வருடங்களுக்குப் பிறகு பி.எஸ்.வீரப்பா சார் தயாரிச்ச படம் அது.

நான் சினிமாவுல நடிச்ச முதல் காட்சி கொஞ்சம் திகிலான ஸீன்தான். காட்சிப்படி ஒரு பெட்ரோல் பங்குக்குள்ளே உட்கார்ந்து படிச்சுக்கிட்டிருப்பேன். எங்கப்பா அந்த பெட்ரோல் பங்குலதான் வேலை செய்யறவர். பெட்ரோல் போட்டுக்கறதுக்காக ஒரு கார் உள்ளே வரும். உடனே அப்பா பெட்ரோல் போடப் போவார். அப்போ கார்லேர்ந்து ஒரு வில்லன் இறங்கி,



6

நான் ரஜினி ரசிகன்!

பெட்ரோல் குழாயைப் பிடுங்கி, எங்கப்பா மேலேயே பெட்ரோலை ஊத்தி, சிகரெட் லைட்டரால கொளுத்திடுவான். நான் அதைப் பார்த்துட்டு அழுகையோடு, அதிர்ச்சியில அப்பா அப்பானு உறைஞ்சு போய் நிற்பேன்.

இதுதான் நான் நடிச்ச முதல் காட்சி. வில்லனா நடிச்சவர் பி.எஸ். வீரப்பா. அப்பாவா நடிச்சவர் கே.கே.சௌந்தர்.

அந்த சீன்ல நான் நடிச்சு முடிச்சுதும், பி.எஸ்.வீரப்பா சார் என்கிட்டே வந்து ஐந்நூறு ரூபாயை என் கையில் கொடுத்தார். அதுதான் நான் நடிச்சு வாங்கின முதல் சம்பளம். இன்னிக்கு நான் இந்த அளவு வளர்ந்திருக்கேன்னா விஜய்னாலும் வெற்றினாலும் ஒரே அர்த்தம்தானில்லையா! அதுமட்டுமில்லாம, நான் நடிச்சது விஜயகாந்த் சாரோட சின்ன வயசு கேரக்டர். அவர் பேர்லயும் வெற்றி! எந்தவிதமான திட்டமிடலும் இல்லாமலே, இப்படி வெற்றிக்கும் எனக்கும் ஆரம்பத்துலேர்ந்தே தொடர்பு இருக்கிறது ஆச்சரியம்தான்!


'ஒரு மகராஜா ஒரு மகராணி இந்த இருவருக்கும் இவ குட்டிராணி'ங்கிற பாட்டுதான் 'இரு மலர்கள்' படத்துக்காக என் அம்மா முதன்முதலா பாடின பாட்டு. அந்தப் பாட்டுல ஒரு வரி வரும், 'இவளுக்கொரு தம்பிப்பயல் இனிமேல் பிறப்பானோ..!'ன்னு.

“என் தங்கை பிறந்ததுமே எங்கப்பாவை டைரக்டரா 'ப்ரமோட்' பண்ணிட்டா!”

அதுக்குக் காரணம் அவரோட கைராசிதான்னு சொல்லலாம். ''ரொம்ப நல்லா நடிச்சே! வாழ்க!''ன்னு என் தலைமேல கை வெச்சு அவர் பண்ணின ஆசிதான் காரணம்னு சொல்லலாம்.

எனக்கு 'விஜய்'னு என் பேரன்ட்ஸ் பேர்வெச்சது தற்செயலாதான். அதேமாதிரி நான் நடிச்ச முதல் படம் 'வெற்றி'ன்னு அமைஞ்சதும் அப்படித்தான்.

அதைக் கேட்டதும் எனக்கு ஓர் ஆசை வந்துச்சு. நேரா அப்பாகிட்டேயே போய், “நீங்க வாங்கித் தந்த பொம்மையெல்லாம் விளையாடி அலுத்துப்போச்சு. அதனால உடனே ஒரு தங்கச்சி பாப்பா வேணும். வாங்கித் தர முடியுமா?''ன்னு கேட்டேன். அப்பா, “உடனே முடியாதுப்பா கொஞ்சநாள் ஆகும்”னார். நானும் காத்துக்கிட்டிருந்தேன். சொன்ன மாதிரியே 1980-ல் எங்கப்பா



எனக்கு ஒரு தங்கச்சிப் பாப்பாவைக் கொடுத்தார்.


எனக்குச் சொல்லமுடியாத சந்தோஷமாயிடுச்சு. என்கிட்டேயிருந்த பொம்மைகளையெல்லாம் தங்கைக்குக் கொடுத்துட்டேன். என் தங்கையே எனக்கு பொம்மை மாதிரி ஆயிட்டா.

அவ பிறந்த ஒன்றரை வயசுக்குள்ளேயே அவளுக்கு முதிர்ச்சி ரொம்ப அதிகம். யாருக்காவது உடம்பு சரியில்லைன்னா, உடனே மாதா படத்துக்கு முன்னால மண்டி போட்டுக்கிட்டு, "அம்மாம்மா... காப்பாத்து"ன்னு 'ப்ரே' பண்ணுவா. அம்மா சில சமயம் என்னை 'ஒழுங்கா படி'ன்னு திட்டுவாங்க. அதைப் பார்த்துட்டா, "அம்மாம்மா... அண்ணனுக்குப் படிப்பு கொடு"ன்னு பிரார்த்திப்பா. இப்படிச் சின்ன வயசுலயே பிறருக்காக அவ வேண்டிக்கிட்டதை இப்போ நினைச்சாலும் சொல்லமுடியாத ஓர் உணர்வு எனக்குள்ளே பரவும்.

என் தங்கைக்கு அப்பா அம்மா வெச்ச பேர் வித்யா. அவ என்னை விடவும் அதிர்ஷ்டக்காரி! அசிஸ்டென்ட் டைரக்டரா இருந்த எங்கப்பாவை, நான் பிறந்து கதாசிரியராத்தான் மாத்தினேன். ஆனா, என் தங்கை பிறந்ததுமே எங்கப்பாவை டைரக்டரா 'ப்ரமோட்' பண்ணிட்டா. 'சட்டம் ஒரு இருட்டறை' படத்துல எங்கப்பா டைரக்டரானார்.

அந்தப் படத்துக்கு திரைக்கதை எழுதினவங்க எங்க அம்மாதான். அது இந்தியிலயும் 'அந்தா கானூன்'ங்கற பேர்ல தயாராச்சு. அதுதான் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் கதாநாயகனா நடிச்ச முதல் இந்திப்படம்.

அம்மா கதை எழுதி, அப்பா டைரக்ட் பண்ணின படம்ங்கறதை விட, என்னோட அபிமானத் தலைவர் 'ரஜினிகாந்த்' அந்தப் படத்துல நடிச்சதுல எனக்கு ரொம்ப சந்தோஷம். நான் இன்னிக்குப் பல ரசிகர்களுக்குப் பிடிச்ச நடிகனா இருக்கலாம். ஆனா, நான் ரஜினி சாரோட ரசிகன்! ●





எஸ்.கல்பனா

உலகக் கோப்பை கால்பந்துத் திருவிழா ஒருவழியாக அமளிதுமளி உற்சாகத்துடன் நடந்துமுடிந்தது. FIFA - 2026 இறுதிப்போட்டி, கடந்த 19-ஆம் தேதி (இந்தியாவில் 20-ம் தேதி அதிகாலை) நியூ ஜெர்சியில் மெட்லைஃப் மைதானத்தில் பிரமாண்டமான கலைநிகழ்ச்சிகளுடன் தொடங்கியது. ஹாலிவுட் நடிகர் டாம் க்ரூஸ் ஸ்பெஷல் கெஸ்ட்டாகப் பங்கேற்கிறார் என்று தகவல் வந்ததுமே ரசிகர்களின் பல்ஸ் எகிறத் தொடங்கி விட்டது.

கால்பந்து இறுதிப் போட்டி ஆரம்பிக்குமுன் கண்கவர் நிறைவு விழா காட்சி நடத்தப்பட்டது. ஹாலிவுட்


WE ARE
WE ARE
பூமிப்
பந்தைப்
புரட்டிப்
போட்ட
கால்பந்துத்
திருவிழா!
FIFA

நடிகர் டாம் க்ரூஸுடன் இணைந்து மற்ற பல பிரபலங்கள் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று அசத்தினர். உலகக் கோப்பை கால்பந்து போட்டி வரலாற்றிலேயே முதன்முறையாக இந்த முறை இறுதிப் போட்டியின்போது பிரமாண்ட இடைவேளை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் அமெரிக்கத் தொலைக்காட்சிப் பிரபலங்கள் பலர் பங்கேற்று அசத்தினர்.

பரிசும் கோப்பையும்!

இந்தக் கோப்பையை 1974-ல் வடிவமைத்தவர் - இத்தாலிய கலைஞர் சில்வியோ கஸானிகா என்பவர். மொத்தம் 5 கிலோ எடையில் முழுக்க 18 காரட் தங்கத்தால் செய்யப்பட்ட இந்த ஒரிஜினல் கோப்பை எந்தவொரு நாட்டுக்கும் நிரந்தரமாகத் தரப்படுவதில்லை. ஒவ்வொரு முறை போட்டியின்போதும், வெற்றிபெற்ற அணிக்கு பரிசளிப்பு நேரத்தில் மட்டுமே இந்தக் கோப்பை வழங்கப்பட்டுப் பின்னர் திரும்பப் பெறப்படும். மற்றபடி அந்த அணிக்குத் தங்க முலாம் பூசிய வேறொரு கோப்பை (Replica) பரிசாகத் தரப்படும். ஒரிஜினல் கோப்பையை சுவிஸ் நாட்டில் உள்ள FIFA தலைமையகத்தில் பாதுகாப்பாக வைத்துவிடுவார்கள்.


ஜெய்டன் ஆடம்ஸ்

சரி... பரிசுத் தொகை?! இந்தப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற அணிக்கு 50 மில்லியன் அமெரிக்க டாலரும் (சுமார் ₹4,177 கோடி) இரண்டாம் இடம் பிடித்த அணிக்கு 33 மில்லியன் அமெரிக்க டாலரும் (சுமார் ₹2,760 கோடி) பரிசுத் தொகையாக அளிக்கப்பட்டது. கடந்த ஜூன் 11-ம் தேதி தொடங்கி, ஜூலை 19 வரை நடந்த இந்தப் போட்டியில் நல்லதும் கெட்டதுமான சில ஹைலைட்ஸ்...

இந்தப் போட்டித் தொடரில் பங்கேற்று விளையாடிய சில நாடுகளிலேயே தென்னாப்பிரிக்க அணி வீரர் ஜெய்டன் ஆடம்ஸ் உயிரிழந்தது பெரும் சோகம்! உலகக் கோப்பை கால் பந்துத் தொடரில், இந்த முறைதான் தென்னாப்பிரிக்க அணி முதல்முறையாக நாக்-அவுட் சுற்றுக்குத் தகுதி பெற்றுச் சாதனை படைத்தது. இதில் மிட்ஃபீல்டரான ஜெய்டன் ஆடம்ஸுக்கு



முக்கியப் பங்குண்டு.

சொந்தச் செலவில் சூன்யம்!

இந்த முறை போட்டித் தொடரில் அதிகளவு 'ஆஃப் சைடு' ற்றும் 'சேம் சைடு' கோல்கள் அதிகளவு போடப்பட்டன. மொத்தம் 14 'சேம் சைடு' கோல்கள் போடப்பட்டு, ரெக்கார்டில் இடம் பிடித்தது. குறிப்பாக, கேப் வெர்டே அணிக்கு எதிரான 'ரவுண்டு 32' ஆட்டத்தில் அர்ஜென்டீனா அணி வெற்றி பெற்றதற்கு இந்த சேம்சைடு கோல்தான் காரணம். அதேபோல எகிப்து வீரர் முகமது ஹானி, ஒரே தொடரில் இரண்டு முறை சேம் சைடு கோல் போட்டு மோசமான சாதனை படைத்தார்.

அமெரிக்காவின் அடாவடி!


அமெரிக்காவின் ஐ.சி.இ. (Immigration and Customs Enforcement) அமைப்பு, பல நாட்டு வீரர்களுக்குப் பெரும் குடைச்சல் கொடுத்தது. அமெரிக்காவுக்கு அரசியல் எதிரியான ஈரான் பெரும் நெருக்கடியைச் சந்தித்தது. அந்நாட்டு வீரர்களுக்குப் பல நாட்கள் காத்திருப்புக்குப் பின் நிபந்தனையுடன் கூடிய விசா வழங்கப்பட்டது. அதாவது, ஈரான் கலந்துகொள்ளும் போட்டி நாட்களில் மட்டுமே அவர்களுக்கு அமெரிக்காவுக்குள் வர அனுமதி





வழங்கப்பட்டது. அதனால், ஈரான் வீரர்கள் மெக்சிகோவில் தங்கியிருந்து, போட்டிக்கு மட்டும் அமெரிக்கா வந்து போனார்கள். அதேபோல ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த அணி வீரர்கள் பலரும்கூட அவதிப்பட்டனர். உஸ்பெகிஸ்தான் மற்றும் உருகுவே வீரர்களை மோப்ப நாய்களைக் கொண்டு சோதனை செய்த சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

கடந்தாண்டு ஆப்பிரிக்க சாம்பியன்ஷிப்பில் சிறந்த நடுவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓமர் ஆர்டன், இப்போது முதன்முறையாக உலகக்கோப்பைப் போட்டியின் நடுவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆனால், அவர் சோமாலியாவைச் சேர்ந்தவர் என்பதால் அமெரிக்காவுக்குள் அனுமதி மறுக்கப் பட்டது. விமான நிலையத்திலிருந்தே அப்படியே சொந்த ஊர் திரும்பி விட்டார். இப்படிப்பட்ட பிரச்னைகளில், கால்பந்து வீரர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டிய FIFA தலைவர் ஜானி இன்ஃபாண்டினோ இதைப் பற்றியெல்லாம் வாயே திறக்கவில்லை.



ஓமர் ஆர்டன்

மேலும், ரஷ்யா Vs உக்ரைன் போர் காரணமாக, ரஷ்ய நாட்டு அணியைப் போட்டியில் கலந்து கொள்ள ஃபிஃபா அமைப்பு அனுமதிக்கவில்லை. ஆனால், காஸாவில் போர் தொடுத்த இஸ்ரேல் நாட்டு வீரர்களுக்கு இந்தப் போட்டியில் கலந்து கொள்ளத் தடையில்லை. இதையெல்லாம் பார்க்கும்போது, FIFA அமெரிக்காவுக்குச் சாதகமாக செயல்படுகிறதோ என்ற சந்தேகம் பலருக்கும் ஏற்பட்டது. .

இப்படி எடக்குமடக்கான பல விஷயங்கள் இருந்தாலும், நான்கு வருடத்துக்கு ஒருமுறை FIFA நடத்தும் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி, ரசிகர்களுக்கு உற்சாகத் திருவிழா என்பதில் சந்தேகமில்லை. அடுத்து 2030 போட்டிக்கான எதிர்பார்ப்பு இப்போதே தொடங்கிவிட்டதிலும் ஆச்சரியமில்லை!



உச்சத்தில் நிறுத்தும்!

டார்க் பியூட்டி, டேலன்ட் பிளென்டி... அது கன்னடத்துக் கருங்குயில் சைத்ரா ஆர்ச்சர். இனிமையாகப் பாடுவார்; இடுப்பை அழகாக அசைத்து ஆடுவார். எல்லாவற்றிற்கும் மேலாக, எக்ஸ்ட்ரீம்லி டேலன்டட்! கைவசம் நான்கைந்து படங்கள். அடுத்த 'ஆலியா பட்' இவர்தான் என்று திரையுலகமே எதிர்பார்த்திருந்த வேளையில், கவர்ச்சியின் பக்கம் இவர் கவனம் திரும்பியது தான் ஆச்சரியம்! சமூக வலைதளங்களில் தன் ரசிகர்களின் உள்ளம் குளிரும் அளவிற்கு ஹாட்டான படங்களை அள்ளி விட்டவர், அதற்காக இதுவரை செலவழித்த பணம் மட்டும் பல லட்சங்கள்.

ஒரு படத்திற்கு வாங்கும் சம்பளத்தில் 40 சதவிகிதம் தன் சொந்த புரமோஷனுக்கு என்று பட்ஜெட் போட்டு செலவு பண்ணும் இவருக்கு, நெருங்கிய நண்பரான ஹீரோ சித்தார்த் எவ்வளவோ எடுத்துச் சொல்லிவிட்டாராம்... 'திறமையை நம்புங்கள். இளமையான தோற்றத்தைவிட முதிர்ச்சியான நடிப்புதான் உச்சத்தில் நிறுத்தும்' என்று. அவர் மட்டுமல்ல, இன்னும் பலரும் சொல்லிவிட்டனர். ஆனால், சைத்ராவோ வாரம் ஒரு போட்டோ ஷூட் பண்ணியே தீருவது என்பதில் பிடிவாதமாக இருக்கிறாராம். இல்லையென்றால் ரசிகர்கள் தன்னை மறந்துவிடுவார்கள் என்பது சைத்ரா சைக்காலஜி!

– ஜெசி..

பூவாளி

Poovaali@Kumudam.com

இயலாமை

இரண்டாவது முறையும்
பின்வாங்கியது
சிறுமி கட்டிய வீட்டைக்
கலைக்க மனமில்லாத
கடலலை!

– ரகுநாத். வ.

மறு அவதாரம்!


எந்தச் சாமியோ
கல்லாய்க் கிடக்கிறார்
மறு அவதாரத்திற்குத்
தயாராய்
சிற்பக்கூடத்தில்..!

– வேம்பார்
மு.க.இப்ராஹிம்.

தந்தையும் தந்தைகளும்!

முதியோர் இல்லத்தில்
கொண்டாடப்பட்டது
தேசத் தந்தையின்
பிறந்த நாள்!

– ஸ்மிர்த்தி செல்வி.





வெற்றுச் சுவர்!

காதல் நுழையாத
மனம்
மிகவும்
பாதுகாப்பாகத்தான்
இருக்கும்.
குழந்தைகளின்
கிறுக்கல்கள் அற்ற
வெற்றுச் சுவர் போல!

– கி.சரஸ்வதி.



மனிதம்..?

கோயில் உண்டியலில்
சலவை நோட்டு...
கோயில் வாசலில்
பிச்சை எடுத்திடும்
பார்வையிழந்தவனின் தட்டில்
செல்லாத நோட்டு!

– ரிஷிவந்தியா.



சாமி வாசனை

சாமி படத்தின் முன்
விளக்கேற்றிய காற்றில்
அம்மாவின் வாசனை!

– கி.ரவிக்குமார்.



நிலவு

கிணற்றில்
விழுந்தது
நிலவு
அதைக் குடத்திலும்
சேந்தியது
வாளி!

– ஆர்.ஏ.தீபனா.

காத்திருக்கும் கதவுகள்

பூட்டப்பட்டிருக்கும் கதவுகள்
ஏக்கத்துடன் காத்திருப்பது
புலப்படுகிறதா உனக்கு?

திறக்கப்படாத ஒவ்வொரு கதவின்
பின்னாலும்
தட்டப்படாத ஒரு நம்பிக்கை
தூசிபடிந்து கிடக்கிறது.

பூட்டுகள்
இரும்பால் ஆனவை அல்ல;
சில நேரங்களில்
புறக்கணிப்பால் வடிக்கப்பட்டவை.

தினமும்
வாசலைத் தொட்டுச் செல்லும்
காற்றிடம்
இன்று யாராவது வருவார்களா
என்று கேட்கின்றன கதவுகள்.

திறவுகோல் தொலைந்ததால் அல்ல,
திறக்க மனங்கள் மறந்ததால்தான்
பல வீடுகளில்
கதவுகள் முதுமையடைகின்றன.

ஒரு நாள்
யாரோ ஒருவன்





மெதுவாகத் தட்டும் ஒலி கேட்டதும்
பூட்டுக்குள்கூட
ஒரு புன்னகை பிறக்கிறது.

எல்லாக் கதவுகளும்
திறக்கப்படுவதற்காகவே உருவானவை
மூடப்பட்டிருப்பதற்காக அல்ல

பூட்டப்பட்டிருக்கும் கதவுகள்
மௌனமாக நிற்பதில்லை
ஏக்கத்துடன் காத்திருக்கின்றன...
ஒரு கையின் தொடுதலுக்காக
ஒரு மனத்தின் வருகைக்காக
ஒரு புதிய வெளிச்சத்திற்காக!

– கி.சரஸ்வதி

ராஜேஷ்குமார்

வேகமாய் வா விவேக்

விறுவிறு தொடர்...

39



ஓவியம்: அரஸ்



கடந்த இதழில்...

கோமாவில் இருக்கும் மேகாவுக்கு 'ட்ரூத் ஸீரம்' மருந்தைச் செலுத்தி உண்மையை வரவழைப்பதில் உள்ள சட்டச் சிக்கல்களை விவேக்குக்கு விளக்குகிறார், டாக்டர் கோயல். அந்த மருந்தைச் செலுத்தி ஐந்து நிமிடத்துக்குள் அந்த நபர் சுய உணர்வுக்கு வராவிட்டால், ஆறாவது நிமிடம் உடம்பிலிருந்து உயிர் பிரிந்துவிடும் என்கிறார்.



விவேக்கின் முகம் லேசாய் நிறம் தப்பியது. "டாக்டர்... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்..?"

டாக்டர் கோயல் புன்னகைத்தார்.

"மருத்துவரீதியான உண்மையைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ட்ரூத் ஸீரம் பொதுவாக நியூரோவெய்ல், செரிப்ரம் அன்லாக் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இந்த மருந்துகளை மேகாவின் உடம்புக்குள் செலுத்தினால், அவற்றின் வீரியம் எப்படி இருக்கும், அது எவ்வாறு வேலை செய்யும் என்று எனக்குத் தெரியாது. மேகாவுக்கு ஏற்கெனவே உயர் ரத்த அழுத்தப் பிரச்னையும், அனரீஸம் எனப்படும் ரத்தக்குழாய் வீக்க நோயும் இருப்பதால் நிறைய யோசிக்க வேண்டி யிருக்கிறது. நான் ஒரு டாக்டர் என்கிற முறையில் இந்த மருந்தின் தன்மையைப் பற்றிச் சொல்லிவிட்டேன். இனிமேல் இதை உபயோகப்படுத்துவதா, வேண்டாமா என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும். உங்கள் மேலதிகாரியின் உத்தரவும், நீதிமன்றத்தின் அனுமதியும் முறைப்படி கிடைத்தால், அந்த மருந்துகளை மேகாவுக்குக் கொடுத்துச் சோதனை செய்து பார்த்துவிடலாம்."

விவேக் கையமர்த்தினான்.

"வேண்டாம் டாக்டர். ட்ரூத் ஸீரம்

கொடுக்கப்பட்ட அடுத்த ஐந்து நிமிடத்திற்குள் மேகாவுக்கு நினைவு திரும்பவில்லை என்றால், அவளுடைய உயிருக்கு ஆபத்து என்று நீங்கள் சொன்ன பிறகு, அந்த விபரீதமான சிகிச்சை வேண்டாம்."

"அப்படியென்றால், உங்களுக்குத் தேவைப்படும் தகவல்களுக்காக மேகாவுக்கு நினைவு திரும்புகிறவரை நீங்கள் காத்திருக்க வேண்டி யிருக்குமே?"

"பரவாயில்லை... காத்திருக்கிறேன்."

"நடந்த விமானவிபத்துகள் அசாதாரணமானவை. அதற்கான காரணம் என்ன என்று தெரிந்துகொள்வதில் தாமதம் ஏற்பட்டால் பரவாயில்லையா..?"

"நோ இஷ்யூஸ் டாக்டர்! மேகா குற்றவாளியென்றாலும் ஓர் உயிர் என்பது சாதாரண விஷயமில்லையே..! மேலும், இன்னோர் உயிர் அவளுக்குள் இருக்கிறது. பாதிப்பு தெரிந்தே, அதுவும் தடைசெய்யப்பட்ட சட்டவிரோதமான ஒரு மருந்தை ஒரு நோயாளியின் உடம்புக்குள் செலுத்துவது என்பது ஒரு கொலை செய்வதற்குச் சமம், அல்லவா..?"

டாக்டர் மையமாய்த் தலையாட்டினார்.

"ஐ அக்ரி வித் யுவர் வேர்ட்ஸ். ஆனால், அவள் கோமாவிலிருந்து



மீண்டு வர எவ்வளவு நாட்கள் ஆகும் என்று என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது."

"லெட் அஸ் வெயிட்! நீங்கள் உங்கள் வழக்கமான சிகிச்சையைத் தொடருங்கள். மேகாவுக்கு நினைவு திரும்பியதும் எனக்குத் தகவல் கொடுங்கள். உடனே புறப்பட்டு வருகிறோம்."

"ஷ்யூர்!" டாக்டர் கோயல் பெருமூச்சொன்றை வெளியேற்றிய படி தோள்களைக் குலுக்க, விவேக்கும் விஷ்ணுவும் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு எழுந்தார்கள்.

"ப்ளீஸ்... போட்டு நெருக்காதீங்க. உங்க ஆர்வம் எனக்குப் புரியுது. எல்லார்க்கும் ஆட்டோகிராஃப் போட்டுத் தர்றேன். அப்புறமா லாபிக்குப் போய் செல்ஃபி எடுத்துக்குவோம்." விஷ்ணு, நான்கைந்து அழகான பெண் ஏர்ஹோஸ்டஸ்களுக்கு நடுவில் சிக்கி, மூச்சுத் திணறிக்

“நம்ம மன்னர் ரொம்ப முன்ஜாக்கிரதைப் பேர்வழி!”

“எப்படிச் சொல்றே?”

“புறமுதுகிட்டு ஓடிவரும்போது கால் தடுக்கி விழுந்தா தேவைப்படும்னு முதலுதவிப் பெட்டியையும் முதுகில கட்டிக்கிட்டிருக்காரு, பாரு!”

– அம்பை தேவா, சென்னை

கொண்டிருந்தான்.

“மிஸ்டர் விஷ்ணு! இந்த விமானவிபத்து சம்பந்தப்பட்ட கேஸை உங்க பாஸ் விவேக்கும் நீங்களும் சேர்ந்து அற்புதமா இன்வெஸ்டிகேட் பண்ணி, குற்றவாளியை அடையாளம் காட்டியிருக்கீங்க. இதுல உங்களோட பங்களிப்பு பத்தி கொஞ்சம் சொல்ல முடியுமா..?”

“அதை நான் சொல்றதைவிட, என் பாஸ் வாயால நீங்க கேட்கணும்னு நான் ஆசைப் படறேன்...” விஷ்ணு சொல்லிக் கொண்டிருக்கும் போதே, திடுமென்று ஒலித்த செல்போனின் ரிங்டோன் அழைப்பு விஷ்ணுவின் வண்ணமயமான கனவைத் துவைத்து துவம்சமாக்க, அவன் போர்வையை உதறிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

பக்கத்துக் கட்டிலில் மல்லாந்து படுத்திருந்த விவேக் குரல் கொடுத்தான்... “விஷ்ணு, போன் யார்கிட்டயிருந்துன்னு பாரு!”

அவன் போனை எடுத்துப் பார்த்துவிட்டு, “பாஸ்..! டாக்டர் கோயல் கூப்பிடறார். பேய் ஜாகிங் போற நேரத்துல இவர் எதுக்குக் கூப்பிடறார்னு தெரியலையே... சே! ரொம்ப நாள் கழிச்சு ஒரு நல்ல கனவு வந்தது. ஒரு போன் காலாலே சின்னாபின்னமாயிடுச்சு. இந்தாங்க பாஸ், டாக்டர் லைன்ல இருக்கார்.”

விவேக் செல்போனை வாங்கிக் காதில் வைத்து, தூக்கம் மிச்சமிருந்த குரலோடு கேட்டான்...

“டாக்டர், இந்த அகால ராத்திரி வேளையில் போன் செய்திருக்கிறீர்கள். ஏதாவது முக்கியமான செய்தியா..?”

“ஆமாம்... மேகா கோமாவிலிருந்து சுயஉணர்வுக்கு வர ஒரு வழி கிடைத்திருக்கிறது.”

விவேக் தூக்கக் கலக்கம் காணாமல் போயிற்று.

“வழியா..?”

“எஸ்ஸ்.....”

“மேகா இயல்பான முறையில் சுயஉணர்வுக்குத் திரும்ப வேண்டுமென்றால் மணி நேரங்கள் அல்ல, சில நாட்கள்வரை கூடக் காத்திருக்க வேண்டிவரும் என்று சொன்னீர்களே..?”

“உண்மைதான்..! ஆனால், விமானவிபத்துகளுக்குப் பின்னால்

இருக்கும் விபரீதங்களும் சதிகளும் வெளிச்சத்திற்கு வர வேண்டுமென்றால் மேகாவை விரைவாக சுயஉணர்வுக்குக் கொண்டு வரவேண்டும் என்கிற எண்ணத்தில் நான் ஒரு முடிவு எடுத்தேன். அதாவது, மருத்துவரீதியாக எனக்கு ஏதாவது சந்தேகங்கள் ஏற்பட்டால், நான் உரிமையோடு கலந்தாலோசிக்கும் கியூபாவில் உள்ள டாக்டர் கார்லஸ் பின்லேயைத் தொடர்புகொண்டு நிலைமையை எடுத்துரைத்தேன். அவர் பிரச்னையை உன்னிப்பாய்க் கேட்டுவிட்டு, ஒரு சிகிச்சையைப் பரிந்துரைத்தார். அதைப் பற்றிப் பேசத்தான் உங்களை அழைத்தேன்."

"எதுமாதிரியான சிகிச்சை அது?"

"அண்மைக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நலாக்ஸோன் (NALAXONE) என்கிற மருந்தை அவர் பரிந்துரை செய்து, அதை நோயாளிக்குக் கொடுக்கும்படி சொன்னார். அது மட்டுமல்லாமல், ஜெய்ப்பூரில் அந்த மருந்து கிடைக்கும் ஃபார்மா கம்பெனியின் பெயரையும் சொன்னார். அந்த இடத்துக்கு நானே சென்று மருந்தையும் வாங்கி வந்துவிட்டேன். மேகாவுக்கு அந்த மருந்தைச் செலுத்தினால், அரைமணி நேரத்தில் கண் திறந்து பார்த்து, சுயஉணர்வுக்கு வந்துவிடுவாள் என்பது என் நம்பிக்கை."

"ஒரு சந்தேகம் டாக்டர்..!"

"என்ன?"

"அந்த 'நலாக்ஸோன்' மருந்து மேகாவுக்குச் செலுத்தப்பட்டால், பக்கவிளைவுகள் ஏதாவது ஏற்பட்டு, அவளுடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடாதா..?"

"இது குறித்து அவரிடம் பேசிவிட்டேன். அதற்கு வாய்ப்பேயில்லை என்கிறார். இந்த மருந்துக்கு இருக்கும் இன்னொரு பெயர் மேஜிக் மெடிசன். எம்.எம். என்று சொன்னால் கியூபாவில் உள்ள எல்லா டாக்டர்களுக்கும் தெரியும் என்றார். நோயாளியின் உடம்புக்குள் செல்லும் இந்த மருந்து உடனடியாக ரத்தத்தில் கலந்து உருவாக்கும் மருத்துவச் சக்தி, கிட்டத்தட்ட ஒரு மாயச் செயல்பாடு போன்று இருக்கும்.

ஜோடி புதுசு!

தமிழ், தெலுங்கு, இந்தி மூன்றிலும் முன்னணி நட்சத்திரங்களின் படங்களில் கவனம் செலுத்தும் பூஜா ஹெக்டே, இப்போது நடிகர் துல்கர் சல்மானுடன் முதன்முறையாக இணைந்திருக்கிறார். இப்படத்துக்கு 'ஸ்ரீ ஸ்ரீ' எனப் பெயரிட்டு, ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை சமீபத்தில் வெளியிட்டது, படக்குழு.



மூளையில் உள்ள நியூரான்களின் வலைப்பின்னல்களை நெறிப்படுத்தி, மூளையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, உள்ளே தூங்கிக் கொண்டிருக்கும் நினைவுகளையும், சேமித்து வைக்கப்பட்டிருக்கும் விஷயங்களையும் கிளறி, நாம் கேட்கும் கேள்விகளுக்கு நோயாளியைச் சரியான பதில் களைச் சொல்ல வைக்கும். நீங்கள் உடனே புறப்பட்டு வந்தால் சிகிச்சையை ஆரம்பித்துவிடலாம்."

"இதோ புறப்பட்டு விட்டேன்." விவேக் போர்வையை உதறிக்கொண்டு எழுந்தான்.

மஹிளா ஹாஸ்பிடல் அந்த நள்ளிரவு வேளையில் நிசப்தத்தைப் பூசிக்கொண்டு, சொற்ப விளக்குகளின் வெளிச்சத்தில், அடர்த்தியான மரங்களுக்கு நடுவில் தெரிய, விவேக்கும் விஷ்ணுவும் காரினின்றும் இறங்கிக்கொண்டு, வாசற்படிகளில் ஏற, டியூட்டி டாக்டர் ஒருவர் எதிர்ப்பட்டார்.

"சீஃப் டாக்டர் ஐ.ஸி. யூனிட்டின் முன் பக்க 'ஆன்கால்' அறையில் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்."

ஹாஸ்பிடலின் ஐ.ஸி. யூனிட்டுக்கு வெளியே, ஆள் அரவம் அறவே இல்லாத பார்வையாளர்களின் ஹாலில் இரண்டு கான்ஸ்டபிள்கள் மட்டும் தோளில் சார்த்தப்பட்ட ரைஃபிள்களோடும், கண்களில் சற்றே தூக்கக் கலக்கத்தோடும் நாற்காலிகளில் சாய்ந்திருந்தார்கள்.

விவேக்கையும் விஷ்ணுவையும் பார்த்ததும் விருட்டென்று எழுந்து சல்யூட் கொடுத்தார்கள்.

அந்த மரியாதையைத் தலையசைப்பால் ஏற்றுக்கொண்ட விவேக், ஐ.ஸி. யூனிட்டுக்குள் நுழைந்து, உடனடியாக எதிர்ப்பட்ட 'ஆன்கால்' அறைக்குள் பிரவேசித்தான்.

டாக்டர் கோயல், தான் பார்த்துக் கொண்டிருந்த லேப்டாப்பை அணைத்துவிட்டு, மெலிதாகப் புன்னகைத்தார்.

"ஸாரி, இந்த நடுநிசி நேரத்தில் உங்களை அழைத்துத் தொந்தரவு தருகிறேன்."

விவேக்கும் விஷ்ணுவும் அவருக்கு எதிரேயிருந்த நாற்காலி களில் உட்கார்ந்தார்கள்.

விவேக் புன்முறுவல் ஒன்றை உதிர்த்தபடி கோயலை ஏறிட்டான்.

"ஒரு நல்ல விஷயத்திற்காகத் தானே நீங்கள் எங்களை அழைத்தி

ரவி நெலகுடிதி இயக்குநராக அறிமுகமாகும் இப்படம் பள்ளி மற்றும் கல்லூரி காலகட்ட காதலைப் பின்னணியாகக் கொண்டது. காதல், காமெடி கலந்த ரொமான்டிக் பான் இந்தியா படமாக உருவாகும் இப்படத்துக்கு இசை ஜி.வி.பிரகாஷ்.

ருக்கிறீர்கள், டாக்டர். அது எப்படித் தொந்தரவாக இருக்க முடியும்..? மேகா கோமாவிலிருந்து மீண்டு வருவதுதானே நம்முடைய எதிர்பார்ப்பு. அது நிறைவேறப் போகிறது என்றால் சந்தோஷம்தானே!"

"அப்படியென்றால் சிகிச்சையை ஆரம்பித்துவிடலாமா..?"

"பை த பை... ஒரு க்ளாரிஃபிகேஷன் டாக்டர்?"

"என்ன?"

"திரும்பவும் கேட்கிறேன் என்று நினைக்காதீர்கள். இந்த நலாக்ஸோன் சிகிச்சையின் நம்பகத்தன்மை எவ்வளவு சதவீதம் என்று சொல்லமுடியுமா..?"

"எழுபத்தைந்து சதவீதம்."

"சக்சஸ் ரேட்...?"

"அதே எழுபத்தைந்து."

"அப்படியென்றால், இருபத்தைந்து சதவீதம் சந்தேகத்திற்குரியது என்று எடுத்துக் கொள்ளலாமா..?"

கோயல் லேசாய் எரிச்சலானார்.

"ஆம்... மருத்துவச் சிகிச்சையில் முழுமையான வெற்றி என்று ஒன்று கிடையாது."

"புரிகிறது டாக்டர். போனில் பேசும்போது, இதனால் உயிருக்கு பாதிப்பு இல்லை என்று சொல்லி விட்டீர்கள். ஆனால், இந்தச் சிகிச்சைக்குப் பிறகு பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறதா..?"

"இருக்கலாம்... இல்லாமலும் போகலாம். சிலருக்கு உடனடியாகப் பக்கவிளைவுகள் தெரியாது. இரண்டு அல்லது மூன்று வருடங்கள் கழித்து நோயாளியின் ஆரோக்கியம் சிறிது பாதிக்கப் படலாம். அதைப் பற்றியெல்லாம் நாம் நினைத்துக்கொண்டு இருந்தால், இப்போதைய நம் தேவை பூர்த்தியாகாது."



"ஸாரி டாக்டர், நம் உடனடித் தேவைக்காக, குற்றவாளி எனக் கருதப்படும் ஒருவரின் ஆரோக்கியத்தைப் பணயம் வைப்பதில் எனக்கு உடன்பாடில்லை. இரண்டு நாட்கள் பொறுமையாய் இருந்துவிட்டோம். இன்னும் இரண்டு நாட்கள் பார்க்கலாமே?"

விவேக் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, அந்த ஸ்டாஃப் நர்ஸ் மூச்சிரைப்போடு ஓடி வந்து, அறைவாசலில் நின்றாள்.


"டா... டாக்டர்!"

"என்ன..?"

"மேகா பெட்ல இல்லை. காணோம்."

– தொடரும்...

பிரார்த்தனை கிளப்



நலம் பெற வேண்டும்...

என் அப்பா ராஜேந்திரன் அவர்களுக்கு (வயது 60) கால் பாதத்தில் சுமார் ஓரங்குல ஆழத்தில் துளை போன்ற புண் உருவாகி, வலியால் அவதிப்படுகிறார். சர்க்கரை நோயால் ஏற்படும் நரம்பு பாதிப்பு, ரத்த ஓட்டக் குறைபாடு காரணமாக இது ஏற்பட்டிருப்பதாகவும், தொற்று எலும்பு வரை பரவியிருக்குமானால், காலை அகற்ற வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள். இதனால் நாங்கள் மிகுந்த கவலையும் வேதனையும் அடைந்துள்ளோம். அப்பாவின் காலை அகற்ற வேண்டிய நிலை வராமல், புண் முழுமையாகக் குணமாகி, அவர் மீண்டும் முழு ஆரோக்கியம் பெறப் பிரார்த்தனை செய்யுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

– ஆர்.மூர்த்தி, விருத்தாசலம்.

எங்கள் தாயார் ஜெகதீஸ்வரிக்கு மூட்டுவலி (ஆர்த்தரிட்டீஸ்) பிரச்னை அதிகரித்ததில், கடந்த சில நாள்களாக ஒவ்வோர் அடியையும் மிகுந்த வலியோடு எடுத்து வைக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளார். முழங்கால் மூட்டுகள் அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பதால், மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை செய்வது நல்லது என்று மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர். ஆனால், அறுவைச் சிகிச்சைக்கு முன்பாக ஆயுர்வேத சிகிச்சையை மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம். இதிலேயே நல்ல பலன் கிடைத்து, அம்மா பழையபடி தெம்பாக எழுந்து நடமாட வேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனை!

– சி.வைஷ்ணவி, துறையூர்.


இந்த வாரம் கூட்டுப் பிரார்த்தனைக்குத் தலைமை தாங்குபவர்
கோவை வி.ஜி.எம். மருத்துவமனையின் நிறுவனர், தலைவர்,
டாக்டர் வி.ஜி.மோகன் பிரசாத் அவர்கள்.



"மருத்துவம் விஞ்ஞான எல்லைக்குட்பட்டது. ஒரே வகை சிகிச்சை வேறு வேறு மனிதர்களுக்கு மாறுபட்டு இயங்குகிறது. எனில், விஞ்ஞானத்திற்கு மேல் ஒரு சக்தி செயல்படுகிறது. அந்தப் பிரபஞ்ச ஆற்றலை நாம் வழிபடும்போது, அது நமக்குத் துணை நிற்கிறது; இடுக்கண் களைகிறது; வாழ்வளிக்கிறது. பல்லாயிரம் மக்கள் மனமுருகி வழிபடும்போது கல் விக்கிரகமும் உயிர்பெறுகின்றது; அருள் பொழிகின்றது. நோய்வாய்ப்பட்டவர்கள் அனைவரும் நலம் பெற நாம் அனைவரும் மனமொருமித்து பிரபஞ்சத்திடம் வேண்டுவோமாக!"

பிரார்த்தனை நாள்: 26.07.2026 ஞாயிறு, நேரம்: காலை 10 மணி

குறுக்கெழுத்துப் போட்டி: 502




இடமிருந்து வலம்:

1. இங்கே இருப்பது அகம் இல்லை; வெளியே.
2. கானகம் மறைத்து வைத்திருக்கும் பாட்டு.
3. கரை சேர்க்கத் துடுப்பசைவில் களைப்பின்றி ஓடும்.
5. அழுக்கு விளக்கைத் தேய்த்தால், ஆலம்பனா என்று வருவது?
6. இரு கரை இணைக்கும் ஒரு வழி.
7. நாசி அறிவது என்ன யோசி!

மேலிருந்து கீழ்:

1. பொன் ஒளிர்ந்திடப் போடுவது?
2. நகர மெய் இல்லா காந்தம், முன்னாளில் இது குறிப்பிட்ட தூரம்.
3. மூன்று



முறை சொல்வது ஏலம். முறையிட்டுக் கூவுவது?

4. தரு என்றால் மரம். தர்மம் என்றால்?

5. ஆடியில் பிறந்த ஆண்டாளின் தாரகை.

6. சுமை. வெயிட். கனம்.

வலமிருந்து இடம்:

2. முப்பாலில் மூன்றாம் பால்.

3. தமிழில் கார்னர்.

4. பிடிவாதம். வீம்பு.

6. உள்ளங்கால்.

7. ஆண்டிக்கு வீடு. அஞ்ஞானம்.

8. பள்ளித்... அனைத்தும் கோயில் செய்குவோம்.

கீழிருந்து மேல்:

3. அசமோதம், திப்பியம், அஜமோதை.

4. ஈயத்தின் இந்தப் பெயர் இரும்புக்கும் உண்டு.

5. தெனாவட்டு நடிகை பெயரில் பின்பாதி இல்லை.

6. கணை. அம்பு.

7. தரு. விருட்சம்.

8. தமிழில் குவாலிட்டி.

ஜெயாப்ரியன்

சரியான விடை எழுதி அனுப்பும்
முதல் 10 வாசகர்களுக்கு மொத்தம் ரூபாய் 1000 பரிசு!
விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

குமுதம்
குறுக்கெழுத்துப் போட்டி எண்: 502
தபால் எண்: 2592, சென்னை - 31.
சரியான விடைகளை முழு முகவரி, போன் நம்பருடன் edtl@kumudam.com என்ற மின் அஞ்சலிலும் அனுப்பலாம்

கு.எ.போ.500-ன் சரியான விடை:

(1) கு	ளி	லா	த	(2) மு	ழ	ம்
றி		த		ற		ர
ல்	(3) வ	(4) கா	(5) ல	ம்	ன	(6) வா
	ம்		கா	(7) ஆ		ச
கு	(8) ச	(9) ம	ன்		(10) க	ல்
	ம்		(11) த	ளி	ர்	(12) வே
(13) ம	சா	லா		(14) க	மா	

சரியான விடை எழுதியோரில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

1. கி.சுமதி கிருஷ்ணமூர்த்தி, சென்னை-119.
2. பாலசுப்பிரமணியன், பாடாலூர்.
3. சிவராமன் ரவி, பெங்களூரு-16.
4. சாலக்குடி பிந்து ப்ரியன், கோட்டயம்.
5. பி.சண்முகவடிவு, கங்காபுரம்.
6. வள்ளி தயாளன், பெரம்பலூர்.
7. எம்.பொற்கொடி, அனந்தபுரம்.
8. ஸ்ரீவித்யா, மேல்பட்டாம்பாக்கம்.
9. பி.கணேஷ்குமார், நெல்லிக்குப்பம்.
10. வி.மஞ்சுளா, புதுச்சேரி.



ராசி பலன்

22.7.2026 முதல் 28.7.2026 வரை



மேஷம்

தடைகள் நீங்கி, தன்னம்பிக்கை அதிகரிக்கும் காலகட்டம். அலுவலகத்தில் உங்கள் திறமை பேசப்படும். பிறரால் ஏற்பட்டிருந்த வீண் பழிகள் நீங்கும். உடனிருப்போர் ஆதரவு கிட்டும். குடும்பத்தில் ஒற்றுமை இடம்பிடிக்கும். வாரிசுகளிடம் வீண் தர்க்கம் வேண்டாம். அசையும், அசையா சொத்து சேரும். வழக்குகளில் இழுபறி நீடிக்கும். செய்யும் தொழிலில் முயற்சிக்கு ஏற்ப வளர்ச்சி ஏற்படும். கலைஞர்கள் படைப்பு ரகசியத்தைப் பிறரிடம் பகிர வேண்டாம். அரசு, அரசியலில் உள்ளோர் வாக்குறுதி அளிப்பதில் நிதானம் தேவை. பயணத்தில் போதைக்கு இடம்தர வேண்டாம். அடிவயிறு, கழுத்து, முதுகு உபாதைகள் வரலாம். கணபதி வழிபாடு களிப்பு சேர்க்கும்.

ரிஷபம்

உழைத்த உழைப்பிற்கு உயர்வுகள் கிட்டக்கூடிய காலகட்டம். அதை அலட்சியத்தால் நழுவவிட வேண்டாம். பணியிடத்தில் நேரம் தவறாமை முக்கியம். பிறர் தவறை பெரிதுபடுத்த வேண்டாம். இல்லத்தில் ஒற்றுமை இடம்பிடிக்கும். உறவுகள் வருகையும் அதனால் ஆதாயமும் உண்டு. சுபகாரியங்களில் நிதானம் முக்கியம். ஆடம்பரச் செலவுகளைத் தவிருங்கள். செய்யும் தொழிலில் வளர்ச்சி சீராக இருக்கும். அரசியல், அரசுத்துறையினர்க்கு அமைதியே ஆனந்தம் தரும். கலைஞர்கள், படைப்பாளிகள் திறமை வெளிப்படும். இரவுப் பயணத்தை இயன்றவரை தவிருங்கள். அடிவயிறு, கண்கள், எலும்பு உபாதை வரலாம். நரசிம்மர் வழிபாடு நன்மை சேர்க்கும்.

ன்கள்



யதார்த்த ஜோதிடர் ஷெல்வீ

மிதுனம்

திட்டமிட்டும், நேரம் தவறாமலும் செயல்படவேண்டிய காலகட்டம். பணியிடத்தில் திட்டமிடல் முக்கியம். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரலாம், ஏற்பதே நல்லது. வீட்டில் சீரானபோக்கு நிலவும். சகோதர உறவுகளால் சகாயம் கிட்டும். வழக்குகளில் சாதகமான தீர்வு கிட்டும். வரவு சீராக இருக்கும். செய்யும் தொழிலில் புதிய முதலீடுகளில் நிதானம் முக்கியம். கலைஞர்கள் வறட்டு ரோஷம் தவிருங்கள். அரசு, அரசியலில் உள்ளோர் வாக்கில் நிதானம் தேவை. பயணத்தில் உடைமைகள் பத்திரம். நரம்பு, கண்கள், முதுகு உபாதை வரலாம். துர்க்கை வழிபாடு துளிர்க்கச் செய்யும்.

கடகம்

திட்டங்கள் செயலாகத் தொடங்கும் காலகட்டம். அலுவலகத்தில் உங்கள் திறமை உணரப்படும். திட்டமிடலும் நேரம்தவறாமையும் மிகமிக முக்கியம். இல்லத்தில் சுமுகமான சூழல் நிலவும். வாரிசுகளுடன் இருந்த விரிசல் மறையும். தம்பதியர் இடையே ஒற்றுமை உருவாகும். அசையும், அசையா சொத்து சேரும். சுபகாரியங்கள் கைகூடி வரும். செய்யும் தொழிலில் லாபத்தின் அளவுகோல் அதிகரிக்கும். அரசு, அரசியலில் உள்ளோர் வாக்கில் கவனம் இருந்தால், செல்வாக்கு உயரும். கலைஞர்களுக்குத் தொடர் வாய்ப்புகள் கிட்டும். பயணத்தில் வேகத்தை அறவே தவிருங்கள். காது, மூக்கு, தொண்டை உபாதை வரலாம். பைரவர் வழிபாடு, பசுமை சேர்க்கும்.

சிம்மம்

உழைப்பின் பலனாக உயர்வுகள் வரும் காலகட்டம். அலுவலகத்தில் திறமைக்கு ஏற்ப வளர்ச்சி உண்டு. பணிகளில் திட்டமிடலும் நேரம் தவறாமையும் அவசியம். மேலிடத்தின் ஆதரவு கிட்டும். வீட்டில் விசேஷங்களுக்கு இடமுண்டு. வாரிசுகளிடம் வீண் தர்க்கம் வேண்டாம். வாழ்க்கைத்துணை உடல்நலத்தில் கவனம் செலுத்துங்கள். செய்யும் தொழிலில் பெரும் முதலீடு இப்போதைக்கு வேண்டாம். கலைஞர்கள் திறமைக்கு ஏற்ப வாய்ப்புகள் வரும். அரசு, அரசியலில் உள்ளோர் வாக்கில் நிதானம் தேவை. பயணத்தில் கவனச்சிதறல் கூடாது. ரத்தத்தொற்று, அலர்ஜி, அல்சர் உபாதைகள் வரலாம். சுதர்சனர் வழிபாடு சுபிட்சம் தரும்.

கன்னி

பெருமைகள் சேரும் காலகட்டம். அதேசமயம் பொறுமை மிகமிக அவசியம். பணியிடத்தில் திறமைக்கு ஏற்ப உயர்வுகளைப் பெறுவீர்கள். அடக்கம் இருந்தால், பாராட்டப்படுவீர்கள். குடும்பத்தில் குதர்க்கம் கூடவே கூடாது. வாழ்க்கைத் துணையுடன் மனம்விட்டுப் பேசுங்கள். வரவை சேமிப்பது நல்லது. வாரிசுகளால் பெருமை சேரும். செய்யும் தொழிலில் வளர்ச்சி சீராகும். அரசு, அரசியல் சார்ந்தவர்களுக்கு மனம்போல உயர்வுகள் வரத்தொடங்கும். கலைஞர்கள், பொது இடத்தில் வீண் தகராறு வேண்டாம். வாகனத்தில் வேகம் தவிருங்கள். தலைவலி, தூக்கமின்மை, நரம்பு உபாதைகள் வரலாம். குருபகவான் வழிபாடு குதூகலம் தரும்.

துலாம்

சுமுகமான சூழல் உருவாகும் காலகட்டம். நாவடக்கம் இருந்தால் அது நிலைக்கும். பணியிடத்தில் பொறுப்பு உணர்ந்து செயல்படுவது அவசியம். வேண்டாத புலம்பலைத் தவிருங்கள். வீட்டில் நிம்மதி இடம்பிடிக்கும். சுபகாரியங்களில் முன்நிற்கும் சூழல் உருவாகும். குலதெய்வ வழிபாட்டிற்கு நேரம் அமையும். குழந்தைகளால் பெருமை சேரும். செய்யும் தொழிலில் முழு கவனம் தேவை. அரசு, அரசியலில் உள்ளோர் அகலக்கால் வைக்க வேண்டாம். கலைஞர்கள் ஜம்பமும் தலைக்கனமும் தவிர்த்தால், வாய்ப்புகள் வரும். பயணத்தில் நிதானம் முக்கியம். அடிவயிறு, நரம்பு, சளி உபாதைகள் வரலாம். சிவன், பார்வதி வழிபாடு சீரான நன்மை தரும்.

விருச்சிகம்

நன்மைகள் அதிகரிக்கும் காலகட்டம். பணியிடத்தில் ஏற்றமும் மாற்றமும் கைகூடி வரும். சிலருக்கு புதிய பணிவாய்ப்பு மனம்போல் அமையும். வீட்டில் சிரித்த முகத்துடன் இருந்தால், சீரானபோக்கு நிலவும். ஆடை, ஆபரணம், பொருள் சேரும். உறவுகளிடையே செல்வாக்கு உயரும். தரல், பெறலில் அவசரம் வேண்டாம். குடும்ப ரகசியம் பிறரிடம் பகிர வேண்டாம். செய்யும் தொழிலில் லாபம் அதிகரிக்கும். அரசு அரசியலில் உள்ளோர் வாக்குறுதிகளில் கவனமாக இருங்கள். கலைஞர்களின் முயற்சிகள் பலிதமாகும். பயணப்பாதையில் பிறர் தரும் உணவு, பானம் தவிருங்கள். காது, மூக்கு, தொண்டை உபாதை வரலாம். இஷ்ட அம்மன் வழிபாடு இனிமை சேர்க்கும்.

தனுசு

சீரானபோக்கு நிலவக் கூடிய காலகட்டம். பணியிடத்தில் இதுவரை இருந்த சங்கடங்கள் நீங்கும். புதிய பொறுப்புகளில் திட்டமிடல் மிகமிக முக்கியம். இல்லத்தில் விடியல் வெளிச்சம் பரவும். தடைபட்டிருந்த சுபகாரியங்கள் கைகூடும். ரத்த பந்தங்களிடையே இருந்த வீண் தர்க்கம் வேண்டாம். பணவரவில் இருந்த தடைகள் நீங்கும். செய்யும் தொழிலில் முயற்சிகள் பலன் தரும். அரசு, அரசியலில் உள்ளோர் புறம்பேசுவோரிடம் இருந்து உடனே ஒதுங்குங்கள். கலைஞர்களின் நீண்டநாள் கனவுகள் பலிதமாகும். வாகனத்தில் வேகம் கூடவே கூடாது. தூக்கமின்மை, பற்கள், கால் வலி வரலாம். வேலவன் வழிபாடு, விசேஷ நன்மை தரும்.

மகரம்

ஏற்றமும் மாற்றமும் ஏற்படக் கூடிய காலகட்டம். அலுவலகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் கைகூடும். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். இல்லத்தில் இனிய சூழல் நிலவும். பெற்றோர் ஆசியுடன் சுபகாரியங்கள் கைகூடும். ஆடை, ஆபரணம் சேரும். தேவையற்ற ரோஷம் யாரிடமும் வேண்டாம். செய்யும் தொழிலில் சீரான வளர்ச்சி ஏற்படும். புதிய ஒப்பந்தங்களில் நிதானம் முக்கியம். அரசு, அரசியலில் உள்ளோரின் செல்வாக்கு உயரும். கலைஞர்களுக்கு கணிசமான வாய்ப்புகள் வரும். வாகனப் பழுதை உடன் சீர் செய்யுங்கள். இடுப்பு, தலைவலி, அஜீரணம் உபாதை வரலாம். மாருதி வழிபாடு மகிழ்ச்சி தரும்.



கும்பம்

உயர்வுகளுக்கு உத்தரவாதம் கிட்டக் கூடிய காலகட்டம். அலுவலகத்தில் சோம்பலை உதறுதல் மிகமிக முக்கியம். பொறுப்புகளை நேரடியாகக் கவனியுங்கள். குடும்பத்தில் விட்டுக்கொடுத்தால், விடியல் வெளிச்சம் பரவும். வீண் சந்தேகத்தால் அதை விரட்டவேண்டாம். தம்பதியரிடையே அன்யோன்யம் உருவாகும். பெற்றோர், பெரியோரிடம் மனம்விட்டுப் பேசுங்கள். செய்யும் தொழிலில் நேரடி கவனம் செலுத்துங்கள். அரசு, அரசியலில் உள்ளோர்க்கு நிதானம் முக்கியம். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வரத்தொடங்கும். பயணத்தில் நிதானம் முக்கியம். மூட்டு, எலும்பு, சுளுக்கு உபாதைகள் வரலாம். தட்சிணாமூர்த்தி வழிபாடு தழைக்கச் செய்யும்.

மீனம்

பொறுப்புணர்வுடன் செயல்படவேண்டிய காலகட்டம். பணியிடத்தில் பொறுமையும் பொறுப்பு உணர்வும் முக்கியம். தேவையற்ற தர்க்கம் யாரிடமும் வேண்டாம். குடும்பத்தில் குதர்க்கம் தவிர்த்தால், சந்தோஷம் குடிபுகும். வேண்டாத வெறுப்பை உறவுகளிடம் காட்டவேண்டாம். சுபகாரியங்களில் ஆடம்பரம் தவிருங்கள். வாழ்க்கைத்துணையின் ஆலோசனைகளைக் கேளுங்கள். செய்யும் தொழிலில் நிதானமே நல்லது. வர்த்தகக் கடனில் அலட்சியம் வேண்டாம். அரசு, அரசியலில் உள்ளோர் தலைக்கனம் தவிருங்கள். கலை, படைப்புத் துறையினர் சலிப்பைத் தவிருங்கள். பயணத்தில் உடைமை பத்திரம். மன அழுத்தம், ஒற்றைத் தலைவலி, காது உபாதைகள் வரலாம். ஏழுமலையான் வழிபாடு ஏற்றம் தரும்.



லைட்ஸ் ஆன் சுனில் 2.0

'மமிதா, கயாடு, ருக்மணி, பாக்யஸ்ரீன்னு கன்னடத்திலிருந்தும் கேரளாவிலிருந்தும் பைங்கிளிகள் தமிழ்நாட்டுக்குப் படையெடுத்து வந்ததில் காணாமல் போனவர்கள் பட்டியலில் நடுவில் இருப்பவர் நடை, இடை, உடை அழகி பிரியா பவானி சங்கர். தன் கல்லூரிக் காதலனைக் காப்புக் கயிறாகக் கையில் கட்டி, ஒரு பாதுகாப்பு வளையத்திற்குள் பம்பரம் விட்டுக் கொண்டிருந்தவரை, 'வெளிமாநிலத்திலிருந்து வந்த வெடித்த மாதுளைகள் ஜூஸ் போட்டுவிட்டன...' என உடுக்கையை ஓங்கி அடிக்கின்றனர் கோலிவுட் கோடாங்கிகள்.

'வந்தவர்கள் எல்லாருமே பிரியாவைவிட குட் லுக்கிங், பெட்டர் டேலன்ட் என்று சொல்ல முடியாவிட்டாலும், காற்றடிக்கிற பக்கம் கழுத்தைச் சாய்த்து, மெல்லக் குனிந்து, முடியைக் கோதி, வியர்வையை விரட்டத் தெரிந்தவர்கள்... போட்டி பலமான பின் பிரியாவும் கொஞ்சம் இறங்கி வந்து ஏற்ற இறக்கங்களை, வளைவு நெளிவுகளை இன்ஸ்டாவில், இம்பாக்ட் சப் மாதிரி இறக்கிவிட்டுப் பார்த்தார். பம்பரம் ஏனோ சுத்தவில்லை. இதற்கு மேலும் முட்டி போட்டுப் பாடம் படிக்கவோ, விரல் வலிக்க வீட்டுப் பாடம் எழுதவோ அம்மணியும் மனதளவில் தயாரில்லை' என வெத்திலையில் கை படாமல் மை தடவிக் குறியும் சொல்கின்றனர் கோடாங்கிகள்.

wet diaries telling good stories



சுகர்...

காதல் கசக்குதய்யா... கல்யாணம் அதைவிடக் கசக்குதய்யா..! ஹன்சிகாவும் ஹாஃப் சுகர் போட்டாவது ஒரு டீ கிடைக்குமான்னு பார்க்கிறார். நாக்குல படறதெல்லாம் 'ச்சீ... ச்சீ...'ன்னு புளிக்குதாம்... இல்ல, உப்பே இல்லாம சப்புன்னு இருக்குதாம்!

வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லன்னு சொன்னா, வீட்ல ஒரு ஓரமா யோகா மேட்ட விரிச்சு உட்கார்ந்து தியானம் பண்ணலாம். ஆனால், எல்லாம் இருக்கு, டேஸ்ட்தான் இல்லன்னா பட்டினியா கிடக்க முடியும்! 'போனது போகட்டும், அம்மி நல்லாத்தான் இருக்கு; குழவிய மாத்துனா குழம்பு டேஸ்ட்டாயிடும்'னு காளஹஸ்தி டு கைலாசம் பயமில்லாத பக்தியோடு அவரும் டிராவல் பண்ணிப் பார்த்துட்டார்... தேடல் தேடலாவே இருக்குதாம்; எதுவுமே தேறலையாம்!

'வேற வழியே இல்லன்னா சிம்பு மசாலா ஒரு மூட்டை வாங்கி காலத்துக்கும் காரசாரமா குழம்பு வெச்சாலும் வைக்கலாம்'னு கோலிவுட் செஃப் எல்லாம் அடுப்பைப் பத்த வைக்க, ஹன்ஸோ, 'குழம்பு கொதிக்கிறதுக்கு முன்னாடியே யாராவது கரண்டிய உள்ள விட்டா கால்ல ஊத்திருவேன்'னு நெட்டிசன்களிடம் கறாரா சொல்லிட்டாராம். எது எப்படியோ... வாழைக் காய்க்கு தோல் சீவிட்டோமேன்னு மறுபடியும் தோச மாவுல பஜ்ஜி போடாம இருந்தா சரி!

pushing hard or pulling back...
smart moves do not bring the best results



நினைத்தாலே சிலிர்ப்பாகவும் ஆச்சரியமாகவும் இருக்கிறது. எப்படி எழுதப்போகிறோம் என்ன எழுதப்போகிறோம் என்றெல்லாம் தெரியாமலேயே அடியெடுத்து வைத்த நான், இதோ இந்த இதழில் தொண்ணூற்று ஒன்பதாவது கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கிறேன். அடுத்த இதழில் நூறு!

இந்த அசாதாரணமான வெற்றிக்குக் காரணம், குமுதம் குழுமத்தின் சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குநர் திருவரதராசன் அவர்களின் ஊக்கமும், வாசகர்களாகிய உங்களது ஆதரவும்தான். அதற்கு என் நன்றிகள்.

எல்லா நலனும் தரும்
ஏற்றமிகு கோயில்கள்!
புள்ளிருக்குவேளூர்
99

இதோ இந்த இதழில் நாம் பார்க்க இருக்கும் ஆலயம், ஒவ்வொரு மனிதரும் தங்கள் வாழ்நாளில் அவசியம் தேவை என்று நினைக்கக் கூடியதை அருளும் திருத்தலம்.

தெய்வங்களிடம் பணத்தைத் தா, பதவியைக் கொடு, வீடு வாங்க வரம்தா... இப்படியெல்லாம் பட்டியல் இட்டுக் கேட்டுக்கொண்டிருந்த நமக்கு, உண்மையாகவே எதை இறைவனிடம் கேட்கவேண்டும்

என்பதை உணர்த்திய காலகட்டம், கொரோனா என்ற தொற்றுநோய் பரவியபோதுதான் என்றே சொல்லலாம்.



காரணம், அப்போதுதான் எல்லோருமே கடவுளிடம், 'தெய்வமே, எனக்கு வேறு எதுவும் வேண்டாம். நல்ல ஆரோக்கியத்தையும், தீர்க்க ஆயுளையும் கொடு'' என்று வேண்டினோம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை உணர்த்தவே கலியுகத்தில் இறைவன் ஒரு திருவிளையாடல் புரிந்தாரோ என்னவோ? அந்தக் கொரோனா காலத்தில் நாம் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து உலகமே ஒன்று சேர்ந்து ஒரு நோயை எதிர்த்துப் போராடியது, எனக்கென்னவோ வரலாற்றில் அசுரர்களை அனைவரும் ஒன்று சேர்ந்து அழித்த நிகழ்வை ஞாபகப்படுத்தியது. அவ்வாறாக ஒரு நோயோ அல்லது ஓர் இயற்கை நிகழ்வோ நிகழ்ந்தால்தான் நாம் அனைவரும் ஒன்று கூடுகின்றோம் என்பது போய், எப்போதும் அனைவரும் ஒன்றாகவே இருந்து ஜாதி, மத வேறுபாடு இன்றி அனைவரும் ஒற்றுமையாக மனித குலத்தைக்



உடல்நோயும் மனநோயும் தீர்க்கும் வைத்தீஸ்வரன்!

காக்க வேண்டும் என்பதே இறைவன் நமக்கு உணர்த்தும் பாடமாக இந்தக் கொரோனா காலம் உணர்த்தியதாக நான் கருதுகின்றேன்.

கொரோனா காலத்தில் ஏழை, பணக்காரன் என்று எந்த வித்தியாசமும் இல்லாமல், அனைவருக்கும் ஒரே வகையான மருத்துவம்தான். ஜாதி மதம் வெவ்வேறாக இருந்தாலும் அனைவருக்கும் ஒரே மருத்துவ முறைதான். நாம் மனித நேயத்தோடு ஒன்று கூடி ஒருவருக்கொருவர் இறைவழிபாடு செய்து அவரவர் வீட்டில் இருந்தபடியே அனைவருக்காகவும் பிரார்த்தித்த நாள்களை நினைவுகூர்ந்துதான் ஆகவேண்டும்.

வைத்திய சாஸ்திர நூலான ‘சரக சம்ஹிதா’ என்கிற புராதனப் புத்தகத்தில் இத்தகைய தொற்றுநோய் பற்றிய ஒரு கட்டுரை உள்ளது. அதாவது, கலி முற்றும்போது, பாவத்தைத் தாள முடியாமல், தெய்வங்கள் எல்லாம் தங்கள் கதவை அடைத்துக் கொள்வார்கள். எந்த மருந்தும் வேலை செய்யாமல் போகும். மக்கள் கூட்டம் கூட்டமாக மாள்வர் இன்னதென்று சொல்ல முடியாத நோய்கள் எல்லாம் வந்து சேரும். என்றெல்லாம் அதில் கூறப்பட்டுள்ள அத்தனையையும் நாம் கண்கூடாகப் பார்த்தோம்.

அந்த சமயத்தில் அனைவருமே உணர்ந்த விஷயம் என்ன என்று பார்த்தால், நோய் என்று ஒன்று வந்தால் நம் வாழ்வே தலைகீழாக மாறுகின்றது.



நாம் சேர்த்து வைத்த பணமோ, பெயரோ அல்லது அதிகாரமோ எதுவும் நமக்கு உதவுவதில்லை. நாம் செய்த புண்ணிய காரியங்கள்தான் நம்மைக் காக்கின்றன. அவைதான் கூடவே வருகின்றன என்பதுதான்.

பாடம் புகட்டிட இப்படி நோயைக் கொடுத்த இறைவனே நோய்க்குத் தீர்வையும் கொடுத்தார் என்று சொன்னால், அது மிகையாகாது. ஆம், ஆவதும் அவராலே. அழிவதும் அவராலேதான் அல்லவா.

நோய்க்குத் தீர்வாக விளங்கும் இறைவனே வைத்தியநாதராக விளங்கும் திருத்தலமே இந்த இதழில் நாம் காண இருக்கும் ஆலயம். இறைவன், மக்களின்

சர்வ பிணிகளையும் நீக்கிடும் மருத்துவராக விளங்கும் தலங்கள் பல உண்டு. அவற்றுள் தொன்மையானது, புள்ளிருக்குவேளூர் என்கிற வைத்தீஸ்வரன் கோவில்.

கும்பகோணத்துக்கு அருகில் அமைந்துள்ள இந்தக் கோயிலுக்கு அருகில் பஞ்ச ஆதி வைத்தியநாதர் க்ஷேத்ரமும் அமையப் பெற்றிருக்கின்றது.

வைத்திய சாஸ்திரத்திற்கே தலைமையானவராகிய தன்வந்திரியின் ஜீவசமாதி இங்கேதான் உள்ளதாக, தல வரலாறு கூறுகின்றது.

இப்போது ஆலயத்தின் மகத்துவத்தைக் காணலாம்.

அப்பராலும் சம்பந்தராலும் பாடப் பெற்ற இத்திருத்தலத்திற்கு, புள்ளிருக்கு வேளூர் என்ற பெயரும் உண்டு. புள் என்றால் பறவை என்று அர்த்தம். இங்கு பறவையாகிய ஜடாயு, வைத்தியநாதரை வணங்கி அருள் பெற்றதாக வரலாறு கூறுகின்றது.

இருக்கு என்பது, ரிக் வேதத்தை குறிக்கும். வேள் என்றால் முருகன். ஊர் என்றால் புனிதத் தலம். ஆக மொத்தமாக, புள் இருக்கு வேள் ஊர் என்பது, ஜடாயு, ரிக்வேத மூர்த்தி, முருகப் பெருமான் ஆகியோர் இறைவனை வணங்கிய தலம் என்று உணர்த்துகிறது. இதில் ஊர் என்பதை சூரியன் என்றும் சூரியனும் இத்தலத்து இறைவனை வணங்கியிருக்கிறார் எனவும் கூறுவர்.

இத்தலத்தில் அருளும் இறைவன், தானே மருத்துவராக மாறி பக்தர்களின் நோய் தீர்க்கும் தலமாகக் கூறப்படுகிறது. இதனால், புள்ளிருக்கு வேளூர் என்ற இத்தலத்தின் புராதனப் பெயர் இன்று, வைத்தீஸ்வரன் கோவில் என்றே வழங்கப்படுகிறது.



இத்தலத்தின் தீர்த்தத்தில் வெல்லம் கரைத்து வழிபடுவது மிகச் சிறந்த நோய் தீர்க்கும் பரிகாரமாகக் கருதப்படுகிறது. மேலும் உப்பு, வெல்லம் வாங்கி இறைவனிடம் சமர்ப்பித்து, பின்னர் அதை நாம் உண்டால் நம் உடலில் உள்ள எல்லா நோய்களும் அதோடு மனநோய்களும் சேர்ந்து நீங்கும் என்பது நம்பிக்கை.

இறைவன் தண்டிப்பவன் அல்ல, காத்து ரட்சிப்பவன், குணப்படுத்துபவன்

என்ற சைவ சிந்தனையின்படி இங்கு அவரே மருத்துவராக விளங்கிய தலம். ஒருசமயம், தேவர்கள் சிவபெருமானின் துணை இல்லாமல் அசுரர்களுடன் போரில் ஈடுபட்டனர். அந்தப் போரில் தேவர்கள் கடுமையாகக் காயமடைந்தனர். அவர்களின் வேதனையைப் பார்த்த சிவபெருமான் மனம் இளகினார். ஆயுதம் ஏந்திய வீரராக அல்லாமல், மருத்துவராகத் தோன்றினார். காயமடைந்த தேவர்களுக்கு மருந்தளித்துக் காத்ததால், அவர் வைத்தியநாதர் என்று போற்றப்பட்டார்.

தையல் நாயகி அம்பாள் இறைவன் உடனிருந்து பக்தர்களைக் கருணை மிக்க தாயாகக் காப்பவள்.



அடுத்த நூறாவது கட்டுரையில் இந்த வைத்தியநாத சுவாமி அதாவது புள்ளிருக்கு வேளூரில் உள்ள வைத்தியநாத சுவாமிக்கும் இன்னொரு முக்கியமான ஆலயத்திற்கும் உண்டான தொடர்பை எழுத இருக்கின்றேன். அது உங்களை நிச்சயம் ஆச்சரியத்தில் ஆழ்த்தும். இறைவன் அருள் மழையில் நனையச் செய்யும்.

உடல் நோய், மன நோய், ஆன்மா நோய் அனைத்தையும் தீர்த்தருளும் அம்பிகையாகத் திகழ்பவள்.

தல மரபின்படி, மருந்தை தைலத்தைத் தயாரித்து வைத்தியநாதரிடம் அளிப்பவளும், செல்வமுத்து குமார சுவாமிடம் தருபவளும் பக்தர்களைத் தாய் போல் காப்பவளான தையல் நாயகிதான். அதனால்தான் இத்தலத்தில் வைத்தியமும் தாய்மையும் ஒன்றாகப் போற்றப்படுகின்றன.

வைத்தீஸ்வரன் கோயிலில் முருகப் பெருமான், செல்வமுத்து குமாரசுவாமியாக அருள்கிறார். பொதுவாக குழந்தை முருகனின் அழகைப் பலரும் பாடியுள்ளனர். ஆனால், இத்தலத்தில் முருகன் வெறும் பாலகன் அல்லன். தந்தையின் மருத்துவப் பணியில் பங்கேற்கும் அருள் வடிவமாகவே பக்தர்கள் அவரைக் காண்கின்றார்கள்.

குமரகுருபரர் எழுதிய, முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழில் 'ஆடிய கால் ஆனைக் காலாகுக' என்ற வரி தமிழ் இலக்கியத்தில் தந்தையின் நலனுக்காக மகன் கூறும் வார்த்தையாகப் போற்றப்படுகின்றது. சில தல மரபுகள் உலகம் அதிரும்

வகையில் சிவபெருமான் ஆடியபோது நிகழ்ந்த சம்பவங்களையும் பின்னர் முருகன் தந்தையின் நலனுக்காக அருள் புரிந்ததையும் கூறுகின்றன. இத்தகைய மரபுகள் இன்றும் கோயில் வழக்காற்றில் உயிருடன் வாழ்கின்றன.

இங்கு கொடுக்கப்படும் திருச்சாந்து உருண்டை மிகவும் விசேஷமானது. இது வைத்தியநாதரின் அருள் மருந்து. இங்குள்ள சித்தாமிர்த தீர்த்தத்தில் நீராடி, வைத்தியநாத ஸ்வாமி, தையல்நாயகி அம்மை, செல்வமுத்துக்குமார ஸ்வாமி, தன்வந்திரி ஆகியோரின் அருட் கடாட்சம் பெறுபவர்கள் எத்தகைய நோயில் இருந்தும் குணமடைவார்கள் என்பது நம்பிக்கை. செவ்வாய் ஆகிய அங்காரகனுக்கும் இங்கே தனி விசேஷம் உண்டு.

இன்றைய உலகம் மருத்துவத்தில் அபார முன்னேற்றம் கண்டுள்ளது. ஆனால் மன அழுத்தம், தனிமை, பயம், நம்பிக்கையின்மை ஆகியவை அதிகரித்துள்ளன.

வைத்தீஸ்வரன் கோயில் நமக்குச் சொல்லும் செய்தி மிக எளிமையானது. மருந்து உடலைக் குணப்படுத்தும். அன்பு மனதைக் குணப்படுத்தும். இறை நம்பிக்கை வாழ்க்கையை முழுமையாக்கும். அதனால்தான் ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் வைத் தீஸ்வரன் கோயில் இன்னும் மக்களின் இதயத்தில் ஓர் ஆலயமாக மட்டுமல்ல, உலகின் முதல் மருத்துவமனையாகவும், இறைவனே மருத்துவராக அமர்ந்திருக்கும் அருள் நிலையமாகவும் திகழ்கின்றது.

இயன்றவர்கள் இத்தலம் சென்று வணங்கி, வைத்தீஸ் வரன் அருட்கடாட்சம் பெற்று வாழ்வில் நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் என்ற கூற்றுக்கேற்ப வாழ்வோம்.

செல்ல இயலாதவர்கள் அவரவர் வீட்டிலிருந்தே வைத்தியநாத அஷ்டகமோ, பதிகமோ பாடலாம். மேலும் எண்ணற்ற வைத்தியநாத க்ஷேத்ரங்கள் நம் பாரத நாட்டில் உள்ளன. எந்தத் தலமானாலும் இறைவன் ஒருவரே. அவரே மருத்துவராகத் திகழும் மகத்துவம் மிக்கவர். அதை உணர்ந்து வணங்குவோம். நலமும் வளமுமாக வாழ்வோம்.

எங்கே இருக்கு?

சீர்காழியில் இருந்து சுமார் எட்டு கி.மீ. தொலைவில் இருக்கிறது கோயில். சீர்காழி மயிலாடுதுறை சாலையில் உள்ளது.

தரிசன நேரம்?

காலை 6 - மதியம் 1

மாலை 4 - இரவு 9

நான் இருக்கேன்!

ஜெயாப்ரியன்

மகாபெரியவாளோட படங்கள்ல, 'நா(ன்) இருக்கேன்'னு ஒரு வாசகம் இருக்கும். அதாவது, நீ கவலைப்படாதே! நான் இருக்கேன்னு அர்த்தம். சன்யாசியான பெரியவா, தன்னைத் தானே அத்தனை பெருமையா சொல்லிண்டிருப்பாரா என்ன?

இதுக்கு விடை, அவர் அப்படி எதுவுமே சொல்லலைங்கறதுதான். அப்புறம் எப்படி அந்த வாசகம் வந்துது?



ஒருசமயம், மகா பெரியவா முன்னிலையில உபன்யாசம் ஒண்ணு நடந்துது. அதுல நரசிம்ம அவதாரத்தைப் பத்தி, விஸ்தாரணமா சொல்லிண்டு இருந்தார், உபன்யாசகர். அதுல, பிரஹலாதன், பகவான் தூண்லயும் இருப்பான் துரும்புலயும் இருப்பான்னு சொன்னதும், இரண்யகசிபு ஒரு தூணை அடிச்சு உடைச்சான், அதுல இருந்து பகவான் நரசிம்மரா வெளிப்பட்டு, இரண்யனை அழிச்சார்னு சொன்னார்.

உபன்யாசம் முடிஞ்சதும், அவரை ஆசிர்வதிச்ச பெரியவா. "ஒனக்கு ஒரு விஷயம் தெரியுமோ? தன்னை முழுசா நம்பற பிரஹலாதனுக்கு ஏமாற்றம் வந்துடக் கூடாது. இரண்யகசிபு எந்தத் தூணை உடைச்சாலும் அதுல தான் இருக்கணும்னு, பகவான் அந்த அரண்மனைல இருந்த எல்லா தூண்லயும் நிறைஞ்சு இருந்தாராம். எதுலயோ படிச்சேன். இதையும் சேர்த்து சொல்லு சுவாரஸ்யமா இருக்கும்." அப்படின்னு சொல்லிட்டு,

"இதை எதுக்கு சொல்லச் சொல்றேன்னா, சுவாமி இருக்கார், காப்பாத்துவார்னு முழுசா நம்பறவாளை சுவாமி எந்த சூழல்லயும் கைவிட மாட்டார்ங்கறதை எல்லாரும் புரிஞ்சுக்கணும்கறதுக்காகத்தான்."

மகா பெரியவா சொன்னதோட அர்த்தத்தைப் புரிஞ்சுண்டதோட அடையாளமாத்தான், அவரைப் பரிபூரணமா நம்பறவா எல்லாரும், அவரே அப்படிச் சொல்ற மாதிரியான வாசகத்தைப் போட்டுக்கறா!

கண்டுபிடியுங்கள்





6 வித்தியாசங்கள்

விடைகள்: 82-ம் பக்கம்

"தலைவரே, நம்ம கட்சியோடு கூட்டணி வெச்சிருந்த எல்லாக் கட்சிகளும் எதிரணிக்குப் போயிட்டாங்க; இப்ப என்ன பண்ணலாம்?"

"நானும் அங்க வரேன்னு சொல்லிடுப்பா!"

– ஆர்.எஸ்.மனோகரன், முடிச்சூர்.



அதிதி

கடந்த இதழில்...

'தாமிரபரணி ஆற்றில் மூன்று முறை மூழ்கி எழுந்து, உனக்கு நல்வாழ்வை அருள வேண்டிக்கொள்!' என்று அம்மா வளர்மதி சொல்ல, தன் முன் அமைதியாக ஓடும் தாமிரபரணி ஆற்றை ஒருமுறை ஆழ்ந்து பார்த்தாள், அதிதி.

கலைமாமணி, முனைவர் **சாந்தகுமாரி சிவகடாட்சம்**



‘அம்மா தாமிரபரணி..! பெருமை வாய்ந்தவளே. பழைமையின் சின்னமே, தமிழர் நாகரிகத்தின் வித்தே! காரையாறு, சேர்வலாறு, மணி முத்தாறு, கடனா நதி, பச்சையாறு, சிற்றாறு போன்ற துணையாறுகளின் துணை கொண்டு வற்றாத ஜீவநதியாக ஓடுபவளே... உன்னில் மூழ்கி எழ விழைகின்றேன். எனக்கு நல்வாழ்வு அருள்வாய் அம்மா!’ என்று மனமுருகி வேண்டியபடி, அதிதி ஆற்றில் மூன்று முறை மூழ்கி எழுந்தாள்.

ஓவியம்: ஸ்யாம்

109

மங்கள வாத்தியங்கள் முழங்கின. மூழ்கி வெளிவந்த மகளை அன்புடன் அரவணைத்து, ஆற்றங்கரையில் போடப்பட்டிருந்த மணையில் அமர வைத்தாள், வளர்மதி.

“திலகவதி, இப்படி வாங்க! உங்க மகளுக்கு உங்கள் கையால் மஞ்சளைப் பூசுங்க’’ என்று அரைத்த மஞ்சளை நீட்டினாள், வளர்மதி.

பதறிப் போனாள் திலகவதி. “இராணியாரே, நீங்கள் முதலில் பூசுங்கள்.”

“இல்லை திலகவதி, நீதான் அதிதியைப் பெற்ற தாய். முதலில் அவளுக்கு மஞ்சளைப் பூசத் தகுதி பெற்றவள் நீதான். பிறகுதான் நான் பூசுவேன்.”

“ஆமாம், இரண்டு பேரும் ரொம்பத்தான் அலட்டிக்கிறீங்க’’ என்று மோகனா பொருமினாள். ‘முறை தவறி நடக்கும்

கல்யாணம். இதுக்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம்! சனியன் வேத்து நாட்டுக்கு ஒழியுது. பிறகாவது என் பெண்களுக்கு நல்வாழ்வு கிட்டுமா, வளர்மதியின் மனதில் இடம் பிடிப்பார்களா, ஊம்... பொறுத்திருந்து பார்க்கிறேன்; அதற்கான முயற்சிகளில் இறங்குவேன்' என்று எண்ணியவாறு, தன் முறை வந்ததும் போலிச் சிரிப்பை முகத்தில் ஏந்தியபடி அதிதிக்கு மஞ்சளைப் பூசினாள்.

சடங்கு முடிந்ததும், திரும்பவும் அதிதி தாமிரபரணியில் மூழ்கி எழுந்தாள். முன்பு வெண்ணிலாவாக ஜொலித்தவள், இப்போது எழும்பும் சூரியனோடு போட்டி போட்டாள், அவன் நிறத்திற்கு இணையாக ஆனாள்.

மஞ்சள் பூச்சு விழா முடிந்ததும் பல்லக்குகள் அரண்மனையை நோக்கி விரைந்தன. போகும் வழியெல்லாம் மங்கள கீதங்கள் முழங்கப்பட்டன.

அலிமா தன்னுடைய வலது கையைப் பார்த்தாள். அதிதிக்குப் பூசிய மஞ்சள் நிறம் அங்கே குடிகொண்டிருந்தது. இங்கே கொற்கையில் இது போன்ற திருமணங்கள் நடைபெற்றுத்தான் வருகின்றன. ஆனால், மணப்பெண் இஸ்லாமிய மதத்திற்கு மாறிய பிறகுதான் திருமணம் நடக்கும். இந்தத் திருமணத்தில் எல்லாம் தலைகீழாக நடக்கிறது. எல்லாம் இந்த மாலிக்கினால் வந்த வினை!

எகிப்துக்கு இவர்கள் தம்பதியராகப் போகும்போது, என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ தெரியவில்லையே!

'ஹே அல்லாவே, நீயே துணை! இவர்களை நல்லவிதமாக வாழ விடு!' என்று அங்கிருந்த நல்லவர்களின் இதயங்கள் பிரார்த்தனையில் இறங்கின.

அதிதியின் உள்ளமோ பேரானந்தத்தில் மூழ்கியிருந்தது. தாமிரபரணிக் கரையில் வளர்ந்தவள்; நல்ல நாள் கிழமைகளில் தன்னுடைய தோழிகள் காயத்ரி, மைதிலியோடு சென்று இந்த ஆற்றில் நீந்தி மகிழ்ந்தவள்; மந்தார இலைகளினால் பின்னப்பட்ட சிறிய கிண்ணங்களினுள்ளே அகல் விளக்குகளை ஏற்றி ஆற்றில்



மிதக்கவிட்டு, பூக்களைத் தூவி வழிபட்டவள்.

அதிதி வயசுக்கு வந்தபோதும், ஆரம்பச் சடங்குகள் முடிந்ததும், அதிதியின் தாய் திலகவதி, தன் மகளை அழைத்து வந்து, இதே நதியில் நீராடச் செய்து மகிழ்ந்தாள்.

இதோ, இன்று திருமணத்திற்கு முன் நிகழும் மஞ்சள் பூசு விழாவும் தாமிரபரணிக் கரையிலேயே அமைந்தது, அதிதிக்கு மிகுந்த மனத் திருப்தியைக் கொடுத்தது.

'இனி, திருமணம் முடிந்து எகிப்து செல்லும் வரை, அடிக்கடி வந்து குளிப்பேன். நான் மட்டும் தனியாக வருவேனா? என் கணவர் மாலிக்கோடு, இருள் விலகாத வேளையிலே வந்து தம்பதியராக உன்னில் மூழ்கி எழுவோம். என்ன, தாமிரபரணித் தாயே! உனக்குச் சம்மதம்தானே?' என்று உள் மனம் கேட்ட கேள்வியை உள்வாங்கிய மூளை, அதன் பிரதிபலிப்பாக, வாயின் மூலமாகச் சிரிப்பை 'களுக்'கென்று வெளிப்படுத்தியது.

மகளோடு பல்லக்கில் வந்த திலகவதி, கண்களை உருட்டி அதிதியை முறைக்க, அவள் நாணத்தில் தலைகுனிந்தாள். திலகவதியும் இதுபோன்ற நிலைகளைக் கடந்து வந்தவள்தானே! புரிந்துகொண்டாள். ஏனோ அவள் மனம் குதூகலிக்கவில்லை. ஆனாலும், புன்னகைத்தாள்.

அன்று கோட்டை வாயிலில் குடியிருக்கும் ருத்திரா தேவி கோயிலில் விசேஷ பூஜை செய்யப் பட்டது. செம்பருத்திப் பூக்களைக் கொண்டு காளிக்கு அலங்காரம் செய்திருந்தார்கள். படையலிட்டு, பலவிதமான இசைக் கருவிகள் முழங்க ஆராதனை செய்யப்பட்டது.

பெருமுரசு, சிறுமுரசு, பேரிகை, உடுக்கை, மத்தளம், முரசு, தமுக்கு, உறுமி மேளம், தம்பட்டம், பறை, துடி, பம்பை, செண்டா, திமிலை, தவண்டை, மண்மேளம் என்று இதுவரை அதிதி பார்த்து, கேட்டு அறியாத பலவகை வாத்தியங்கள், வரிசை கட்டி நின்ற இசைக் கலைஞர்களால் உச்ச ஸ்தாயியில் இசைக்கப்பட்டன.

அங்கே சூழ்ந்திருந்த எல்லோர் மனதிலும் காளியே விஸ்வரூபம் எடுத்து நின்றாள்.

"பார்மஸி திறந்தீங்களே, ஏன் மூடிட்டீங்க?"

"மருந்துக்குக்கூட ஒருத்தரும் வர மாட்டேங்கிறாங்க...!"

– வி.சாரதி டேச்சு, சென்னை-5.

'அம்மா தாயே, என் மகளின் திருமண வாழ்க்கை சிறக்க வேண்டும். அவள் பல்லாண்டுக் காலம் எல்லா நலனும் பெற்றுத் தன் கணவருடன் நல்வாழ்க்கை வாழ வேண்டும்' என்று திலகவதி நெஞ்சுருக வேண்டினாள்.

வளர்மதியோ, 'அம்பிகையே இந்தத் திருமணம் ஒருவிதமான தடங்கலும் இல்லாமல் நடந்தேறி, அதிதி, மாலிக்கோடு நல்ல முறையில் எகிப்தை அடைந்து, இன்ப வாழ்க்கை வாழ வேண்டும்' என்று பிரார்த்தனை செய்தாள்.

மாலிக்குக்கு இந்த அனுபவங்கள் எல்லாம் அவனை ஆச்சரியத்தின் விளிம்பிற்கே இட்டுச் சென்றன. அவன் மனதிலும் பக்தி பெருக்கெடுத்தது. எதிர்ப்புறத்தில் அதிதி நின்றிருந்தாலும், அவன் கண்கள் ருத்திரா தேவியையே பார்த்துக் கொண்டிருந்தன. அங்கே அவள் மறைந்து, அவளுடைய தாயார் யாஸ்மின்னே புன்னகையோடு நின்றிருந்தாள். அவனை அறியாமல் அவன் கரங்கள் குவிந்தன.

அடுத்து, பொன்னுருக்கல் வைபவம் தொடங்கியது. இந்துத் திருமண ஆகம மரபுச் சடங்குகளில் ஒன்று திருமாங்கல்யம் (தாலி) செய்வதற்கு உரிய தங்க நாணயத்தை ஆலயத்தில் இறைவனடியில் வைத்துப் பூசை செய்து, பின்னர், பாரம்பரியமிக்க பொற்கொல்லர் மூலம் உருவாக்கப்படுவதே பொன்னுருக்கல் ஆகும்.

மாதவன் மனம் சொல்லொண்ணா மகிழ்ச்சியில் ஆழ்ந்தது. பபைரஸ் ஓலைச் சுவடியில் தாலியைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது அவனுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

பல நூற்றாண்டுக் காலங்களாக

யார் அருந்ததி?

'அருந்ததி' திரைப்படத்தை இந்தியில் ரீமேக் செய்யும்பொருட்டு இயக்குநர் மோகன் ராஜா மும்பையில் முழு வேகத்துடன் பணியாற்றி வருகிறார். முதலில் இந்தப் படத்தில் 'அருந்ததி' நாயகி அனுஷ்காவே நடிக்கலாம் எனப் பேச்சுவார்த்தை இருந்தது. இடையில், ராஷ்மிகா மந்தனாவின் பான் இந்தியா மார்க்கெட் பெரிதாக இருக்கிறது என அவரை கமிட் செய்யலாம் எனத் திட்டமிட்டது தயாரிப்பு நிறுவனம். தற்போது, பாலிவுட் படங்களில் அதிகம் கவனம் செலுத்தும்



தாலி என்ற சொல் தமிழரின் கலாசாரத்திலேயே இல்லாமல் இருந்தது. சங்க இலக்கியத்திலும் தாலி என்ற சொல்லே இல்லாமல் இருந்தது. இந்த நிலை 10ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது.

பதினோராம் நூற்றாண்டில் கச்சியப்ப சிவாசாரியார் கந்தக் கடவுளைப் புகழ்ந்து பாடிய கந்தபுராண நூலில், 'பொற்தாலி' என்று குறிப்பிட்டிருக்கிறார். சேக்கிழார் பெரிய புராணத்தில் தாலி கட்டும் வைபவத்தைப் பற்றி விரிவாகப் பாடியிருக்கிறார். கம்பன் அவருடைய மகா காவியமான கம்பராமாயணத்தில் தாலியைப் போற்றி எழுதியிருக்கிறார்.

சேக்கிழாரும் கம்பனும் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் என்பதால், தாலி கட்டும் பழக்கம் அந்தச் சமயத்தில் இருந்திருக்கிறது.

நயன்தாராவை ஏன் அருந்ததியாக்கக் கூடாது எனப் படக்குழு யோசிக்கிறது. இந்த மூவரில் யார்தான் 'அருந்ததி' எனத் தெரிந்துகொள்ள பாலிவுட் ரசிகர்களும் ஆர்வமாக உள்ளனர். இப்படத்தின் வேலை முடிந்தால், தம்பியை வைத்து இயக்கும் 'தனி ஒருவன் 2'வுக்கான வேலையைத் தொடங்கலாம் என முடிவெடுத்திருக்கிறார் இயக்குநர் மோகன் ராஜா.

அதுபோல, கால் விரலில் மெட்டி போடும் வழக்கமும் இருந்திருக்கிறது. வால்மீகி ராமாயணத்தில் மெட்டியைப் பற்றிக் குறிப்பிட்டு, அதனுடைய மேன்மையைப் பற்றியும் வால்மீகி குறிப்பிடுகிறார்.

வானரப்படை இலங்கையிலிருந்து சீதாபிராட்டியின் நகைகளைக் கொண்டு வந்து இராமனிடம் ஒப்படைக்கிறது. சோகத்தில் ஆழ்ந்திருந்த இராமனுக்கு அந்த நகைகள் சீதாவினுடையது என்று தெரிந்திருந்தாலும், தன் தம்பி இலக்குவனை அழைத்து, அது சீதாவின் நகைகள்தானா என்று சரிபார்க்கச் சொல்கிறார்.

இலக்குவனுக்கோ குழப்பம்! நகைகளைப் பார்த்துக்கொண்டே வந்தவனுக்குச் சீதாவின் மெட்டிகளைப் பார்த்தவுடனேயே புரிந்து போனது, தன் அண்ணி சீதாவின் நகைகள்தான் அவை என்று!


இதையெல்லாம் வைணவ குலத்தைச் சார்ந்த மாதவன் படித்து அறிந்திருந்தான். மாதவனின் அம்மா, மகாலக்ஷ்மி வருடம் தவறாமல் சுமங்கலி பூஜை செய்வாள். தன் கணவன் ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழப் பிரார்த்திப்பாள்.

மாதவன் மேலும் படிக்கத் தொடங்கினான்.

– தொடரும்...

எஸ்.எஸ்.சத்யேந்திரா

கரும்பு வேலியும் வெள்ளாடும்!



தமிழர்களின் ஊனோடும் உணர்வோடும் கலந்த தைப்பொங்கல் திருநாளின் முக்கிய இரண்டு அம்சங்கள் நெல்லும், கரும்பும். இவற்றுக்கும் கடந்த சில மாதங்களாகச் செய்தி ஊடகங்களின் தலைப்புச் செய்திகளில் தவறாமல் இடம்பெற்று வரும் எத்தனால்–பெட்ரோல் மற்றும் மேகேதாட்டு அணை விவகாரத்துக்கும் தொடர்பு இருக்கிறது என்று யாராவது ஊகிக்க முடியுமா?

நெல்லும் கரும்பும் எத்தனால் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருள்கள் என்கிற அடிப்படையில் ஓர் இணைப்பு வந்துவிடுகிறது. இன்னும் திட்ட அறிக்கை தயாரிப்பு நிலையில் மட்டுமே இருக்கும் மேகேதாட்டு அணை இதில்



எங்கே வருகிறது? பார்க்கலாம்.

எத்தனால் கலந்த பெட்ரோல் உற்பத்தியை மத்திய அரசு கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பே முன்மொழியத் தொடங்கியிருந்தாலும், வளைகுடாப் போர்ச் சிக்கல்களுக்குப் பின் நம்முடைய கச்சா எண்ணெய் இறக்குமதியை ஓரளவுக்காவது குறைக்க இந்தக் கொள்கையை இன்னும் தீவிரப்படுத்தியுள்ளது என்பதை நாம் அறிவோம்.

கரும்பு மூலமாக எத்தனால் தயாரிப்பதற்கும் நெல் மூலமாக எத்தனால் தயாரிப்பதற்கும் உள்ள வித்தியாசங்களைச் சுருக்கமாக ஓரிரு வரிகளில் இப்படிச் சொல்லலாம்:

கரும்பிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்த பிறகு, மிஞ்சும் கழிவிலிருந்து (மொலாசஸ்) மேலதிகமாக எத்தனால் தயாரிக்கலாம்; இரட்டை லாபம். நெல் என்பது உணவுத் தேவை. அதை மீறி மிஞ்சிய நெல் அல்லது வீணாகும் நெல்லில் இருந்து எத்தனால் தயாரிக்க வேண்டும். அதற்காகப் புதிய கட்டுமானங்கள் தேவைப்படும். கூடுதல் உற்பத்திச் செலவு. எனவே, கரும்புக்கு முன்னுரிமை.

கரும்பு விளைவிப்பதற்குத் தேவைப்படும் நீரின் அளவு, நெல் விளைவிப்பதற்குத் தேவைப் படுவதைப்போல் ஏறக்குறைய இரண்டு மடங்கு!

இதனாலேயே கடந்த சில ஆண்டுகளாக உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற மாநிலங்கள் நெல் உற்பத்தியைக் குறைத்துக்கொண்டு கூடுதல் கரும்பு உற்பத்தியில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் கரும்பு விளைநிலப் பரப்பளவு கர்நாடகத்தில் 4.43 லட்சம் ஹெக்டேரிலிருந்து 5.40 லட்சம் ஹெக்டேராக உயர்ந்திருக்கிறது.

கடந்த ஏழு ஆண்டுகளில், மத்திய அரசின் வட்டி மானியத் திட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்ட எத்தனால் திட்டங்கள் கர்நாடகாவில் 182; தமிழ்நாட்டில் 18 மட்டுமே. இன்றைய தேதியில் கர்நாடகத்தில் இருக்கும் கரும்பு ஆலைகள் 79; தமிழ்நாட்டில்

இருப்பவை 30 மட்டுமே.

எத்தனால் உற்பத்திக்காகத் தன் வேளாண் கொள்கையைச் சிறிதும் மாற்றிக் கொள்ளாத தமிழ்நாடு, தனியாக எத்தனால் கொள்கையை வகுத்துக் கொண்டு கரும்புக்குப் பதிலாக நெல் மற்றும் வேறு தானியங்களின் மூலம் எத்தனால் தயாரிப்பதில் நீரின் தேவையைக் கணிசமாகக் குறைக்கும் முயற்சியில் இருக்கிறது.

கரும்பு இனிக்கலாம்; கரும்பு மூலம் எத்தனால் தயாரிப்பது தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வைக் கசப்பாக்கிவிடும் அபாயம் இருக்கிறது. ஒரு விளைநிலத்தில் கரும்பு விளைவிப்பதற்குத் தேவைப்படும் நீரின் அளவு, நெல் விளைவிப்பதற்குத் தேவைப்படுவதைப்போல் ஏறக் குறைய இரண்டு மடங்கு! இங்கே தான் வருகின்றன மேகேதாட்டு அணையும், அது குறித்த சச்சரவுகளுக்குப் பின்னே வேறு ஒரு விஷயம் கவனத்திலிருந்து விலகுகிறதோ என்கிற அச்சமும்.



கர்நாடகா முதலில் இந்த அணை கட்டுவதன் முக்கிய நோக்கம் நீர்மின் திட்டமே என்று தொடங்கி, மெதுவாக உபரி நீரை விவசாயத்திற்கும் உபயோகப்படுத்தலாம் என்று நோக்கத்தை விரிவுபடுத்தியது. தமிழகத்திலிருந்து வந்த எதிர்ப்புக்குப் பணிவதுபோல் 'விவசாயத்திற்கு உபயோகப்படுத்த மாட்டோம்; இந்தப் பகுதிகளின் நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்துவிட்டதால் அணையின் நீர்த்தேக்கம் அதனை ஈடுகட்ட உதவும்' என்று கூற ஆரம்பித்தது.

எத்தனால் உற்பத்தித்திறனில் இந்தியாவின் தர வரிசையில், மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசத்திற்கு அடுத்து மூன்றாவது இடத்தில் உள்ளது கர்நாடகா. மகாராஷ்டிரத்திலோ, உத்தரப்பிரதேசத்திலோ நீர்வளத்துக்குக் குறைவில்லை. ஆனால், ஏற்கெனவே காவேரி பிரச்னையில் கர்நாடகமும் தமிழ்நாடும் திண்டாட்டத்தில் இருக்கும்போது, கர்நாடகா கூடுதல் எத்தனால் உற்பத்திக்காகக் கரும்பு விளைநிலப் பரப்பளவை இருபது சதவீதத்திற்கு மேல் அதிகரிக்க வேண்டிய அவசியம்

என்ன? அங்கும் கடந்த இரண்டு வருடங்களாகப் பருவமழை பருவம் தப்பிப் பெய்வதும் பொய்த்துப் போவதுமாக இருக்கின்றது. இந்நிலையில், கரும்பு விளைநிலப் பரப்பளவை அதிகரித்து, நிலத்தடி நீரைத் தேவைக்கு அதிகமாக உபயோகித்தால், பருவமழை சரிவரப் பொழிந்தால்கூட, தமிழகத்துக்கு வர வேண்டிய நீரின் அளவு காவேரியில் கணிசமாகக் குறைவதற்கான வாய்ப்பினை மறுக்க இயலுமா?

எல்லா ஒப்புதல்களும் கிடைத்தாலும், மேகேதாட்டு அணை கட்டப்பட்டு, அதனுடைய விளைவுகள் தெரிய வருவதற்குக் குறைந்தது ஏழு முதல் பத்து வருடங்கள் ஆகும். ஆனால், இப்போது அவசரமாகத் தமிழகம் சிந்திக்க வேண்டியது, எத்தனால் உற்பத்தி என்கிற பூதம் பற்றித்தான். கர்நாடகாவில் அதன் அதிகப்படி உற்பத்தி தமிழக விவசாயத்துக்கு எந்த அளவுக்குப் பாதிப்பை உண்டுபண்ணப்போகிறது என்கிற கோணத்தில் ஆராய வேண்டியது அவசர அவசியம்.



குறைந்தது அடுத்த இருபது வருடங்களுக்குக் கர்நாடக அரசியல்வாதிகளுக்கும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கும் அரசியல் யுத்தத்திற்கு இந்த அணை விவகாரம் கணைகளை அள்ளிக் கொடுத்தவண்ணம் இருக்கும். நம் கவனம் அதில் குவிந்திருக்கும் நேரத்தில், சரிசெய்ய முடியாத பெரும்பிழைகள் சத்தமில்லாமல் நடந்துவிடக் கூடாது என்பதே நம் விழைவு.

மேகேதாட்டு என்றால் கன்னடத்தில் 'ஆட்டின் தாண்டுதல்' (Goat's leap) என்று பொருள். ஆறு மிகவும் குறுகிய ஒரு பாறை இடுக்கில் பாயும் இடமே 'மேகேதாட்டு'. தமிழில் 'வேலி தாண்டிய வெள்ளாடு' என்கிற சொற்றொடர் மிகவும் பிரசித்தம். சிறிய ஆடு என்ன செய்துவிடும் என்கிற அலட்சியத்தில் அதனைக் கட்டிப் போடாமல் வேலி தாண்டவிட்டால், வயலுக்கும் நல்லதல்ல; அந்த ஆட்டுக்கும் நல்லதல்ல!

ஆறு வித்தியாசங்கள் விடை:

1.விரல் 2.வாட்ச் 3.பேனா
4.போட்டோ 5.கொடி 6.துண்டு



நல்லது நடக்கட்டும்!

பெ.நாயகி

இன்ஸ்பெக்டர் அருண் குளித்துக் கொண்டிருக்கும்போது, அலைபேசிக்கு ஒரு செய்தி வந்த ஒலி அழைத்தது. இந்த மாதிரி சமயங்களில் அவசர செய்தியாக இருக்குமோ என்பதற்காக மாலதி அதனை எடுத்துப் பார்ப்பது வழக்கம்.

செய்தி இதுதான்:

"காவல் துறையில் நான் நம்பிக்கை வைத்துள்ள ஒரே அதிகாரி நீங்கள் என்பதால், உங்களுக்கு இத்துடன் ஒரு வீடியோ அனுப்பியுள்ளேன். அரசியல் பின்னணியும் பெரிய மனிதர்களின் ஆதரவும் உள்ள ஆணவத்தில், கடந்த மாதம் மூன்று பேர் சேர்ந்து ஒரு பெண்ணுக்கு அநீதி இழைத்துள்ளார்கள். அவர்கள் யார் என்று தெரிந்தும், காவல்துறை ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களில் ஒரு மிருகத்துக்கு நான் தண்டனை கொடுத்துள்ள வீடியோதான் அனுப்பியுள்ளேன். மிச்சமுள்ள இருவரையும் மக்களிடம் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் நிறுத்தி, குற்றவாளிகள் என்று நிரூபித்து, நீங்கள் வாங்கித் தரும் தண்டனை, இதுபோல் தவறு செய்ய முயல்பவர்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். ஒரு வாரம் பார்ப்பேன். அதற்குள் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், மற்ற இருவருக்கும் இதே கதிதான்!"

வீடியோவைப் பார்த்தாள் மாலதி. அந்தக் காமக் கொடூரன் அடித்தே கொல்லப்படும் காட்சி!

மீண்டும் செய்தியை வாசித்தாள். பூஜை அறையை நோக்கி வணங்கினாள். டெலீட் பட்டனை அழுத்தி, செய்தியையும் வீடியோவையும் அழித்தாள்.

"நல்லது நடக்கட்டும், தெய்வமே!" என்று பெருமூச்சு விட்டாள்.


OnePageStory@Kumudam.com



எவரொருவர் ஆறுதலையும் ஆனந்தக் கண்ணீரையும் ஒரே வேளையில் தருபவரோ... எவரொருவர் தாலாட்டில் துயரத்தின் சுவையையும் ஒப்பாரியில் ஆழ்ந்த அமைதியையும் வைப்பவரோ... எவரொருவரால் அரசனாகவும் ஆண்டியாகவும் ஒரே நேரத்தில் இருக்க முடியுமோ... எவரொருவருக்கு மயக்கமே தெளிவாகவும், தெளிவு ஒரு மாயையாகவும் தெரிகிறதோ...

அவரின் இயற்பெயர் முத்தையா. புனைபெயர் கண்ணதாசன்.

பகவான் ரமணரின் முகமும் கண்ணதாசனின் முகமும்



கவிஞர், திரைப்பாடலாசிரியர்
கார்த்திக் நேத்தா

கவலை இல்லாத மனிதன்!



கவியரசரைப் போற்றுவோம்!

கவியரசு கண்ணதாசனின் நூற்றாண்டு தொடங்கிவிட்டது. இதையொட்டி அடுத்து வரும் நூறு நாட்களுக்குக் குமுதம் குழுமம் அவரின் நினைவுகளிலேயே உங்களோடு சேர்ந்து திளைக்கப் போகிறது. பிரபலங்கள் பலர் கவியரசரின் நினைவுகளை, தொடர்ந்து இங்கே பகிர்ந்துகொள்ளப் போகிறார்கள்.

அந்த ரசனைமிகு கொண்டாட்டத்தில் நீங்களும் உற்சாகத்துடன் பங்கு பெறலாம்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் பத்துத் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள்.

- கண்ணதாசன் ஒரு மருத்துவர்
- கண்ணதாசன் ஒரு போராளி
- கண்ணதாசன் ஒரு காதலன்
- கண்ணதாசன் ஒரு தத்துவ ஞானி
- கண்ணதாசன் ஓர் ஆசான்
- கண்ணதாசன் ஒரு குழந்தை
- கண்ணதாசன் ஒரு தமிழ்ப் பித்தன்
- கண்ணதாசன் ஒரு தாய்
- கண்ணதாசன் ஒரு தீர்க்கதரிசி
- கண்ணதாசன் ஒரு விளையாட்டுப்பிள்ளை

எந்தப் புகைப்படத்தில் எந்த நிலையில் பார்த்தாலும் பேரமைதியை எனக்குள் பரப்பும்.

ரமணர் சும்மா இருக்கச் சொன்னவர். கண்ணதாசன் சும்மா இருக்கத் தெரியாதவர். ரமணர் தனிமையில் உலகைத் தழுவிக் கொண்டவர். கண்ணதாசன் கூட்ட இரைச்சலின் நடுவில் தனிமையை வளர்த்துக் கொண்டவர். பகவான் ரமணரோ சென்றடைய வேண்டிய உயரம். கண்ணதாசனோ அனுபவித்தே ஆகவேண்டிய துயரம்.

எனக்குத் துயரம் பதின்வயதுகளில் மிகவும் பிடித்தது. ஏன் பிடித்தது? கண்ணதாசனால் பிடித்தது.

ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் போது எனக்கொரு காதல். இப்போது அது காதல் இல்லை, வெறும் எதிர்பால் கவர்ச்சி, பெண் உடல் மீதான குருட்டுக்காமம் என்று புரிகிறது. அந்த வயதில் அந்தக் காதல் பெரும் புதையல் எனக்கு. அந்தப் புதையல் எனக்கானது இல்லை என்று தெரிந்தபோது, அழுதேன்; அரற்றினேன்; கதறினேன். அப்பொழுதில்தான் எங்கிருந்தோ பாடலாக என்னிடம் வந்தார் கண்ணதாசன். 'கண்ணே கலைமானே' என்ற பாடலைக் கேட்டு அழுகிறேன். கேட்கும் போதெல்லாம் அழுகிறேன். அந்த அழுகை பேரமைதியைத் தருகிறது. என்னவென்று புரியாத அந்த உணர்வைத் தக்கவைத்துக் கொள்ள மீண்டும் மீண்டும் 'கண்ணே கலைமானே' பாடலுக்குள் மூழ்கிப் போகிறேன். அப்படி ஓர் ஆனந்தம். அப்படி ஓர் ஆறுதல்!

தமிழைக் கொண்டாடுவோம்!



இதில் நீங்கள் தேர்ந்தெடுக்கும் தலைப்புக்கேற்ப, கண்ணதாசன் பாணியிலேயே சொல் செறிவும், பொருள் செறிவும் மிக்க பாடல் (கவிதை) அல்லது கட்டுரை ஒன்றை எழுதியனுப்பவும்.

நூறு நாட்களின் முடிவில், உங்களுடைய கவிதை / கட்டுரைகளில் சிறப்பானவை தேர்வு செய்யப்பட்டு, அவற்றுக்கு வண்ணமயமான பரிசுகள் வழங்கப்படும். இதற்கென்றே குமுதம் குழுமம் அமைக்கும் விழா மேடையில், பிரபலங்களின் கைகளால் பரிசைப் பெறும் வாய்ப்பை நீங்களும் பெறலாம்.

அனுப்ப வேண்டிய இமெயில் முகவரி:
contest@kumudam.com

தபாலில் அனுப்ப: 'கண்ணதாசன் நூற்றாண்டு',
தபால் பெட்டி எண்: 2592, சென்னை - 600 031.

- ஆசிரியர்

உங்கள் கவிதை / கட்டுரை எங்களுக்குக் கிடைக்க வேண்டிய கடைசி தேதி: 31.07.2026

தொண்ணூறுகளில் திரைப் பாடல்களை கேசட்டுகளில் பதிந்து கேட்கும் வழக்கம் இருந்தது. ஊரில் இருந்த தங்கராஜ் மாமா பாடல் பதிவுக்கூடம் சென்று கேசட் முழுக்க 'கண்ணே கலைமானே' பாடலைப் பதிந்து வந்து கேட்கத் தொடங்கினேன். கேசட்டின் ஒரு பக்கம் ஒன்பது முறையும் மறுபக்கம் ஒன்பது முறையும் ஒலிக்கும். நான் ஓராயிரம் முறை கேட்டேன். சலிக்கவே இல்லை. ஏன் அப்படி ஒரு விடாய்? இதுநாள்வரை எனக்குத் தெரியவில்லை. தெரிந்து கொள்ளும் ஆர்வமும் இல்லை.

பள்ளி நாட்களில் பாடல்களாய் அறிமுகமான கண்ணதாசன் இன்று வரை, இந்த நொடி வரை என்னை விட்டு விலகாமல் இருக்கிறார். பாடலாக மட்டும் அவர் இப்போது இல்லை; பாதை தவறும்போதெல்லாம் பக்கத்தில் இருந்து வெறுமனே பார்ப்பவராய், போதையில் ஆடும்போது 'ஆடடா, ஆடு' என்று ஆடவைத்து ரசிப்பவராய், தனிமையில் இருக்கும்போது தாங்கொணா ஞானத்துயர் தந்து தெளிவிக்கும் ஆசிரியராய், அடிக்கத் தெரியாத அன்னையாய், அடக்கத் தெரியாத அப்பனாய், யாதுமாய் இருக்கிறார் கண்ணதாசன்.

நாற்பது வயதுகளில் இருக்கும் எனக்குக் கண்ணதாசன் இன்னும் பெரும் வியப்பாகவே இருக்கிறார். ஆனால், இப்போது அவரது பாடல்களாலோ கவிதைகளாலோ குறுங்காவியங்களாலோ உரைநடையாலோ சொற்பொழிவுகளாலோ

என்னை ஈர்க்கவில்லை. அவர் வாழ்ந்த வாழ்க்கையால், கடந்து வந்த வலிகளால், இழந்த நிம்மதியால், நிம்மதி இழந்தபோதும் வாழ்வையும் மனிதரையும் வெறுக்காத உயர்ந்த தன்மையால் என்னை வியப்பில் ஆழ்த்துகிறார் கண்ணதாசன்.

கண்ணதாசன் புதிதாக எந்தத் தத்துவத்தையும் கண்டடையவில்லை. பட்டறிவின் செழித்த பழமாகிப் படிப்போர் மனங்களில் பெரும் சுவையாகச் சுரக்கிறார். கண்ணதாசன் கவிதை ஏதும் செய்யவில்லை. செய்யுள் செய்தார். செய்யுளில் யாரும் செய்யாத மனித வாழ்வின் அன்றாட வலிகளைச் செய்தார். "எப்படியெல்லாம் வாழக் கூடாதோ அப்படியெல்லாம் வாழ்ந்திருக்கிறேன். அதனால் இப்படித்தான் வாழவேண்டும் என்று சொல்லக்கூடிய யோக்கியதை எனக்கு உண்டு" என்று சொன்ன கண்ணதாசன், எப்படியெல்லாம் வாழக்கூடாதோ அப்படியெல்லாம் வாழ்ந்து மனம் மாறிய என்னைப் போன்றோருக்கு ஆசிரியராய் இருப்பது என்ன வியப்பு?

கண்ணதாசன் என்றதும் முதலில் மனதில் முகிழ்ப்பது அவரின் கனிந்த முகம். வலி கனிந்த, அனுபவம் கனிந்த, துயர் கனிந்த அந்த முகத்தைப் பார்த்தவாறே இருக்கலாம். வாழ்வின் முன் நின்று வீறமைதியில் அழும் ஒருவருக்கே அப்படி ஒரு முகம் வாய்க்கும். அழுவது என்றால் தோற்று அழுவது அன்று; அச்சத்தில் அழுவது அன்று; ஆழமாக வாழ்க்கை புரிந்துவிடும்போது ஆர்ப்பாட்டம் இல்லாமல் அகத்தில் இருந்து அருள் நிறைந்து வரும் இரக்கத்தின் அழுகை அது. நிலையாமையை உணர்ந்து நெகிழ்ந்து அன்பு காட்டும் உள்ளத்தின் அழுகை!

‘இதில் நானென்ன? அடியே நீயென்ன? ஞானப் பெண்ணே’ என்ற வரியைப் பாடியதும் தரையில் விழுந்து கத்தி அழுதார் அவர். அந்த அழுகையின் உச்சியில் அவர் காவலர் இல்லை. நான் கவிஞன் இல்லை. அங்கிருந்த யாருக்கும் அகந்தை இல்லை.

பித்தின் பெருக்கு அகத்தை அரித்துக் கொண்டு ஓடுந்தோறும், அமைதியின் அரவமில்லாத இறகு எங்கிருந்தோ பிரக்ஞையில் வந்து விழுந்தோறும், எந்த முரண் எங்கிருந்து கனன்று எரியுந்தோறும் அகத்தில் நிறைவது, வலிக்க வலிக்க வாழ்ந்து, இனிக்க இனிக்க அதை அடுத்தவர்க்கு அறிவுரையாக எடுத்துக் கூறும் ஆன்றோரின் முகம் மட்டுமே! எனக்குக் கண்ணதாசன் எப்போதும் ஆன்றோன். சான்றோன்.

கண்ணதாசன் என்னைப்

பலமுறை காப்பாற்றி இருக்கிறார். போதைப் பழக்கம் உச்சத்தில் இருந்த ஒரு காலத்தில், ஓர் இரவில் மது வெறி ஏறிக் கோயம்பேடு சாலையில் கத்திக்கொண்டு சென்ற என்னைக் காவலர் பிடித்துக் கொண்டு போய்க் காவல் நிலையத்தில் அமர வைத்தார். மது மயக்கத்தில் ஏதேதோ பாடல்கள் பாடியபடி இருந்த நான் என்ன நினைத்தேனோ, எழுந்து நின்று, 'தெய்வம் தந்த வீடு வீதி இருக்கு' என்ற பாடலை உரக்கப் பாடத் தொடங்கினேன். அங்கிருந்த பிற காவலர்கள் என்னை அடிக்கப் பாய்ந்தார்கள். உயர் அலுவலர் அவர்களை அமைதிப்படுத்திவிட்டு என்னைப் பாடச் சொன்னார்.



பித்துத் தலைக்கேறிய நிலையில் பாடினேன். பல்லவி முடிந்து சரணம் பாடும்போது, உயர் அலுவலர் தன்னையும் மீறி உடைந்து அழத் தொடங்கினார். நானும் விம்மலின் நடுவில் பாடினேன். 'ஆதி வீடு அந்தம் காடு. இதில் நானென்ன, அடியே நீயென்ன ஞானப் பெண்ணே' என்ற வரியைப் பாடியதும் தரையில் விழுந்து கத்தி அழுதார் அவர். அந்த அழுகையின் உச்சியில் அவர் காவலர் இல்லை; நான் கவிஞன் இல்லை. அங்கிருந்த யாருக்கும் அகந்தை இல்லை. அத்தனை பேரும் கண்ணதாசனின் குழந்தைகளாக இருந்தோம். உயர் அலுவலர் கொஞ்ச நேரத்தில் நிலைமை உணர்ந்து எழுந்து அமர்ந்து என்னைப் பார்த்தார். குரல் எழுப்பாமல் என்னைப் போகச் சொன்னார். நானும் கிளம்பினேன்.

கண்ணதாசன் தமிழ் இலக்கிய மரபில் திளைத்தவர். பக்தி மார்க்கத்தில் தனக்கான அமைதியைக் கண்டு கொண்டவர். சித்தர் பாடல்களின் வழி தனது திரைமொழியைக் கண்டடைந்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக இசைவழி எளிய மனிதர்களின் எளிய வாழ்வைப் பாடிக்கொண்டே இருந்த கவிக்குயில்.

அவர் ஒரு பட்டறிவுக் கவிஞன். பட்ட பாட்டை எல்லாம் பாட்டாக்கிய பாவலன். தனது தவறுகளில் இருந்து ஞானம் கற்ற சித்தன். இடைவிடாது அவரை நோக்கிப் படையெடுத்த கவலைகளைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாத மனிதன். பாமர ஜாதியில் தனி மனிதன். படைப்பதனால் அவன் ஓர் இறைவன்!

எஸ்.கல்பனா

கலைமாமணி கு.ஞானசம்பந்தன் கருவூலம்

கவிஞர் இரா.இரவி

பட்டிமன்ற நகைச்சுவைப் பேச்சாளர், பேராசிரியர், திரைப்பட நடிகர் எனப் பன்முகம் கொண்ட கலைமாமணி கு.ஞானசம்பந்தன் எழுதிய 10-க்கும் மேற்பட்ட நூல்களுக்கு மதிப்புரை வழங்கி, அவற்றைத் தொகுத்து இந்நூலாக உருவாக்கியுள்ளார் கவிஞர் இரா.இரவி.



கு.ஞானசம்பந்தன் எழுதிய 'எந்தையும் தாயும்' நூலின் மூலம் அவரின் தந்தை கு.குருநாதன் படிப்பின் மீதான ஆர்வத்தால், சொந்த ஊரில் பெரும் வசதி இருந்தாலும், மதுரைக்கு வந்து கோயில் பிரசாதத்தை உண்டு, வைகை நீரைக் குடித்து, படிப்புக்கான உதவித் தொகையாகக் கிடைத்த 10 ரூபாயில் மிச்சம் பிடித்து வேட்டி, துண்டு வாங்கி உடுத்தினார் என்ற தகவல் பிரமிக்க வைக்கிறது.

'கற்றதைச் சொல்லவா... மற்றதையும் சொல்லவா?' என்ற நூலில், ஆற்றுப்படை என்றால் என்ன என்பதை கு.ஞானசம்பந்தன் அருமையாக விளக்கியிருப்பதை, நூலாசிரியர் தன் மதிப்புரை மூலம் நாம் அறியத் தருகிறார். 'ஆற்றுப்படுத்துதல்' என்றால், வழிப்படுத்துதல் என்று பொருளாம். சங்க இலக்கியத்தில் 'பத்துப் பாட்டு' தொகுப்பில் இடம்பெறும் திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தாற்றுப்படை (மலைபடுகடாம்) ஆகிய ஐந்து பாடல்கள் இந்த வகையைச் சார்ந்தவையாம்.

இப்படி இன்னும் பல சுவாரஸ்யமான தகவல்கள் இந்நூலில் கொட்டிக்கிடக்கின்றன.

வெளியீடு: வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017. பேச: 044 - 24342810. பக்: 68. விலை: ரூ.70.

யானைக் காடு

யாழன் ஆதி

மனித குலத்தை மேம்படுத்த புத்தர் 45 ஆண்டுக் காலத்தில் 84 ஆயிரம் சொற்பொழிவுகள் ஆற்றியதாக, புத்தரின் முதன்மைச் சீடர் ஆனந்தர் பதிவுசெய்துள்ளாராம். புத்தரின் அந்த போதனைகள் பின்னர் அவரது சீடர்களால் இலைகளில் எழுதப்பட்டு, மூன்று கூடைகளில் எடுத்துச் செல்லப்பட்டனவாம். 'பிடகம்' என்றால், பாலி மொழியில் கூடை என்று

அனுபவம் புதுமை


குரு அரவிந்தன்

கனடாவில் கணக்காளராகவும் தமிழாசிரியராகவும் பணியாற்றும் நூலாசிரியர், தான் சென்ற 20 நாடுகள் பற்றிய பயணங்களை இந் நூலில் 20 கட்டுரைகளாகத் தந்திருக்கிறார். அந்தந்த நாடுகளின் வரலாற்றுத் தகவல்களையும் சேர்த்துத் தந்திருப்பது கூடுதல் சிறப்பு.

எகிப்தில் பிரமிடுகளைப் பார்க்கும்போது, அவருக்குத் தஞ்சை பெரிய கோயில் ஞாபகம் வருகிறது. நள்ளிரவில்

பொருள். ஆகவே, அவை 'திரிபிடகம்' என்று அழைக்கப்படுகின்றன.

இதில் 'சுத்த பிடகம்' என்ற தொகுப்பில் குத்தக நிகாயத்தில் இடம்பெற்ற 25 நூல்களில் ஒன்று 'தம்மபதம்'. மனிதர்கள் தம் மனதைப் பண்படுத்துவதன் மூலம் தம் வாழ்க்கையை மேம்படுத்தமுடியும் என்பதைத் 'தம்மபதம்' போதிக்கிறது. பாலி மொழியில் கவிதை நடையில் எழுதப்பட்ட தம்மபதம், வாழ்வை மகிழ்ச்சிக்கான வழியாக மாற்றும் வித்தையை எளிமையாக விளக்குகிறது.




பௌத்தத்தில் யானை ஒரு முக்கியக் குறியீடு! காட்டில் கட்டுப் பாடற்று திரியும் யானை, பாகனின் ஒரு சின்ன அங்கு சத்துக்குக் கட்டுப்பட்டு அடங்குகிறது. அது போல, மனதை நல்வழிப்படுத்தி அடக்கினால் மேன்மையுறலாம் என்கிறார் புத்தர்.

வெளியீடு: தேநீர் பதிப்பகம், 24/1, மசூதி பின் தெரு, சந்தைக் கோடியூர், ஜோலார்பேட்டை - 635851. பேச: 90809 09600. பக்: 104. விலை: ரூ.70.

பு(து)த்தகம்

சூரியன் ஒளிரும் அலாஸ்கா, அங்கு வானில் பல நிறங்களில் வர்ணஜாலம் காட்டும் வட துருவ 'நார்தன் லைட்', மற்றும் ஃபயர் வீட் என்னும் காட்டுச் செடியின் பூக்களில் தயாரிக்கும் ஜாம், ஜெல்லி, ஐஸ்கிரீம்கள் ஆகியவை படிக்கச் சுவைகூட்டுகின்றன.

போர்ச்சுக்கல்லில் உள்ள லாகோ நகரின் பிரபலமான சாண்ட்ஸ்ரீ பார்க்கில் நம்மூர் கடவுளரான சிவன், முருகன், பிள்ளையாருக்கு பிரமாண்ட செம்மண் சிற்பங்கள் இருக்கிறதாம். கிரிட் தீவில் கிரேக்கக் கடவுள் 'ஜீயஸ்' பிறந்த குகையைக் காணலாம்.



ஷேக்ஸ்பியரின் 'ரோமியோ ஜூலியட்' நாடகத்தின் நாயகி, ஜூலியட் வசித்த இல்லம் இத்தாலியில் வெரோனா என்ற ஊரில் இருக்கிறதாம். உலகப் புகழ்பெற்ற அந்த வீட்டின் பால்கனியைப் பார்ப்பதற்காகவே சுற்றுலாப் பயணிகள், குறிப்பாகக் காதல் ஜோடிகள் வந்து குவிகிறார்களாம். இதுபோல, இன்னும் பல சுவாரஸ்யமான தகவல்கள் இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

வெளியீடு: இனிய நந்தவனம் பதிப்பகம், எண் 1291, 21-வது குறுக்குத் தெரு, வாசன் வேலி, திருச்சி - 620 102. பேச: 94432 84823. பக்: 192. விலை: ரூ.200.

ஜெயச்சந்துரு





“பிரபஞ்சத்தின் ஏதோ ஒரு புள்ளியின் நீட்சியாகவும்...” - புத்தகத்தைச் சட்டென மூடி வைத்துவிட்டுப் பெரிதாகக் கொட்டாவி விட்டான், பாஸ்கர்.

டிவி சீரியல்ல இருந்து தப்பிக்கலாம்னு புக்கை எடுத்தா, இது அதுக்கும் மேல! பேசாம மொபைல்ல ஏதாவது வெப்சீரிஸ் பார்க்கலாமா, இல்ல, வெளியே போய் ஒரு ‘தம்’ போட்டுட்டு வரலாமா என்று யோசித்துக்கொண்டு இருக்கும் வேளையில், காலிங்பெல் ஒலித்தது. எழுந்து போய்க் கதவைத் திறந்தான்.

“வாட் ய சர்ப்ரைஸ்! ராகவா, வா, வா! எப்ப வந்தே அமெரிக்கா லேருந்து?!”

ராகவன் பாஸ்கரோடு பி.எஸ்ஸி-யில் ஒன்றாகப் படித்தவன். பாஸ்கர் உள்ளூரிலேயே குப்பை கொட்டிக்

கொண்டிருக்க, ராகவன் ஹையர் ஸ்டடீஸ் முடித்து, அமெரிக்கா பறந்துவிட்டான். அங்கே ஏதோ ரிசர்ச் சென்டரில் இருக்கிறான்.

"ஹாய் பாஸ்கர்! எப்படி இருக்கே?" - கேட்டுக்கொண்டே உள்ளே வந்தான், ராகவன்.

"எனக்கென்னடா, ஒண்டிக் கட்டை. என்னை விடு. நீ எப்ப இந்தியா வந்தே, இப்ப என்ன பண்ணிட்டிருக்கே?"

"இங்க வந்து ஆறு மாசம் ஆச்சுடா! இப்ப புதுசா ஒரு புராஜெக்ட் போயிட்டிருக்கு'' என்றபடி, அறையை நோட்டம் விட்டான், ராகவன்.

வழக்கமான பேச்சிலர் ரூம். சிகரெட் துண்டுகள், சரக்கு பாட்டில்கள், கொடிகளில் கன்னாபின்னா வென்று தொங்கும் பனியன்கள், லுங்கிகள், அழுக்கு ஜீன்ஸ்கள்...

"நீ மாறவே இல்ல பாஸ்கர்... ரூமை ஏன் இப்படி அலங்கோலமா வெச்சிருக்கே?"

"சுத்தம் பண்ணி வெச்சா அவார்டா கொடுக்கப் போறாங்க? என்னைக் கேக்குறதுக்கோ, என்னைப் பத்திக் கவலைப்படறதுக்கோ யாருடா இருக்கா? ஏழு கழுதை வயசு ஆச்சு, இன்னும் கல்யாணம் ஆகலே. அப்பா அம்மாவும் போய்ச் சேர்ந்துட்டாங்க. ஏதோ ஜீவனை ஓட்டிட்டு இருக்கேன்..."

"சேல்ஸ் ரெப்தானே நீ? என்ன கம்பெனி?"

"அது அப்போ! எவன் கிட்டயும் கை கட்டி வேலை பார்க்கப் பிடிக்கலைடா! அந்த வேலையை ரிசைன் பண்ணிட்டு ஷேர் மார்க்கெட்ல இறங்கினேன். நெறைய லாஸ். இப்ப நிஃப்டி, ப்ளூசிப் ஸ்டாக்ஸ்னு... சரி, அந்தக் கதை உனக்கெதுக்கு? நீ ஏதோ புது புராஜெக்ட்னு சொன்னியே, அது பத்திச் சொல்லு?"

"என்ன சொல்றது... சொன்னா உனக்குப் புரியுமான்னு தெரியலையே?"

"புரியற மாதிரி சொல்லு?"

'ம்ம்ம்...' எனச் சற்று யோசித்த ராகவன், "மனுஷனுடைய

சமந்தா காட்டில் தெலுங்கு மழை!

சில ஆண்டுகளுக்கு முன்பு சொந்த வாழ்விலும், உடல்நலத்திலும் பெரிதான மனவலிகளோடு இருந்தவர், சமந்தா. அதிலிருந்து மீண்டு வர ரொம்பவே மெனக்கெட்டார். தியானம், உணவுக்கட்டுப்பாடு, சிகிச்சை, உடற்பயிற்சி, வாசிப்பு, பயணம் எனப் பல விஷயங்கள் அவருடைய அடுத்தகட்ட இலக்கை நோக்கிப் பயணிக்க உதவியாக இருந்தன. அதைத் தொடர்ந்து, நாயகியை மையமாக வைத்து உருவாகும் படங்களில் நடிப்பதில் கவனம் செலுத்தி வந்தார், சமந்தா. அவரை

பெரும்பாலான கண்டுபிடிப்புகள் நேரத்தை மிச்சம் பண்றதாத்தான் இருக்கும். அதுல முக்கியமானது, டிராவலிங். ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குப் பயணம் பண்ணக்கூடிய அந்த நேரத்தைக் குறைக்கிறது ஒரு முக்கியமான விஷயம். கால்நடையா நடக்க ஆரம்பிச்சு, இப்போ ஃபிளைட்ல போய்க்கிட்டிருக்கோம். இதோட அடுத்த கட்ட வளர்ச்சிதான் எங்களுடைய ஆராய்ச்சி. அதாவது, விநாடிக்கும் குறைவான நேரத்துல ஓர் இடத்திலேருந்து இன்னோர் இடத்துக்குப் போறது...”

“கன்கார்ட் விமானம் மாதிரி புதுசா ஏதாவது...”

“இல்லை. விளக்கமாவே சொல்றேன். இப்ப நீ அனுப்புற ஒரு வாட்ஸ்அப் மெசேஜ் அடுத்த செகண்டே அமெரிக்காவில் இருக்கிற உன் நண்பனுக்குப் போய்ச் சேருதே, எப்படி?”

“எனக்கென்ன தெரியும்... அது ஏதோ ஒரு டெக்னாலஜி!”

“கரெக்ட்! எஸ்எம்எஸ், இமெயில், வாட்ஸ்அப், வாய்ஸ் காலிங், வீடியோ காலிங்னு இணையம் நமக்கு எல்லாமே கொடுத்திருக்கு. இதெல்லாமே டேட்டாதான். அந்த மாதிரி உயிருள்ள ஒரு மனுஷனையே டேட்டாவா மாத்தி, ஓரிடத்திலேர்ந்து இன்னோர் இடத்துக்கு விநாடி நேரத்துல அனுப்ப முடியுமாங்கிறதுதான் இப்போ நான் பண்ணிட்டிருக்கிற ஆராய்ச்சி!”

இமைக்கக்கூட மறந்து பார்த்தான் பாஸ்கர். “என்னப்பா சொல்றே... இதெல்லாம் சாத்தியமா?!”

“இன்னைக்குப் பயன்பாட்டுல இருக்கிற பல கண்டுபிடிப்புகள் ஒரு காலத்துல கற்பனையாக இருந்ததுதான். நீ பக்திப் படங்கள்ல பார்த்திருப்பியே, கடவுள் திடீர்னு ஓரிடத்துல தோன்றுவார்... டக்குனு மறைஞ்சு வேறோர் இடத்தில் தெரிவார். அந்தக் கற்பனையைத்தான் நாம நிஜமாக்கப் போறோம்!”

இப்போது பாஸ்கருக்கு இந்த

மையமாக வைத்து சமீபத்தில் தெலுங்கில் வெளியான 'மா இண்டி பங்காரம்' 100 கோடிக்கு மேல் வசூலான படங்களின் பட்டியலில் இணைந்தது. இது தமிழில் 'எங்கள் தங்கம்' என்ற பெயரில் டப் செய்யப்பட்டது. இதனையடுத்து, தெலுங்கில் முன்னணி நிறுவனங்கள் சமந்தாவை வைத்துப் படங்கள் எடுக்க ஆர்வமாகியுள்ளன.



ஆராய்ச்சியின்மீது ஓர் ஈர்ப்பு ஏற்பட்டுவிட்டது.

"ரிசர்ச் இப்ப எந்த அளவுல இருக்கு?"

"சக்சஸ்! ஆனா, இன்னும் ஒரே ஒரு ஸ்டேஜ் பாக்கி இருக்கு!"

"அதென்ன...?"

"இதுவரைக்கும் அனிமல்ஸை அனுப்பி செக் பண்ணிட்டோம். மனுஷனை அனுப்பலை..."

"ஏன்?"

"ஏன்னா, இது நானும் என் ஃபிரெண்டு ஷர்மிளாவும் மட்டுமே சேர்ந்து பண்ணிட்டிருக்கிற ஒரு சீக்ரெட்டான ஆராய்ச்சி! இன்னும் கவர்ன்மெண்ட்ல முறையா அனுமதி வாங்கலை. லீகலா பண்றதுக்கு முன்னாடி ஒருமுறை மனுஷனையும் அனுப்பி கன்ஃபர்ம் பண்ணிக்கிட்டா, அப்புறம் எல்லாத்தையும் ப்ராப்பரா பண்ணிடலாம். ஸோ, எங்களுக்கு நம்பகமான ஒரு மூணாவது ஆள் வேணும்..."

"ஓ... அப்போ அதுக்குத்தான் என்னைத் தேடி வந்திருக்கியா?"

"எனக்கு உன்னை விட்டா வேற யாருடா இருக்கா?! ஸ்கூல் டேய்ஸ்லேர்ந்து..."

"சரி சரி, செண்டிமெண்ட்டைப் புழியாத! நான் என்ன செய்யணும், சொல்லு?"


சொன்னான் ராகவன்.

ராகவன் வீடு. டியூப்ளெக்ஸ் டைப் வீடு. விசாலமாக இருந்தது. மாடியில் ஓர் அறை; கீழே ஓர் அறை!

"இவங்கதான் ஷர்மிளா. நானோ டெக்னாலஜியில் பிஹெச்.டி. பண்ணவங்க. இப்ப என் ஆராய்ச்சியில் இவங்க பங்கு அதிகம். வா, மேல போகலாம்!"

சுழன்று செல்லும் படிகளில் ஏறி, மூவரும் மாடி அறையை அடைந்தார்கள்.

அது ஒரு பெரிய ஹால் போல இருந்தது. சுற்றிலும் கண்ணாடிச் சுவர்கள். டிராவலிங் எக்விப்மெண்ட் முழுக்க அந்தக் கண்ணாடி அறைக்குள் வடிவமைக்கப்பட்டிருந்தது. நடுவே பாத்டப் போன்ற ஓர் அமைப்பு. அதன் மேல் நான்கு பக்கங்களிலும் எல்இடி விளக்குகள். மேலிருந்து புகையை உறிஞ்சக்கூடிய சிம்னி போன்ற ஓர் அமைப்பு. இவையெல்லாம் ஒரு கம்ப்யூட்டருடன் இணைக்கப்



பட்டிருந்தன.

"இப்ப என்ன செய்யப் போறாம்னு கொஞ்சம் டீடெய்லா சொல்லு, ராகவா... எனக்குத் த்ரில்லாவும் இருக்கு, கொஞ்சம் பதற்றமாவும் இருக்கு" என்றான், பாஸ்கர்.

"உனக்கு இப்ப 'மாலிக்யூலர் பயாலஜி', 'நானோ டெக்னாலஜி', 'செல் டிவிஷன்', 'செல் ஃப்யூஷன்' பத்தியெல்லாம் க்ளாஸ் எடுத்தா ஒண்ணும் புரியாது. சிம்பிளா சொல்றேன்... இந்த ரூம்ல என்ட்ரி பாயின்ட். கீழே இருக்கிற ரூம்ல டெஸ்டினேஷன் பாயின்ட். இங்கே நானும், கீழ் ரூம்ல ஷர்மிளாவும் இருப்போம். நடுவுல நீ டிராவல் பண்ணப் போறே. அவ்ளோதான்! ஓகே பாஸ்கர், நீ போய் அந்த பாத்டப்புக்குள் படுத்துக்கோ!"

"நீ சொன்ன மாதிரி, ஒரு செகண்ட்ல கீழ் ரூமுக்குப் போயிடுவேனா?"

"ஹாஹா... அது ஃபியூச்சர்ல சாத்தியம்தான். இப்போதைக்கு டிராவலிங் டைம் பத்து நிமிஷம்!"

"சரி ராகவா, உன் ஆராய்ச்சியில உதவினேன்கிற சந்தோஷத்தோடு போய்ப் படுத்துக்கிறேன். பணம், காசுன்னு ஏதாச்சும் தந்து என்னை கவனிப்பேயில்லே..?"

"ஹேய்... இது மட்டும் சக்சஸ் ஆச்சுன்னு வையி, நீ லட்சாதிபதிடா! அது மட்டுமில்லே, நிலாவில மொதமொதல்ல கால் வெச்ச நீல் ஆம்ஸ்ட்ராங் மாதிரி, உன்னோட பேரும் சரித்திரத்தில் நிலைச்சு நிக்கும். தைரியமா போ!"

பாஸ்கர் உற்சாகமாகச் சென்று, அந்த டப்பில் படுத்துக்கொண்டான். ராகவன் அதன் கண்ணாடி மூடியை இழுத்து மூடினான்.


"ஷர்மிளா, நீ கீழே போய் கம்ப்யூட்டரை கவனி. 'ரெடி'ன்னு மெசேஜ் அனுப்பு. நான் இங்கே ஆன் பண்றேன். ஓகேவா?" என்று அவளை அனுப்பிவிட்டு, பாத்டப்புக்குள் படுத்திருந்த பாஸ்கருக்கு தம்ஸ் அப் காட்டிவிட்டு, கம்ப்யூட்டரிடம் வந்தான் ராகவன்.

ஷர்மிளாவிடமிருந்து மெசேஜ் வந்ததும், கணினியை உயிர்ப்பித்துக் கட்டளைகள் பிறப்பித்தான். எல்இடி விளக்குகள் ஒளிரத் தொடங்கின. சில பல இயந்திர முனகல் சத்தங்கள். பாஸ்கர் சிறு சிறு துகள்களாக, மிக நுண்ணிய ஒளிப்பெட்டகங்களாகப்

"எதிரி நாட்டு அரசன் படை எடுக்கும் செய்தி வந்ததுமே, 'போர்.. போர்'னு கத்திக்கிட்டு ஓடுறாரே நம் மன்னர்... அவ்ளோ வீரமா?"

"நீ வேற! ஒளிவதற்கு வைக்கோல் போர் தேடி ஓடுறாரு!"

- எஸ்.கணேஷ், பெங்களூரு.



பிரிக்கப்பட்டான். அனைத்து ஒளித்துகள்களையும் மேலிருந்த சிம்னி உறிஞ்சிக்கொண்டது. கம்ப்யூட்டர் திரையில் அப்லோடிங் விண்டோ தெரிந்தது.

10%.. 20%... 100% இறுதியாக 'அப்லோடட் சக்சஸ்ஃபுல்லி' என்ற வாசகம் திரையில் ஒளிர, 'சென்ட்' பட்டனை அழுத்தினான். 'சென்ட்' என்று ஒளிர்ந்தது திரை.

'ஹுர்ரே' என்று கத்திக் கொண்டே கீழே இருக்கும் அறைக்கு ஓடினான், ராகவன்.

ஷர்மிளாவின் அறையிலிருந்த கம்ப்யூட்டர் திரை '1 ஃபைல் ரிசீவ்ட்' என்று காட்டியது. "சீக்கிரம் டவுன் லோடு க்ளிக் பண்ணு, ஷர்மிளா" என்று பரபரத்தான், ராகவன்.

டவுன்லோடு க்ளிக் செய்ததும், திரையில் கொஞ்சம் கொஞ்சமாக டவுன்லோடாக ஆரம்பித்தது. 10%..20%..30%..36%...85%... 86%ல் ஸ்ட்ரக்காகி நின்றது.

"என்ன ஆச்சு ராகவன், ஏன் ஸ்ட்ரக்காகி நிக்குது?'' என்று படபடத்த ஷர்மிளா, அனைத்து இணைப்புகளையும் சரிபார்த்தாள்.

"நெட் கனெக்ஷன் சரியா இருக்கா, பாரு!"

"எல்லாம் சரியா இருக்கு, ராகவ்! என்ன பிரச்னைன்னு புரியலையே?"

அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் இருவரும் திகைத்து நிற்கும் நேரத்தில், கம்ப்யூட்டர் திரையில் 'டவுன்லோடிங் ஃபெயில்டு. 'ஃபைல் கரப்டட்' என்ற செய்தி ஒளிர்ந்தது.

"அடச்சே!'' -அலுத்துக் கொண்டான், ராகவன்.

"இதோடு பதிமூணு பேரை டெஸ்ட் பண்ணியாச்சு! எங்கே தப்புன்னு கண்டுபிடிக்க முடியலையே?"

ஷர்மிளா அவனைத் தட்டிக் கொடுத்தாள். "ஈஸி மை பாய்! இந்தத் தடவை 86 பர்சென்ட் வரைக்கும் வந்துட்டோம். பாஸ்கர் மேட்டர்ல என்ன மிஸ்டேக் செஞ் சோம்னு நிதானமா உட்கார்ந்து அனலைஸ் பண்ணுவோம், வா!"

"அதுக்கு முந்தி அடுத்த 'சப்ஜெக்ட்' யாரு சிக்கறாங்கன்னு பார்க்கணும்!"

ஃபேஸ்புக், ட்விட்டரில் ஒண்டிக்கட்டை நண்பர்களைத் தேட ஆரம்பித்தான், ராகவன். ●

குமுதம் பக்தி ஸ்பெஷல்

Title Partner

GRT
G.R.Thanga Maligai
JEWELLERS
Since 1964

வழங்கும்

திருவிளக்கு பூஜை



திருவிளக்கு பூஜை குமுதம் பக்தி ஸ்பெஷல்

தோஷங்கள் நீங்கிட, மாங்கல்ய பாக்யம் கைக்கூட, மழலைப் பேறு பெற்றிட, லட்சுமி கடாட்சம், மகிழ்ச்சி என்றென்றும் நிலைத்திட, நாட்டிலும் வீட்டிலும் நிம்மதி, சந்தோஷம், உற்சாகம் நிறைந்திட...

இடம்

அருள்மிகு திரிபுரசுந்தரி அம்பாள் உடனாய ஸ்ரீ திருமாமுடீஸ்வரர் திருக்கோவில்
கலசப்பாக்கம்,
திருவண்ணாமலை – 606 751.

நாள் : **31.7.2026**
வெள்ளி
மாலை 6.00 மணி முதல்

நீங்கள் எடுத்துவர வேண்டியது - குத்துவிளக்கு, கூடத்தட்டு, பஞ்சபாத்திரம், மணி மட்டும். பூஜைக்கு தேவையான அனைத்து மங்களப் பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

முன்பதிவு செய்யுமிடம்

ஜிஆர்டி ஜுவல்லர்ஸ்
எண்: 27, திருவூடல் தெரு,
ஒயா மாடம் எதிரில்,
திருவண்ணாமலை – 606 601.
PH: 04175 - 222 515

அருள்மிகு திரிபுரசுந்தரி அம்பாள் உடனாய ஸ்ரீ திருமாமுடீஸ்வரர் திருக்கோவில்
கலசப்பாக்கம்,
திருவண்ணாமலை–606 751.

ஆலய தொடர்பு எண்:
99521 50303 (பாபு குருக்கள்)

Associate Sponsor
GOPURAM
TURMERIC POWDER + KUMKUM

முன்பதிவு அவசியம்!


அனுமதி இலவசம்

குமுதம் குத்துவிளக்கு பூஜை விபரங்கள் அறிய: **7305064573**

ETVPTIR010/KUM

ஜி.கௌதம்





ஏஐ ஓவியம்

அழகன் தமிழன் முருகன்

"இப்போது புரிகிறது தந்தையே'' என்றாள் சிறுமி.

"என்ன?" என்று கேட்டார் தந்தை.

"கொற்றவை அமைதியாக அமர்ந்திருக்கும் தெய்வமல்ல, அமைதி நிலைக்க காவல் நிற்கும் தெய்வம்."

"ஆம், கொற்றவை கொடுப்பது போரின் வெற்றி மட்டுமல்ல. பசியை வெல்லும் மனதையும், பயத்தை வெல்லும் துணிவையும், சுயநலத்தை வெல்லும் அறத்தையும்தான். அவள் கையில் இருக்கும் வேல், ஒருவரை அழிக்க அல்ல. பலரை வாழ வைக்க உயர்ந்த பொறுப்பின் அடையாளம்."

சிறுமி தொலைவில் நடந்துசென்று கொண்டிருந்த முருகனைப் பார்த்தாள். அவன் தோளில் சாய்ந்திருந்த வேல் மாலைநேர ஒளியில் மின்னியது.

["மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!"
– திருமுருகாற்றுப்படை]

அது அவளுக்கு ஆயுதமாகத் தெரியவில்லை. ஓர் இனத்தின் உயிரைப் பாதுகாக்கும் பொறுப்பாகவே இப்போது தெரிந்தது.

வாழ்ந்த வரலாறு, அழகியல் புனைவுடன்...



மே 2022.

விழுப்புரம் மாவட்டம். மேல் மலையனூர் வட்டம். பருத்திபுரம் கிராமம்.

வெயில் இன்னும் முழுமையாக வானில் ஏறவில்லை. மண்தரை மீது பிடிவாதமாய் ஒட்டிக்கொண்டிருந்தன இரவின் பனித்துளிகள்.

சுற்றிலும் வயல்கள். தொலைவில் ஒரு வேங்கை மரம். அதன் கீழ் குவிந்திருந்த உள்ளூர் பொதுமக்கள் சிலர் நடப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

மூன்று நாட்களாக அகழாய்வு நடந்துகொண்டிருக்கிறது.

மண்ணுக்குள் என்ன இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. ஆனால்... ஏதோ ஒன்று இருப்பதாக மட்டும் அனைவரின் உள்ளுணர்வும் அடித்துச் சொல்லியது.

பழைய செங்கற்கள். உடைந்த மண்பானைகள். சில இரும்புத் துண்டுகள். அவ்வளவுதான் நேற்றுவரை கிடைத்திருந்தது.

இப்போது... மண்வெட்டி வேறொரு ஒலியை எழுப்புகிறது.

டங்!

இது மண்ணின் ஒலி அல்ல. கல்லின் ஒலியும் அல்ல.

தொல்லியல் ஆய்வாளர் கையை உயர்த்தினார்... “நிறுத்துங்கள்!”

அந்த ஒரு வார்த்தை தோண்டிக் கொண்டிருந்த அத்தனை பேரின் கைகளையும் ஒரே நேரத்தில் நிறுத்தியது.

“இனிமேல் மண்வெட்டி வேண்டாம். தூரிகை போதும்.”

ஒரு சிறிய தூரிகை. ஒரு மரக் குச்சி. ஒரு மூங்கில் ஊசி. அவ்வளவுதான். மண்ணை அவர்கள் தோண்டவில்லை. தோண்டிக்கொள்ளலாமா என அனுமதி கேட்பது போலிருந்தது.

ஐந்து நிமிடங்கள்...

பத்து நிமிடங்கள்...

இருபது நிமிடங்கள்...


யாரும் பேசவில்லை. தூரிகை மண்ணை வருடும் மென்மையான ஓசை மட்டுமே கேட்டது.

“ஏதோ வடிவம் தெரிகிறது சார்.”

எல்லோரும் இன்னும் நெருங்கினார்கள்.

கருநிறக் கல் ஒன்று கலைநயத்



துடன் எட்டிப்பார்த்தது.

முதலில் தெரிந்தது ஒரு கிரீடத்தின் நுனி.

அதைச் சுற்றியிருந்த மண்ணை மெதுவாக விலக்கினர்.

பிறகு ஒரு நெற்றி.

அதன் கீழே இரண்டு கண்கள்.

அந்தக் கண்கள்... ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மண்ணுக்குள் புதைந்திருந்தது போல இல்லை. அங்கே நின்றிருந்த ஒவ்வொருவரையும் உயிரோடு பார்த்துக் கொண்டிருந்தன.

ஒரு கணம் யாருக்கும் மூச்சுவிடத் தோன்றவில்லை. மண்ணுக்குள் இருந்து எழுந்த தமிழின வரலாறு இமைக்காமல் அவர்களைப் பார்த்தது.

"இது... முருகனின் தாய், கொற்றவை!"

அந்த வார்த்தைகள் அங்கே நின்றிருந்த எல்லோருடைய உடலிலும் சொல்ல முடியாத ஒரு சிலிர்ப்பை ஓடவிட்டது.

அடுத்த சில நிமிடங்களில் மண்ணுக்குள் புதைந்திருந்த உருவம் முழுமையாக வெளியில் வந்தது.

எட்டு கரங்கள். அழகாகச் செதுக்கப்பட்ட மகுடம். காதணிகள். இடுப்பணிகள். சிங்கத்தின் வீரத்தை நினைவூட்டும் தோற்றம்.

அளவீடுகள். புகைப்படங்கள். வரைபடங்கள். ஜிபிஎஸ் குறியீடுகள். மண்ணின் அடுக்குகள். ஒவ்வொன்றும் பதிவு செய்யப் பட்டது.

மதியம் பன்னிரண்டு மணிக்குள் செய்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை அடைந்தது.

அடுத்த சில நிமிடங்களில் சென்னையில் இருக்கும் தமிழ்நாடு தொல்லியல் துறைக்கு தகவல் சென்றடைந்தது

செய்தி ஊடகங்களுக்கும் தகவல் கிடைத்தது. அடுத்த ஒரு மணி நேரத்தில் அது பிரேக்கிங் நியூஸ் ஆனது.

செய்தியாளர்கள் நாலாபுறமிருந்தும் வந்துசேர்ந்தனர்.

தொலைக்காட்சி ஒளிப்பதிவு வாகனங்கள். புகைப்படக் கலைஞர்கள். வரலாற்று ஆர்வலர்கள். யூடியூப் சேனல்கள். அரசியல் வாதிகள். சமூக ஊடக ஆர்வலர்கள். அனைவரும் கிராமத்தில் முகாமிட்டனர்.

ஒரே நாளில் அந்தச் சிறிய கிராமம் தமிழகத்தின் கவனத்தை

ஈர்த்தது.

அடுத்த நாள் காலை. சூரியன் உதிப்பதற்கும் முன்பே அந்தக் கிராமம் விழித்தது.

பள்ளிக்குச் செல்ல வேண்டிய குழந்தைகள் தங்கள் கைகளில் செல் போனைப் பிடித்துக் கொண்டு நின்றனர். வயலுக்குப் போக வேண்டியவர்கள் கூட அன்று வயலுக்குச் செல்லவில்லை.

கிராமத்திற்குள் ஓர் இளம் செய்தியாளன் நுழைந்தான். அவன் பெயர் கார்த்திக் ஷர்மா. மும்பையில் இருந்து செய்தி



சேகரிப்பதற்காக புறப்பட்டு வந்திருப்பவன்.

கூட்டம் அதிகமாக இருந்தது. காவல்துறையினர் கயிறு கட்டி அகழாய்வுப் பகுதியைச் சுற்றிவளைத்திருந்தனர்.

கல்வெட்டு ஆய்வாளர்கள், சிற்பக்கலை நிபுணர்கள், புகைப்படங்களை ஆவணப்படுத்தும் குழு... என பலரும் பணியில் இருந்தனர்.

யாரும் எதுவும் பேசவில்லை. கண்கள். மகுடம். காதணிகள். இடுப்பணி. கரங்களில் இருந்த ஆயுதங்கள்... ஒவ்வோர் அங்குலத்தையும் அளவெடுத்துப் பதிவு செய்துகொண்டிருந்தனர்.

“நான் டாக்டர் சண்முகவேல். இந்த அகழாய்வின் ஆலோசகர்” என அறிமுகப்படுத்திக் கொண்டார் ஒரு முதியவர்.

கார்த்திக் ஷர்மா கைகுலுக்கினான்.

“சார், சில கேள்விகள்...”

“கேளுங்கள்.”

“இது உண்மையிலேயே மிகப் பெரிய கண்டுபிடிப்பா?”

அவர் அவனை சில நொடிகள் பார்த்தார். பிறகு சிரித்தார்.

“நீங்கள் என்ன பார்க்கிறீர்கள்?”

“ஒரு சிலை.”

“நான் ஒரு சிலையைப் பார்க்கவில்லை.”

“அப்படின்னா?”

“நான் தமிழர் மரபின் அடையாளத்தைப் பார்க்கிறேன்.”

கார்த்திக் ஷர்மா குறிப்பேட்டைத் திறந்தான்.

“இந்தச் சிலை எந்தக் காலத்தைச் சேர்ந்தது சார்?”

“பல்லவர் காலம். சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகள்.”

“இதுதான் நமக்குக் கிடைத்திருக்கும் முதல் கொற்றவை சிலையா?”

சண்முகவேல் மறுபடியும் சிரித்தார்.

“இது நமக்குக் கிடைத்திருக்கும் இன்னொரு கொற்றவை மட்டுமே.”

அவர் தன் கைப்பையைத் திறந்தார். அதிலிருந்து பழைய புகைப்படங்கள் சிலவற்றை எடுத்து தரையில் வைத்தார்.

“இவற்றைப் பாருங்கள்.”

முதல் படம். கடலை நோக்கி நின்ற பாறை.

“இது மாமல்லபுரம். இங்கே பல்லவர்கள் பாறையிலேயே கொற்றவையை உயிரோடு நிறுத்திவிட்டார்கள்.”

இரண்டாவது படம்.

“விழுப்புரம் மாவட்டத்தின் கீழவாம் பூண்டி. ஒரு பெரிய பாறையின் அடியில் கிடைத்தாள். மண்ணோடு பாதி புதைந் திருந்தாள். மக்கள் பல ஆண்டுகள் அதை சாதாரணக் கல் என்று நினைத்திருந்தார்கள். ஒருநாள்... மண் விலகியது. வரலாறு வெளிவந்தது.”

மூன்றாவது படம்.

“உளுந்தூர்பேட்டையில் கிடைத்த சிலை... எட்டு கரங்கள்.”

கல்பட்டு சிறுவாக்கூர், சின்னசேலம், நேமூர், ஒரத்தூர், மொளசூர், இராசபாளையம், செஞ்சி, கள்ளக்குறிச்சி, பேரணி, செக்கானூரணி, சாளுவன்குப்பம், திருச்சி மலைக்கோட்டை, புதுக்கோட்டை,



மேல்மலையனூர், ஓங்கூர்... பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட வீரத்தாய் உருவங்களின் புகைப்படங்களை தரையில் அடுத்தடுத்து வைத்தார் சண்முகவேல்.

“சார்... தமிழ்நாட்டில் மட்டுமே இவ்வளவு கொற்றவைச் சிற்பங்கள் கிடைச்சிருக்கா?”

சண்முகவேல் முழங்கா லிட்டு அமர்ந்தார். ஒரு பிடி மண்ணை அள்ளினார்.

“இந்த மண்ணில்... சோழர்கள் நடந்தார்கள். பாண்டியர்கள் உலவினார் கள். பல்லவர்கள் தடம் பதித்தார்கள். அதற்கு முன்னால் சங்கத் தமிழர்கள் வசித்தார்கள்.

அவர்கள் எல்லோருக்கும் முன்பே... ஒரு தாய் வாழ்ந்தாள். அவள்தான்... கொற்றவை.”

குறிப்பெழுதிக் கொண்டிருந்த கார்த்திக் ஷர்மாவின் கை நின்றது.

“சார்... அப்படியென்றால் கொற்றவை ஒரு கடவுளா?”

“இல்லை.”

“அப்படின்னா?”

“முதலில்... அவள் ஒரு வாழ்க்கை முறை. பிறகு... ஒரு நினைவு. அதற்குப் பிறகுதான்... ஒரு கடவுள்.”

காற்று சற்றே பலமாக வீசியது. வேங்கை இலைகள் சலசலத்தன.

மண்ணிலிருந்து மீண்டுவந்த கொற்றவையின் முகத்தில் சூரிய ஒளி விழுந்தது.

டாக்டர் சண்முகவேல் தன் குறிப்பேட்டிலிருந்து ஒரு வரைபடத்தை எடுத்தார்.

தமிழ்நாட்டின் வரைபடம். அதில் ஆங்காங்கே சிவப்பு நிறப் புள்ளிகள்.

“எந்தெந்த ஊர்களிலெல்லாம் கொற்றவை சிலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை புள்ளிகள் வைத்துக் காட்டியிருக்கிறேன், பாருங்கள்'' என்றார்.

கார்த்திக் ஷர்மா வரைபடத்தை உற்றுப் பார்த்தான்.

அவர் புகைப்படங்களை ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக அடுக்கினார்.

“இந்த மகுடத்தைப் பாருங்கள்.



இங்கேயும் இருக்கிறது. இந்தக் காதணியைப் பாருங்கள். இங்கேயும். இந்த இடுப்பணியைப் பாருங்கள். இங்கேயும். இதெல்லாம் சாதாரண ஒற்றுமையல்ல.”

அவர் குரலை மெதுவாக்கினார்.

“ஒரே கலை மரபு... பல தலைமுறைகள்... அதே சிந்தனை...”

அவனுக்குத் திடீரென்று ஒரு விஷயம் புரிந்தது.

“சார்... இதெல்லாம் ஒரே மாவட்டத்தில் இல்லை.”

“ஆமாம்.”

“ஒரே காலத்திலும் இல்லை.”

“ஆமாம்.”

“இது ஒரே ஓர் ஊருக்கான

கடவுள் இல்லை. ஒரே ஓ, அரசனின் கடவுளும் இல்லை."

"ஆமாம்" என்றவாறே வரை படத்தை மடித்தார், சண்முகவேல்.

கார்த்திக் ஷர்மா வியப்புடன் கேட்டான்.

"சார்... இன்னும் எத்தனை கொற்றவை சிலைகள் மண்ணுக்குள் இருக்கும்?"

சண்முகவேல் அவனை கண்ணுக்குக் கண் பார்த்தார்.

"எங்கெல்லாம் கொற்றவைத் தாய் உருவச்சிலைகள் கிடைத்திருக் கின்றனவோ, அங்கெல்லாம் அருகிலேயே முருகன் ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. இன்னும் எத்தனையோ முருகன் ஆலயங் களைச் சுற்றியுள்ள நிலங்கள் அகழ்வாராய்ச்சி செய்யப்படாமல் இருக்கின்றன.

கார்த்திக் ஷர்மாவுக்கு உடலெங்கும் சிலிர்த்தது.

"அப்படியென்றால்... ஒரு காலத்தில் தமிழகம் முழுவதும் ஒரே சிந்தனை இருந்ததா?"

தரையில் பரப்பி வைக்கப்பட்டிருந்த புகைப் படங்களை கும்பிட்ட படியே பேசலானார் டாக்டர் சண்முகவேல்... "ஒரு தவறு செஞ்சுட்டு இருக்கோம்."



"என்ன சார்?"

"மண்ணுக்குள் புதைந்திருக்கும் சிலைகளைத்தான் இதுவரையில் தேடிக்கொண்டிருக்கிறோம்."

சிறிது நேரம் அமைதி.

"இனிமேல் தேட வேண்டியது சிலைகள் இல்லை... அந்தச் சிலைகளை உருவாக்கிய தமிழனின் சிந்தனையை."

அந்த ஒரு வாக்கியம் கார்த்திக் ஷர்மா எழுதிக்கொண்டிருந்த செய்திக்கட்டுரையின் ஆரம்ப வரிகளை மாற்றியது.

வட இந்தியாவில் இருந்து வந்திருந்த செய்தியாளன் தன் குறிப்பேட்டில் எழுதியிருந்த, 'விழுப்புரத்தில் 1200 ஆண்டு பழமையான சிலை கண்டுபிடிப்பு' என்ற தலைப்பை அடித்துவிட்டு... வேறு வார்த்தைகளை எழுதினான்.

"தென்னிந்தியாவில் பிறந்தவனே முருகன். அவனே தமிழ்க்கடவுள். தமிழர்களின் தாய்க்கடவுள் கொற்றவை. இன்று மண்ணிலிருந்து எழுந்தது ஒரு சிலை அல்ல... மறக்கப்பட்ட தமிழர் மரபும் சிந்தனையும்."

வருவார்கள் வள்ளியும் முருகனும் வாராவாரம்

சரண் சரவணன்



அவருக்குள் இருந்த ஆன்மிகம் முன்னைவிட விரிவடைந்ததுதான்.

எனவேதான், ஒவ்வொரு படம் முடிந்த பின்பும் இமயமலைக்குச் சென்று, ஆன்மிக அனுபவம் பெற்றுத் திரும்புவதை வழக்கமாகக் கொண்டார், ரஜினி. அந்த வகையில் 'படையப்பா' படத்துக்குப் பின்பும் இமயமலை சென்று அமைதியாகச் சில நாட்களைக்


41



'படையப்பா' என்ற மிகப் பெரிய ஹிட்டைக் கொடுத்த ரஜினி, உடனடியாக அடுத்து ஒரு சூப்பர் படம் கொடுப்பார் என்று அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்க, ஒரு நீண்ட மௌனத்தையே பதிலாகக் கொடுத்தார், ரஜினி.

ஒரே வருடத்தில் ஆறேழு படங்கள் கொடுத்த காலம் மாறி, வருடத்துக்கு இரண்டு படங்கள் என்று குறைந்து, பின்பு இரண்டு வருடங்களுக்கு ஒரு படம், மூன்று வருடங்களுக்கு ஒரு படம் என அவர் தனது திரை உலக வாழ்க்கையைச் சுருக்கிக்கொண்டார். இதற்கு முக்கியக் காரணம்,

கழித்துவிட்டுச் சென்னை திரும்பினார். அடுத்த படத்தை ஆன்மிகத்தை முன்வைத்துதான் எடுக்கவேண்டும் என்று அப்போதே திட்டமிட்டிருந்தார். அப்படி உருவானதுதான் 'பாபா'. இந்தப் படத்தைத் தானே சொந்தமாகத் தயாரித்தார், ரஜினி.



வேட்டையனின் லக லக லக..!

இதன் கதை, திரைக்கதையை ரஜினியே எழுத, வசனத்தை எழுத்தாளர் ராமகிருஷ்ணன் எழுதினார், இயக்கம் சுரேஷ் கிருஷ்ணா.

ஆன்மிகத்தைத் தேடி ஓடிக்கொண்டிருக்கும் ஒருவனை வலுக்கட்டாயமாகத் திருப்பி, அரசியல் சுழலுக்குள் கால் பதிக்க வைக்கும் காலத்தின் கதைதான் 'பாபா'.

'ஃபர்ஸ்ட் லுக்' போஸ்டரில் ரஜினி காட்டிய பாபா முத்திரை இந்தியா முழுக்கப் பிரபலமானது. இன்னொரு பக்கம், தலையில் ஒரு முண்டாசு மாதிரி கட்டிக்கொண்டு, கழுத்தில் ருத்ராட்ச மாலையும், வாயில் புகையும் பீடியுமாக இருந்த ரஜினியின் தோற்றம் ரஜினி ரசிகர்களுக்கு ஏமாற்றம் தருவதாக இருந்தது.

போதாக்குறைக்கு அச்சமயம் பெங்களூரு சென்ற ரஜினி, அங்கு நடந்த 'அப்பு' என்ற படத்தின் 'சக்சஸ் மீட்'டில் கலந்து கொண்டார். அது கன்னடத் திரையுலக ஜாம்பவான் ராஜ்குமாரின் மகன் புனித் ராஜ்குமார் நடித்த திரைப்படம். அந்த

விழாவில் ரஜினி பேசும்போது, சந்தன வீரப்பனைக் கடுமையாகத் திட்டித் தீர்த்தார். இது பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரான ராமதாஸைக் கொதிப்படைய வைத்துவிட்டது. வீரப்பனின் தீவிர ஆதரவாளரான அவர், தான் கலந்துகொள்ளும் அத்தனை அரசியல் மேடைகளிலும் ரஜினியைத் தாக்கிப் பேசினார். 'பாபா படம் வரட்டும், நாங்கள் யார் என்று காட்டுகிறோம்' என்று பா.ம.க-வினரும் சவால் விட்டார்கள். ரஜினி தனது கலை உலக வாழ்க்கையில் இவ்வளவு பெரிய எதிர்ப்பைச் சம்பாதித்தது அதுவே முதல்முறை!

'பாபா' பட போஸ்டர்கள் கிழிக்கப்பட்டன. தியேட்டர் வாசலில் இருந்த ஆளுயர கட்-அவுட்டுகள் அடித்து வீழ்த்தப்பட்டன. சில தியேட்டர்களில் ஓடிக்கொண்டிருந்த 'பாபா' படம் நிறுத்தப்பட்டு, அதன் ஃபிலிம் ரோல்கள் கடத்தப்பட்டன. 'பாபா' படப் பெட்டி தியேட்டருக்கு வருவதற்கு முன்பாகவே பாட்டாளி மக்கள் கட்சியினர் அதைக் கைப்பற்றிக்கொண்டு போய் எரித்தார்கள். மிகப் பெரிய பதற்றத்தை உண்டாக்கும் ஒரு போராட்டத்தை அன்றைக்கு எதிர்கொண்டது தமிழ்நாடு.

வழக்கமாக, இப்படியான

கதம்... கதம்..!

ரஜினியின் ஜோடியாக மனீஷா கொய்ராலா நடித்த ஒரே படம் 'பாபா'. இது 2022-ல் டிஜிட்டலாக மேம்படுத்தப்பட்டு, சுமார் 30 நிமிடங்கள் குறைக்கப்பட்டு, புதிய பதிப்பாக வேறு ஒரு முடிவுடன் மீண்டும் வெளியிடப்பட்டது. மறுவெளியீட்டில் ரசிகர்களிடையே ஓரளவு நல்ல வரவேற்பைப் பெற்றது. இதில் ரஜினி பேசும் 'கதம்... கதம்...' என்ற வசனம் படத்தின் அடையாள வசனமாக மாறி, பின்னர் பொதுப் பயன்பாட்டிலும் பிரபலமானது.

போராட்டங்களின் எதிர் விளைவாக, சுமாரான படம்கூட மக்களிடம் நல்ல வரவேற்பு பெற்று ஓடிவிடும். ஆனால், 'பாபா' திரைப்படம் ரஜினி ரசிகர்களையும் கவரவில்லை; மற்ற ரசிகர்களுக்கும் பிடிக்கவில்லை. படம் வெளியான இரண்டாவது நாளே 'தோல்வி' என்பதாகச் சொல்லப்பட்டது.

'பாபா' படம் மூலமாகத் தன்னால் யாரும் நஷ்டம் அடைய வேண்டாம் என்று நினைத்த ரஜினி, விநியோகஸ்தர்கள் மற்றும் திரையரங்க உரிமையாளர்களுக்கான நஷ்ட ஈட்டுத் தொகையைக் கொடுத்தார். அந்த வகையில், மிகப் பெருந்தன்மையான ஒரு விஷயத்தைச் செய்தார், ரஜினி.

:.பா சிலின் இயக்கத்தில் மலையாளத்தில் 1993-ம் ஆண்டு வெளியான திரைப்படம் 'மணிசித்திரத்தாழு'. அந்தப் படத்தைத் தழுவி 2004-ம்

ஆண்டு இயக்குநர் பி.வாசு 'ஆப்தமித்ரா' என்ற தலைப்பில் கன்னடத்தில் எடுத்த படம் மிகப் பெரிய வெற்றிப் படமாக அமைந்தது. அதைத் தமிழுக்கு ஏற்றபடி மாற்றி, இயக்குநர் பி.வாசு இயக்கிய படம்தான் 'சந்திரமுகி'. இது சிவாஜி ஃபிலிம்ஸ் தயாரித்த 50-வது திரைப்படம் என்பது குறிப்பிடத்தக்கது.

ரஜினி, பிரபு, ஜோதிகா, வடிவேலு என்ற கூட்டணியில்



19 கோடி ரூபாய் செலவில் இந்தப் படம் தயாரிக்கப்பட்டது. அதுவரையிலான ரஜினி பட ரெக்கார்டுகள் அனைத்தையுமே அடித்து நொறுக்கி, 90 கோடி வரையில் வசூல் செய்து கொடுத்த மெகா ஹிட் படமாக ஆனது இது. சென்னை, சாந்தி தியேட்டரில் இந்தப் படம் ஒரு வருடம் ஓடிச் சாதனை படைத்தது.


ரஜினி, வடிவேலு காமெடி ரகளை ஒரு பக்கம் கலக்கியெடுக்க... இன்னொரு பக்கம் ஜோதிகா

நாகவல்லி..?!

'சந்திரமுகி' படத்துக்கு முதலில் வைத்திருந்த பெயர் 'நாகவல்லி'. அதைவிடச் 'சந்திரமுகி' என்ற பெயர் இன்னும் கம்பீரமாக இருக்கும் என்று பரிந்துரைத்தவர் ரஜினிதான். இதில் பேய்/ஆவி பிடித்தது போன்ற காட்சிகள் இருந்தாலும், அதன் பின்னணியில் இருக்கும் Dissociative Identity Disorder (DID) எனப்படும் மனநலக் கோளாறை அறிவியல்ரீதியாக விளக்கும் முயற்சி இடம்பெற்றது. இதுவே இந்தப் படத்தை மற்ற திகில் படங்களிலிருந்து வித்தியாசப்படுத்தியது. தனது ரசிகர்களுக்கு நல்ல முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில், இந்தப் படத்திலிருந்துதான் திரையில் புகைபிடிக்கும் காட்சிகளைத் தவிர்க்கத் தொடங்கினார், ரஜினி.

தனது உருட்டும் விழிகளாலேயே க்ளைமாக்ஸ் காட்சியை உச்சத்தில் தூக்கி நிறுத்திவிட்டார். தவிர, வேட்டையனாக வரும் ரஜினியின் 'லகலகலக' உச்சரிப்பும் ரசிகர்களைப் பெருமளவில் கவர்ந்துவிட்டது. வித்யாசாகரின் இசையில் பாடல்களும் இந்தப் படத்திற்கு மிகப் பெரிய பூஸ்ட்டாக அமைந்தன.

தமிழக அரசின் திரைப்பட விருதுகளில் சிறந்த படம், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த கலை இயக்குநர், சிறந்த நடன இயக்குநர் என ஐந்து விருதுகளை அள்ளியது இந்தப் படம்.


கொஞ்சம் காதல்...
கெஞ்சும் இதயம்!

ராணா ஸ்ரீ

5

எச்சரிக்கைத் தொடர்!

"செயற்கைக் கருத்தரிப்பு (IVF) முறையில் குழந்தைக்காக மருத்துவம் பார்க்கப் போய், அதற்கு முன்னர் சில பரிசோதனைகளுக்காக என்னிடம் வந்த அந்தப் பெண்ணுக்கு வயது 23தான்.." டாக்டர் சசிகலா தொடர்கிறார்...

" 'சின்ன வயசுதானே... ஏன் செயற்கைக் கருத்தரிப்பு?' என்று அந்தப் பெண்ணிடம் விசாரிக்க, மெதுவாகக் கொட்ட ஆரம்பித்தார். 'திருமணமாகி முதல் ஒரு சில வாரங்கள் சின்னச் சின்னச் சீண்டல்கள், தொடுதல்களுடன் இருந்தது. அவரால் சரியாகச் செயல்பட முடியவில்லை. அதன் பிறகு இருவருமே மௌனமாகிவிட்டோம். இயந்திரத்தனமாகிவிட்டது எங்கள் வாழ்க்கை. திருமணமாகி இரண்டு ஆண்டுகள் ஆகியும் அப்படியே மன அழுத்தத்திலும், வருத்தத்திலுமே தொடர்கிறது. இன்னும் முறையான தாம்பத்திய வாழ்க்கையே தொடங்கவில்லை.

ஆரம்பத்தில் அவருக்கும் எனக்கும் செட் ஆகலைபோல என்று நினைத்தேன். பிறகு, சண்டைகள் ஆரம்பித்தது. மனஅழுத்தம் அதிகரித்தது. இருவரும் தனித்தனியாக வாழ ஆரம்பித்தோம். இப்போது பரிசோதனையில், அவருக்கு ப்ரீடயாபட்டீஸ். எனக்கும் உடல் எடை அதிகரிப்பு. என்ன செய்வதென்றே தெரியவில்லை. மாதம் இரண்டு



லட்சம் ரூபாய் சம்பளம் வாங்குகிறேன். அவருக்கும் அதே அளவு வருமானம் வரும். கொஞ்சி விளையாட ஒரு குழந்தை இல்லாமல் பணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது? அதுதான், இருவருமாகப் பேசி செயற்கைக் கருத்தரிப்பு என்கிற முடிவுக்கு வந்தோம்' என்றார் அந்தப் பெண். இன்று நான் அடிக்கடி பார்க்கும் புதிய தலைமுறை நோய் இதுதான்” என்கிற டாக்டர் சசிகலா.

“இத்தனைக்கும் அந்தப் பெண்ணின் கணவனுக்கு வயது 26தான். ஆரம்பத்திலிருந்தே படிப்பு, ஓட்டம், வேலை வேலை என்று எப்போதும் மன அழுத்தத்திலேயே பதற்றமும், டார்கெட்டுமாய் ஓடி ஓடி, அவருக்கு எது ரிலாக்சேஷன், எப்படி வாழ வேண்டும் என்பதே தெரியாமல், மொத்தமாக உடம்பைக் கெடுத்துக்கொண்டு, இன்று சர்க்கரை நோயில் வந்து நிற்கிறார். திருமணத்திற்கு முன்பு ப்ரீடயாபட்டிக் இருந்தது. அதன் பிறகு வாழ்க்கையைக் கொஞ்சம் இனிமையாக வைத்திருந்தால் அதைச் சரிசெய்திருக்கலாம். ஷுகரோடு சேர்ந்து தாம்பத்தியத்தில் ஈடுபட முடியாமல் போனதும் அழுத்தமாகச் சேர்ந்துகொள்ள, இப்போது வாழ்க்கையை விட்டுவிட்டு நிற்கிறார்கள். நாம் சர்க்கரை நோயை வெறும் இனிப்புடன் மட்டுமே தொடர்புபடுத்துகிறோம். ஆனால், வாழ்க்கையின் இனிமை குறைவதற்கு அதுவும் ஒரு முக்கியக் காரணம் என்பதை உணர்வது அவசியம். சர்க்கரை நோய் வந்தால், முதலில் பாதிக்கப்படுவது கண், சிறுநீரகம், இதயம் மட்டுமல்ல... பலருக்கு தாம்பத்திய வாழ்க்கையும் சத்தமில்லாமல் பாதிக்கப்படுகிறது.



Dr.சசிகலா

ரத்தத்தில் சர்க்கரை அளவு நீண்ட காலம் அதிகமாக இருந்தால், ரத்தக் குழாய்களும் நரம்புகளும் பாதிக்கப்படுகின்றன. இதன் விளைவாக, ஆண்களுக்கு விறைப்புத்தன்மைக் குறைபாடு (Erectile Dysfunction), பாலுணர்வு குறைவு, விந்தணு தரம் குறைதல் போன்ற பிரச்னைகள் ஏற்படலாம். பெண்களுக்கும் பாதிப்பு அதிகம். உடலுறவின்போது வலி, பாலுணர்வு குறைவு, ஹார்மோன் மாற்றங்கள் போன்றவை வாழ்க்கைத் தரத்தையே பாதிக்கக்கூடும்.

மன அழுத்தம் சர்க்கரை நோய்க்கு வழிவகுக்கும்; சர்க்கரை நோய் மீண்டும் தாம்பத்திய

வாழ்க்கையைப் பாதிக்கும். இது ஒரு 'விஷச் சுழற்சி' (Vicious Cycle)" என்கிறார் டாக்டர் சசிகலா.

"நல்ல தூக்கம், உடற்பயிற்சி, சரியான உணவுமுறை, மனஅழுத்தக் கட்டுப்பாடு, கணவன்-மனைவிக்குள் உரையாடல், அன்பு, நெருக்கம் இவை அனைத்தும் சிகிச்சையின் ஒரு பகுதிதான். பல தம்பதிகள் தங்களின் பாலியல் பிரச்னைகளை வெட்கம் காரணமாக மருத்துவரிடம் சொல்லவே மாட்டார்கள். ஆனால், சில நேரங்களில் அதுவும் சர்க்கரை நோயின் ஆரம்ப அறிகுறியாகவே இருக்கலாம். படுக்கையறையில் தொடங்கும் மாற்றத்தைப் பலர் மருத்துவமனைக்கு வரும் வரை கவனிப்பதே இல்லை" என்று எச்சரிக்கிறார், டாக்டர் சசிகலா.


Dr.சொக்கலிங்கம்

தமிழகத்தின் பிரபல இதய நல மருத்துவர், பேராசிரியர் டாக்டர் வி.சொக்கலிங்கம். அவர் சொல்கிறார்...

"நல்ல உணர்வுகள், இதயத்திற்கு நலம் தரும். நூறு ஆண்டுகள் ஆரோக்கியமாக இருக்க, 'டோஸ்' என்பது முக்கியம். DOSE (Dopamine, Oxytocin, Serotonin, Endorphins) என்பது நமது மகிழ்ச்சி, மனநிலை, உந்துதல் மற்றும் மனித உறவுகளை மேம்படுத்தும் ஹேப்பி ஹார்மோன்ஸ். அதே போல, ஒரு மனிதனுக்கு தினசரி மிக முக்கியமாகத் தேவை-மெலட்டோனின். இதன் வேலை, மனிதனுக்குத் தேவையான உறக்கத்தை வழங்குவது. முதலில் சொன்ன 'ஹேப்பி ஹார்மோன்ஸ்' நார்மலாக ஒரு மனிதனுக்குச் சுரந்தால்தான் தூக்கமே ஒழுங்காக வரும். சீரான உணவு, உடற்பயிற்சி, சூரிய ஒளி, தியானம், சிரிப்பு, சந்தோஷம் மற்றும் அன்பான உறவுகள் ஆகியவை இந்த ஹேப்பி ஹார்மோன்ஸ் சுரக்க அல்லது தேவையான அளவு கிடைக்க உதவுகின்றன. இதையெல்லாம்விட ஆரோக்கியமான தாம்பத்தியத்தில் இந்த ஹார்மோன்ஸ்கள் கொட்டிக்கிடக்கின்றன.



DOSE ஹார்மோன்களுக்கும் தாம்பத்தியத்திற்கும் இதயத்திற்கும் என்ன சம்பந்தம்? ஹார்மோன்கள் சுரக்கும்போது இதயத்தின் சந்தோஷமான 'லப்டப்' செயல்பாடுகள் என்ன?

அது அடுத்த வாரம்

ஒடிஸி

பாஸ்கரன் கிருஷ்ணமூர்த்தி

தளபதி ஒடிசியஸ் மேற்கொண்ட பயணம்தான் 'ஒடிஸி'! ஏற்கெனவே பலரும் அறிந்த, கிரேக்க புராண வரலாற்றுப் புனைவு.

முதலில், இது ஒரு 'ஃபேன்டஸி'யா, அல்லது, த்ரில்லர் படமா என்பதிலேயே தெளிவு இல்லை இயக்குநர் நோலனுக்கு என்பது தெரிகிறது.

எதிரியின் அரண்மனைக்குள் நுழைவதற்காக, ஒரு பிரமாண்ட மரக்குதிரையை நிர்மாணித்து, அதற்குள் அத்தனை வீரர்களும் ஒளிந்துகொள்கிறார்கள். இந்த சுவாரஸ்ய கற்பனை படமாக்கப்பட்ட விதம், சொல்லும் தரத்தில் இல்லை. இதை இன்னமும் அழுத்தமாய், இன்னமும் விறுவிறுப்பாய் அமைத்திருக்கலாம். ஒடிசியஸ் கதை அறியாத பாமர தமிழ் ரசிகருக்கு, 'என்ன நடக்கிறது..?' என்பதைப் புரிந்துகொள்ளும் முன்பாகவே எல்லாம் நடந்து முடிந்துவிடுகிறது!



ஒற்றைக் கண் அசுர மனிதன், நடிகர்களை அச்சுறுத்தும் அளவுக்கு ரசிகர்களை அச்சுறுத்தவில்லை. அதுவும், சலிக்கும் அளவுக் குப் புராணப் படங்களைப் பார்த்துப் பார்த்துப் பழகிப்போன இந்திய ரசிகனுக்கு இதெல்லாம் ஜுஜுபி!

சூனியக்காரி, தனது வீட்டுக்கு வந்த விருந்தினர்களை விலங்கு களாய் மாற்றும் காட்சி... சத்தியமாக ரசிக்கும்படி இல்லை. அந்தக் காலத்திலேயே நமது விட்டலாச்சார்யா பல படங்களில் கலக்கிய இந்த 'வித்தை'யில் நோலன் வழுக்கிவிட்டார்.

கதாநாயகப் படையினர் பயணிக்கும் 'கப்பல்'... என்ன சொல்ல? வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தில் ஒரு வசனம் வரும்... 'இந்த மண் கோட்டையை வைத்துக்கொண்டா, மனக்கோட்டை கட்டுகிறான்..?' என்று. அப்படிப் பரிதாபமாக இருக்கிறது கப்பல்.

நங்கூரம் பாய்ச்சுவது, கடற் கொள்ளையர் தாக்குதல்களை எதிர்கொள்வது, கடல் சீற்றத்தைச் சமாளிப்பது, சக வீரர்களின் பாதுகாப்பில் சமரசம் செய்துகொள்ள மறுப்பது... இதையெல்லாம் எம்ஜிஆரின் 'ஆயிரத்தில் ஒருவன்' படம் இன்னும் தெளிவாகவே, இன்னும் அழகாகவே காட்டியது.

வசனம் சற்றும் ஈர்க்கவில்லை; இசை சில காட்சிகளில் நேர்த்தி; சில காட்சிகளில் இரைச்சல்! மொத்தத்தில்...

'தி ஒடிஸி' – நடுக்கடலில் ஒரு மண்குதிரை!

'பொற்கிழி அல்ல அரசுப்பணி' தலையங்க வரிகளை எழுதியவர், 'யார் செய்தாலும் குற்றம் குற்றமே' எனக் கூறும் நவீன நக்கீரரோ என ஒரு கணம் திகைத்துப் போனேன்.

- கண்ணன்.எஸ்., நெய்வேலி-7.

'இதயம் முரளி' விமர்சனத்தில் குமுதத்துக்கே உரிய முத்தாய்ப்புக் குசும்பு வரிகளை ரசித்தேன்.

- மீனா முருகேசன், தஞ்சாவூர்-1.

'கேப் வெர்டே' நாட்டு மக்கள் பல நாடுகளுக்குப் புலம் பெயர்ந்திருந்தாலும், சில அழகுகளையும் விட்டுத்தான் சென்றுள்ளார்கள் என்பது கண்கூடு!

- இலக்சித், சென்னை-91.

மன்னிப்பு, பழிவாங்குவது இரண்டுக்கும் உள்ள வேறுபாடு குறித்து வாசகர் கேட்ட கேள்விக்கு, திருக்குறளின் எடுத்துக் காட்டோடும், உளவியல் ரீதியாகவும் விளக்கிய விதம் மிக மிக அருமை. அரசு பதில் சிம்ப்ளி சூப்பர்ப்!

- பானு பெரியதம்பி, சேலம்-30.

வி.எஸ்.பாபுவை உசுப்பிவிட்டது போதும் கரப்பான் பூச்சியாரே... த.வெ.க. அரசில் அவருக்கு ஒரு வாரியத் தலைவர் பதவிகூடவா இல்லாம போயிருச்சு?!

- அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி-21.

தி.மு.க-வின் GenZ படைக்குச் சில டிப்ஸ் - ஓவர் நக்கல்தான் என்றாலும்... சொல்லமுடியாது; வருங்காலத்தில் இது நடக்கவும் செய்யலாம்... யார் கண்டது?!

- ஆ.மாணிக்கம், பொள்ளாச்சி-2.

'விஜய் வியூகம்' கட்டுரை ரியலி சூப்பர்ப்! பலமான இரண்டு எதிர்க்கட்சி களில் தி.மு.க. தனி மரமாகவும், அ.தி.மு.க. தலைமை தனி ஆளாகவும் இருப்பது விஜய்க்கு + பாயின்ட்!

- ஆர்.வித்யா, பள்ளிக்கரணை-100.

துணிச்சலோடும் நடுநிலையோடும் தனது கருத்துகளை முன்வைத்த அரசியல் விமர்சகர் ஞாநியின் மகனும், பிரபல பாலிவுட் ஒளிப்பதிவாளருமான மனுஷ் நந்தனின் பேட்டியில், ஒளிப்பதிவு மேல் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாடு தெரிந்தது.

- அ.சுகுமார், காட்பாடி-7.

'இசையான பின்னும், குரலான பின்னும், காட்சியான பின்னும்



உஷார் பார்ட்டி!

கவியரசு கண்ணதாசனின் பாடல்கள் தன் இதயத் தூய்மையை இழக்கவில்லை' என்னும் வரிகளில் கவியரசுவை உன்னத பீடத்தில் ஏற்றி வைத்த கபிலன்வைரமுத்துவுக்கு ஒரு ராயல் சல்யூட்!

- தி.ரூபலக்ஷ்மி, கோவை-6.

திவ்யபாரதியைப் பற்றிய வர்ணனை களில் விளையாடியவர், 'டெரர்' பூ பார்வதி பற்றி வர்ணிக்கையில் அடக்கி வாசித்திருக் கிறார். உஷார் பார்ட்டிதான் சுனில்!

- மல்லிகா மணாளன், மதுரை-20.

பிரசுரமாகும் ஒவ்வொரு கடிதத்துக்கும் ரூ.50 பரிசு.

மிஸ்டர் கூடுவாஞ்சேரி

காலை எழுந்தவுடன் காபி, டம்ளர்களைக் கழுவிக் கவுத்தியவுடன் இருக்கின்ற எம்.எல்.ஏ-க்களின் தலைகளை எண்ணுவது... இப்படித்தான் எடப்பாடி பழனிசாமியின் இரவு முடிந்து, பகல் பிறக்கிறதாம்! அதுக்கப்புறம் ஒவ்வொரு பத்து நிமிஷத்துக்கும் மறுபடியும் தலைகளை எண்ணி, எண்ணெய் தேய்ப்பது தான் எடப்பாடியாரின் தலையாய வேலையாம்! ஆக, எடப்பாடி படு பிஸி. மிஸ்டர் கூடுவாஞ் சேரி படு ஃபாஸ்ட்! ஓடிப் போய் எடப்பாடியைச் சந்தித்தார்...

இதுக்கெல்லாம் 24 மணி நேரம் போதாதே... அதான் ஸ்டாலின் கிட்ட ஆதரவு கேட்டீங்களா?



"நான் கேட்கல, அவங்களாத்தான் வந்தாங்க. ஆனா, என் வீட்டம்மாதான், 'நீங்க ஆட்சி அமைக்க ஆதரவு தர, அவங்க என்ன அவ்ளோ நல்லவங்களா..? பத்து லட்சம் கோடிக் கடனை உங்க தலையில கட்டிட்டு, ஃபாரின்ல போய் செட்டிலாயிரலாம்னு பாக்குறாங்க. நமக்கு ஆட்சியும் வேணாம், அவஸ்தையும் வேணாம்... தொழுவத்துல நிக்கிற மாடு நின்னா போதும்'னு என்னையக் கட்டிப் போட்டுட்டாங்க. வீட்டம்மா பேச்சை மீறி வெறும் வாயைக்கூட நான் மெல்லுறதில்ல..!"


நீங்க ஏதோ உங்க பையன் பேச்சைத்தான் கேக்குறீங்கன்னு சி.வி.சண்முகம் சொல்றாரே?

"இதெல்லாம் ரொம்பத் தப்புங்க. நான் என் மனைவி பேச்சைத் தவிர



எடப்பாடியுடன் சந்திப்பு!

ஒரு கம்ப்ளீட் கப் ரிப்போர்ட்!



வேற யார் பேச்சையும் கேட்க மாட்டேன். இதுதான் நிஜம்!"

ஒவ்வொருத்தரா உங்களுக்கு டாட்டா காமிச்சிட்டு பனையூர் பக்கம் போறாங்களே?

"'அண்ணே... செந்தில் பாலாஜி மாதிரி எங்களால ஓடவும் முடியாது, ஒளியவும் முடியாது! அப்புறம் பேன்ட்ல உச்சா போய் அசிங்கப்படவும் முடியாது. தம்பி விஜய் புதுசா ஒரு வாஷிங் மெஷின் வாங்கி இருக்காப்ல! பா.ஜ.க. மாடல். அங்க போய் நாங்க புதுசா வர்றோம்'னு சொல்லிட்டுதான் போறாங்க..."

அஞ்சு சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்துட்டாங்களே..?

"மரகதம் குமாரவேலுக்கு நீல கலர்ல மயில் போட்ட பட்டுப்புடவை வாங்கணும்னு ரொம்ப நாளா ஆசை. இந்த விஷயம் உளவுத்துறை மூலம் ஆதவ் அர்ஜுனா வுக்குத் தெரிஞ்சுது. புடவையை வாங்கித் தந்து ராஜினாமா கடிதம் வாங்கிட்டாரு. மீதி நாலு பேருக்கும் கிரெடிட் கார்ட் பிரச்னை. அதையும் ஆதவ் செட்டில் பண்ணார்; அவங்க ராஜினாமா பண்ணிட்டாங்க. இதான் விஷயம்."

உங்களோட அடுத்தகட்ட நடவடிக்கை?

"அண்ணா தி.மு.க.வை, 'அண்ணா திராவிட வெற்றி முன்னேற்றக் கழகம்'னு பெயர் மாற்றம் செய்யப் போறோம். விஜய், எம்.ஜி.ஆர்., அண்ணா, பெரியார் படம் எல்லாம் பயன்படுத்துறார். இனிமே நாங்களும் பதிலுக்கு விஜய் படத்தைப் பயன்படுத்தப் போறோம்!"

உங்களைச் சந்திக்க முதல்வர் விஜய் அனுமதி கேட்டபோது, வரவேணாம்னு சொன்னீங்களாமே, உண்மையா?



"உண்மைதான். என் மனைவி தனுஷ் ரசிகர், என் மகன் சூர்யா ரசிகர், நான் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ரசிகர். நாங்கள் யாரும் விஜய் ரசிகரா இல்லாத போது எப்படி அவரைப் பார்க்க முடியும்? அவருடன் எப்படி செல்ஃபி எடுத் துக்கொள்ள முடியும்? அதனால்தான் வர வேண்டாம்னு சொன்னேன்."

குமுதம் பக்தி ஸ்பெஷல் வழங்கும்

Title Partner

GRT
G.R.Thanga Maligai
JEWELLERS
Since 1964

திருவிளக்கு பூஜை



தோஷங்கள் நீங்கிட, மாங்கல்ய பாக்யம் கைக்கூட, மழலைப் பேறு பெற்றிட, லட்சுமி கடாட்சம், மகிழ்ச்சி என்றென்றும் நிலைத்திட, நாட்டிலும் வீட்டிலும் நிம்மதி, சந்தோஷம், உற்சாகம் நிறைந்திட...

இடம்

ஸ்ரீ வலம்புரி சக்திவிநாயகர் திருக்கோவில்

ஜெகநாதபுரம் காலனி,
ஈரோடு – 638 009.

நாள் : **24.7.2026**
வெள்ளிக்கிழமை
மாலை 6.00 மணி முதல்

முன்பதிவு அவசியம்!

நீங்கள் எடுத்துவர வேண்டியது - குத்துவிளக்கு, சூடத்தட்டு, பஞ்சபாத்திரம், தேங்காய், வாழைப்பழம், மணி மட்டும். பூஜைக்கு தேவையான அனைத்து மங்களப் பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

முன்பதிவு செய்யுமிடம்

ஜிஆர்டி ஜுவல்லர்ஸ்

117, RKV சாலை, NR.காமராஜ்
மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி அருகில்,
கருங்கல்பாளையம்,
ஈரோடு - 638 003.

PH: 0424 - 222 3515

ஸ்ரீ வலம்புரி சக்திவிநாயகர் திருக்கோவில்

ஜெகநாதபுரம் காலனி,
ஈரோடு - 638 009.

ஆலய தொடர்பு எண்: **94869 75782**

Associate Sponsor
GOPURAM
TURMERIC POWDER • KUMKUM

அனுமதி இலவசம்

ETVPERD003/KUM

குமுதம் குத்துவிளக்கு பூஜை விபரங்கள் அறிய: **9500721514, 9940135394**



மதி : 80
மலர் : 48
29.7.2026

தேவை இன்னும் சில திடீர் சோதனைகள்!

சென்னை, சைதாப்பேட்டையில் புகழ்பெற்ற சமூக நீதிக் காவலர் எம்.சி.ராஜா பெயரில் இயங்கும் ஆதிதிராவிட மாணவர் விடுதியில், பல்வேறு கல்லூரிகளில் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்கியுள்ளார்கள்.

கடந்த ஆட்சியின்போது பல கோடி ரூபாய் செலவில் ஃபைவ் ஸ்டார் ஓட்டல் போலப் புதுப்பிக்கப்பட்ட இந்த விடுதி, 'ஒய்யாரக் கொண்டையில் தாழம்பூவாம், உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்' என்ற கதையாகத்தான் செயல்படுகிறது என்பது, தமிழக முதல்வர் ஜோசப் விஜய் நடத்திய திடீர் சோதனையில் அம்பலமாகியிருக்கிறது.

'உணவில் புழு, வண்டு இருந்தது. அதிகாரிகளிடம் புகார் செய்தோம். அடுத்த சில நாட்களுக்குத் தரமான உணவு வழங்கப்பட்டது. பின்னர் வழக்கம்போல தரம் மோசமாகி விட்டது. போட்டித் தேர்வுக்குப் படிக்கச் செல்லும் மாணவர்கள் தாமதமாக வந்தால் உள்ளே அனுமதிக்காமல் காவலர்கள் தடுக்கிறார்கள். இதனால் சில மாணவர்கள் வேறு வழியின்றிப் பூங்காக்களில் படுத்து உறங்கும் நிலை இருக்கிறது...'

இவை அந்த மாணவர்கள் வெளியிட்ட குறைகளில் சில! அவற்றைத் தீர்க்க அங்கேயே சில உத்தரவுகளைப் பிறப்பித்த முதல்வர், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும் பிறகு உறுதி செய்துகொள்வார் என நம்பலாம்.

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது, காவல் நிலையங்களுக்குள் திடீரென நுழைந்து, எல்லாம் முறையாகத்தான் நடக்கிறதா என ஆய்வு செய்வது உண்டு. அண்மைக்காலமாக காவல் நிலையங்களிலும், சிறைச்சாலைகளிலும் தொடரும் விசாரணை மரணங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால், முதல்வர் ஜோசப் விஜய்யும் அப்படி ஆய்வு நடத்தலாம். கூடவே, காவலர்களின் பணியில் உள்ள சுமைகளையும் சிக்கல்களையும் கேட்டறிந்து களைந்தால், 'திடீர் சோதனை'க்கு அது மேலும் அர்த்தம் சேர்ப்பதாகவும் அமையும்.

விடுதி மாணவர்களின் குறைகளைப் பொறுமையாகக் கேட்டறிந்த முதல்வர், இதுபோன்ற திடீர் சோதனைகளுக்குத் தொடர்ந்து நேரம் ஒதுக்கினால், தவறு செய்ய நினைப்பவர்களுக்கு இயல்பாகவே ஓர் அச்சம் வரும்; மக்களுக்கும் ஒரு நம்பிக்கை பிறக்கும்!

குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட் சார்பாக, குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட், புதிய எண். 306, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை- 600 010ல் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. மொபைல் எண்கள்: சந்தா பிரிவு - +91 98409 09525, விளம்பர பிரிவு - +91 73054 35698, ஆசிரியர் குழு வாட்ஸ்அப் சாட் : +91 89259 58684 அச்சிட்டு வெளியிடுபவர், குமுமத் தலைவர் மற்றும் பதிப்பாளர்: பா. வரதராசன். ஆசிரியர்: கே. அசோகன். குமுதம் குழும இதழ்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்படும் அனைத்து வழக்குகளும் சென்னை நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

Printed & Published by Mr. P.Varadarajan, Chairman of group and Publisher, on behalf of M/s. Kumudam Publications Private Limited and Printed at and Published from M/s. Kumudam Publications Private Limited, New No.306, Purasawalkam High Road, Chennai - 600 010. Editor : Mr. K. Asokan. All cases related to Kumudam Group of Publications are subject to jurisdiction of Chennai Courts only.


30.7.2026
பக்தி
காமதேனு காசு





Kum: 29-7-2026

Posted at Egmore RMS Patrika Channel, Chennai - 08

KUMUDAM Regd. No. TN/CCN/366/2024-2026 & WPP No. TN/PMG(CCR)/WPP 383/24-26 Registered with the Registrar of Newspapers for India under No. 1126/1957 (Registered as a Newspapers in Srilanka Regd. No. QJ105/82). அட்டைப்படத்தில் குறிப்பிட்டிருக்கும் விலை இந்தியாவிற்கு மட்டுமே பொருந்தும். அயல்நாடுகளில் இந்த விலை பொருந்தாது Day of Publishing : Every Wednesday.